# உதயன்

வானிலை

கூ.வெ. 31 °C
கு.வெ. 26 °C
மேகமூட்டம்,
மழை

சுடர் 30 | கதிர் 164 | வள்ளுவர் ஆண்டு 2046 | சித்திரை 27, ஞாயிற்றுக்கிழமை 10.05.2015


# சீனாவை கண்காணிக்க இந்திய ராடர் இலங்கையில்

## அதிரடித் தகவல் வெளியிட்டார் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர்



சென்னை, மே 10

சீனாவைக் கண்காணிப்பதற்காக இலங்கையில், இந்திய அரசினால் கடலோரக் கண்காணிப்பு ராடர்கள் பொருத்தப்பட்டுள்ளன. இலங்கையின் வேண்டுகோளுக்கு அமையவே இவை பொருத்தப்பட்டுள்ளதாக இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் மனோகர் பரிக்கர் தெரிவித்துள்ளார்.

சீனா தனது கடலடி ஆற்றலைத் திடீரெனக் கட்டியெழுப்பி வரும் நிலையில், இந்தியாவின் நீர் மூழ்கிப் படைப் பிரிவு வலுவாக இல்லை என்று இந்திய நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுக்கு, எழுத்து மூலம் அளித்த பதில் ஒன்றிலேயே இந்தத் தகவலை அவர் வெளியிட்டுள்ளார்.

தேசிய பாதுகாப்பில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய எல்லா விவகாரங்களிலும் இந்திய அரசு நிலையான கண்காணிப்பை மேற்கொண்டுள்ளது. பக்.25

# தமிழர்களை வெற்றி கொள்வது எப்படி?

## பலாலியில் படையினருக்கு பாடம் படிப்பித்த ருவான்

யாழ்ப்பாணம், மே 10

இலங்கையில் 30 ஆண்டுகளாக நீடித்த போருக்கு, மொழிப் பிரச்சினை முக்கியமானதொரு காரணம் என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

பலாலிப் படைத்தளத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மொழிப் பயிற்சி பெற்ற 320 படையினருக்கு, சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வில், பக்.25

# வலி. வடக்கில் மாதிரிக் கிராமம்

## புலம்பெயர் தமிழர் நிதிப் பங்களிப்புடன்

யாழ்ப்பாணம், மே 10

வலி.வடக்கில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் புலம்பெயர் தமிழ் மக்களின் நிதிப் பங்களிப்புடன் மாதிரிக் கிராமம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதில் 100 வீடுகள் புதிதாக நிர்மாணித்துக் கொடுக்கப்படவுள்ளதாக, வலி.வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.

வலி.வடக்கில் மக்கள் மீள்குடியமர்வதற்கு அண்மையில் ஒரு தொகுதி நிலப் பரப்பு விடுவிக்கப்பட்டது. இருப்பினும், விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மக்களின் மீள்குடியமர்வுக்குரிய அடிப்படை வசதிகள் எவையும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. இதனால் பக்.25

# வில்பத்து சரணாலய நிலை; ஆராய்ந்தது விசேட குழு



மன்னார், மே 10

வில்பத்து சரணாலயத்தில் காடுகள் அழிக்கப்பட்டு அங்கு நிர்மாணப்பணிகள் முன்னெடுக்கப்படு தாக கூறப்படுவது குறித்து விசாரணைகளை நடத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சுற்றாடல் அமைச்சின் செயலாளருக்குப் பணித்துள்ளார். இதன் அடிப்படையில் நேற்றுச் சனிக்கிழமை மக்கள் விடுதலை முன்னணியின் மேல் மாகாண சபை உறுப்பினர் லால் காந்த, சுற்றாடல் அமைச்சின் அதிகாரிகள் மற்றும் அரச திணைக்கள அதிகாரிகள்வில்பத்துசரணாலயம்அமைந்துள்ள பகுதியில் காடுகள் அழிக்கப்பட்டுக் குடியேற்றங்கள் இடம் பெற்றுள்ளதா? என்று நேரில் சென்று பார்வையிட்டனர்.

இதேவேளை, இப்பகுதிக்கு வந்த அமைச்சர் ரிசாத் பதியுதீன், மன்னார் மாவட்ட செயலாளர் எம். வை.எஸ்.தேசப்பிரிய ஆகியோர் குறித்த ஆய்வுக் குழுவிடம் கலந்துரையாடினர். இவர்களுடன் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரிப்கான் பதியுதீன், சிலாவத்து றைப் பிரதேச செயலாளர் கேதீஸ் உள்ளிட்ட பிரமுகர்கள் உடனிருந்தனர். (த-56)

# ஓய்வு பெற்ற அதிபர் பஸ் மோதியதில் சாவு

## *பருத்தித்துறையில் சம்பவம்*

வடமராட்சி, மே 10

மோட்டார் சைக்கிளில் பயணித்த வயோதிபரை பருத்தித்துறை, முதலாம் கட்டைச் சந்தியில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்குச் சொந்தமான பஸ் மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

வடமராட்சி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் ஓய்வுபெற்ற முன்னாள் பிரதி அதிபர் கனகசபாபதி அருளானந்தம் (வயது -61) என்பவரே உயிரிழந்தவராவார்.

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வேகமாகச் சென்றுகொண்டிருந்த குறித்த பஸ், முன்னால் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த ஓய்வுபெற்ற பிரதி அதிபரை மோதியுள்ளது.

அவர் பருத்தித்துறை, முதலாம் கட்டைச் சந்தியில் இருந்து தம்பசிட்டி வீதிக்குத் திரும்பியவேளை பின்னால் வந்த குறித்த பஸ் மோதியுள்ளது. தலையில் பஸ் சில்லு ஏறி அவர் சம்பவ பக்.25

# இனப்படுகொலைக்கு நீதி கோரி தமிழகத்தில் இன்று கவனயீர்ப்பு

சென்னை, மே 10

இலங்கையின் இனப்படுகொலைக்கு நீதி கோரி, தமிழகத்தில் இன்று மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. தமிழகத்திலுள்ள, இலங்கை வர்த்தக நிறுவனங்களை மூடுமாறும் இதன்போது வலியுறுத்தி, அந்த நிறுவனங்களின் முன்பாக இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக தமிழக மாணவர் மற்றும் இளைஞர் இயக்கங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கையின் இறுதிப் போரில் கடந்த 2009 ஆம் ஆண்டு, மக்கள் கொத்துக் கொத்தாக கொல்லப்பட்ட நாள்கள் இவை. இந்த பக்.25

# தனியார் பஸ் பிரச்சினை தீர்க்க உரிய நடவடிக்கை

## கைவிடப்பட்டது புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், மே 10

வடக்கு மாகாணத்தில் தூர சேவைகளை மேற்கொள்ளும் பஸ் சங்கங்களால் நாளை திங்கட்கிழமை முன்னெடுக்கப்படவிருந்த பணிப் புறக்கணிப்புப் போராட்டம், வடக்கு மாகாண சபையின் நடவடிக்கையை அடுத்து கைவிடப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட பக்.25

# மேடைக்கு விரைவில் வருவாராம் மஹிந்தர்



கொழும்பு, மே 10

சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மேடைக்கு விரைவில் வரவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதம வேட்பாளராக அறிவிக்கும், மஹிந்த ஆதரவுக்கூட்டம் குருநாகலில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்துக்கு அனுப்பி வைத்துள்ள தனது உரையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் பங்கெடுக்கக் கூடாது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு, கட்சி தலைமைப் பீடத்தினால் தடைபிறப்பிக்கப் பட்டிருந்தது. அதனையும் மீறி வழமை போன்று 55 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தாலும், மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான கூட்டத்துக்குச் செல்லும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்துச் பக்.25





SDBL

சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி

*தேசத்தின் முன்னோடி*

சணச அபிவிருத்தி வங்கி இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால், விஷேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

Fitch Rating BB+ (stable), RAM Rating BBB & P3, Reg. No: PB62PQ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அடக்குமுறைகளுக்கு எதிராக ஜெனிவா செல்கின்றார் பந்துல

கொழும்பு, மே 10

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகளுக்கு எதிராக ஜெனிவாவிலுள்ள நாடாளுமன்ற ஒன்றியத்திடம் முறைப்பாடொன்றைச் செய்யவுள்ளதாக முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரச பொலிஸ் என்ற எண்ணக்கருவின் கீழ், அடுத்த இரண்டு வாரங்களுக்குள் இம் முறைப்பாட்டை முன்வைக்கவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

ரணில் விக்ரமசிங்கவின் பொலிஸ் அரசு தொடர்பில் சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்துவது மிக முக்கியமானதெனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மக்கள் பிரதிநிதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கிலேயே குறித்த முறைப்பாட்டை செய்யவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மக்களின் பிரதிநிதிகளான எங்களுக்குச் சர்வதேசப் பாதுகாப்பு இருக்கின்றது என்பதை இந்த பொலிஸ் அரசுக்கு தெளிவுபடுத்தவேண்டும் எனவும் அவர் மேலும் கூறினார். (த)

## முன்னாள் புலி உறுப்பினர் கைது

மட்டக்களப்பு, மே 10

தமிழீழ விடுதலைப் புலி கள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினரான நாகமணி ஜெகதீஸ்வரன் (வயது –34) என்பவரை நேற்றுச் சனிக்கிழமை கைது செய்துள்ளதாகக் காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

2003ஆம் ஆண்டு ரெலோ இயக்கத்தைச் சேர்ந்த இரண்டு அங்கத்தவர்களை மட்டக்களப்பு ஆரையம்பதியில் வைத்துத் துப்பாக்கியால் சுட்டுக் கைக்குண்டுகளையும் வீசி ஆள்கொலை புரிந்தார், எட்டுப் பேரைக் காயப்படுத்தினார் என்ற முறைப்பாட்டின் பிரகாரமே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

மகிழடித்தீவு கொக்கட்டிச்சோலையில் திருமணம் முடித்த நிலையில் மத்திய கிழக்கு நாட்டுக்கு சென்றுவிட்டுத் திரும்பிவந்து கொக்கட்டிச்சோலையில் தலைமறைவாக வசித்து வந்தபோதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை, நீதிமன்றில் முன்னிறுத்த நடவடிக்கைகள் எடுத்துள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், அவரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகவும் கூறினர். (த)

## சஜின்வாஸ் விசாரணைக்கு அழைப்பு

கொழும்பு, மே 10

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தனவை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாளை திங்கட்கிழமை வாக்குமூலம் ஒன்று பெற்றுக்கொள்வதற்காக இவ்வாறு தனக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக சஜின் வாஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தின் சில வாகனங்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்கு அழைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (த)

# ஆட்சி மாற்றத்துக்கு அமெரிக்கா இலஞ்சம்

### மஹிந்த குற்றச்சாட்டு



கொழும்பு, மே 10

அமெரிக்கா 3 ஆயிரத்து 500 மடிக் கணினிகளை இளைஞர்களுக்கு வழங்கி இலங்கையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியது என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த மடிக் கணினிகள் அமெரிக்கத் தூதரகத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக கணினிப் பயிற்சி நெறிகளும் வழங்கப்பட்டுள்ளன.

நாட்டில் இயங்கும் இணையத் தளங்களைக் கட்டுப்படுத்தும் பிரதான சக்தியாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர செயற்படுகிறார். இந்த இணையத்தளங்கள் தேர்தல் காலத்திலும் அதற்குப் பின்னரும் திட்மிட்ட முறையில் இயங்கியுள்ளன.

தேர்தல் காலத்தில் இணையத் தளங்களுக்கு விடுக்கப்பட்ட சவால்களை முறியடிக்க திறமையான இணையக்குழு ஒன்று எம்மிடம் இருக்கவில்லை–என்றார். (த)

## கடலுணவு ஏற்றுமதியாளர்களை சந்தித்தார் அமைச்சர் டெனீஸ்வரன்



முல்லைத்தீவு, மே 10

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கடலுணவு ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் விசேட அழைப்பின் பேரில் அவர்களைச் சந்தித்துள்ளார் வட மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனிஸ்வரன்.

கடந்த வெள்ளிக்கிழமை இந்தச் சந்திப்பு முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழிலாளர் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதுடன் அங்குள்ள பனிக்கட்டி உற்பத்தி நிலையத்தையும் பார்வையிட்டார். (த–10)

## ஐக்கிய தேசியக் கட்சிக்கு பாயவுள்ள எம்.பிக்கள்

கொழும்பு, மே 10

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் குருநாகல், புத்தளம், கம்பஹா, மாத்தறை, இரத்தினபுரி, மற்றும் திகாமடுல்ல ஆகிய மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையப் போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் பட்டியலில் இடம்பிடிக்கும் வகையிலேயே இவர்கள் அந்தக் கட்சியில் இணையப் போவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பலத்தை அதிகரிக்கும் வகையில் தாம் அவருடன் இணையப் போவதாக எதிர்க்கட்சியின் சில உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில் ஐக்கிய தேசியக் கட்சியினரும் குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருகின்றனர். (த)

# ஊடகவியலாளர் பாதுகாப்பு இலங்கையில் படுமோசம்

கொழும்பு, மே 10

ஊடவியலாளர்களைப்பாதுகாக்கும் கடப்பாட்டில் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் மோசமான நிலையில் உள்ளன என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சர்வதேச ஊடகவியலாளர்களுக்கான சம்மேளனம் இந்தக் குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளது. 2014–2015 ஆம் ஆண்டுக்கான சம்மேளனத்தின் அறிக்கையில் இந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஊடகவியலாளர்களின் இறைமை மற்றும் அவர்கள் கடத்தல், தாக்குதல், கொலை செய்யப்படுதல் என்பவற்றில் இருந்து காப்பாற்றப்படுவதற்கான உறுதிப்பாட்டுக்கான முன்னெடுப்புக்கள் அவசியம் என்று அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதற்காக ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல்களை நடத்துகின்றவர்கள் சட்டத்துக்கு முன்னிறுத்தப்படவேண்டும் என்றும் அந்த சம்மேளனம் கேட்டுள்ளது.

சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனம் சர்வதேசத்தில் 100 நாடுகளில் 6லட்சம் உறுப்பினர்களை கொண்டுள்ளது. (த)

## கமரூனுக்கு மைத்திரி டுவிட்டரில் வாழ்த்து


கொழும்பு, மே 10

பிரிட்டன் பிரதமராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ள டேவிட் கமரூனுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பிரிட்டனுடன் இலங்கை மிக நெருக்கமான உறவுகளை வைத்துக் கொண்டு முன்னோக்கிச் செல்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தியப் பிரதமர் மோடியும் கமரூனுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். இது குறித்து மோடி தனது டுவிட்டர் வலைத்தளத்தில், மறுபடியும் நீங்கள் தேர்தலில் வெற்றி பெற்றதற்காக எனது வாழ்த்துகள் என்று குறிப்பிட்டுள்ளார்.(த)

## சோமவன்ஸவின் கட்சி அடுத்த வாரம் உதயம்



கொழும்பு, மே 10

தனது புதிய அரசியல் கட்சியை அடுத்த வாரத்தில் ஆரம்பிக்கவுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் மக்கள் விடுதலை முன்னணியை விட்டு விலகிப் புதிய கட்சி ஆரம்பிக்கப் போவதாக சோமவன்ஸ குறிப்பிட்டிருந்தார். புதிய கட்சியை ஆரம்பிப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

வேறு எந்த ஒரு கட்சிக்கும் ஆதரவு வழங்கப்போவதில்லை எனவும், ஆரம்பிக்கவுள்ள புதிய அரசியல் கட்சியின் பெயர், நிறம் மற்றும் சின்னம் ஆகிய விடயங்கள் கட்சியின் மாநாட்டிலேயே தீர்மானிக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள் தம்முடன் கலந்துரையாடுவதற்கு நிபந்தனையற்ற சந்தர்ப்பம் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் அங்கத்தவர்கள் எவருக்கும் தனது புதிய கட்சியில் வந்து இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கவில்லை எனவும், புதிய கட்சி ஊடாக மக்கள் மனங்களை வெற்றி கொள்வதற்கு பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

# பிரதேச செயலாளரை இடமாற்றம் செய்க

### குருநகர் மக்கள் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், மே 10

யாழ்ப்பாண பிரதேச செயலாளரையும், யாழ்.நகர் சமுர்த்தி அதிகாரியையும் இடமாற்றம் செய்யுமாறு கோரி குருநகர் மக்கள் நேற்றுமுன்தினம் மாலை கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். சமுர்த்தி மீளாய்வில் இடம்பெற்ற முறைகேடு தொடர்பாகவே, இவர்கள் இருவரையும் இடமாற்றம் செய்யவேண்டும் எனக் கோரி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட குருநகர் பகுதியில் சமுர்த்தி மீளாய்வில் முறைகேடு இடம்பெற்றதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். சமுர்த்தி முத்திரை பெறத் தகுதியான பலருக்கு, சமுர்த்தி முத்திரை ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர். மேலும் சமுர்த்தி மீளாய்வின் போது 5 பேர் கொண்ட குழுவினரே மீளாய்வு செய்ய வேண்டும் என்ற நடைமுறை உள்ள போதும், அதனை மீறி தன்னிச்சையாக மீளாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் மீளாய்வு மேற்கொண்ட சமுர்த்தி அதிகாரி, பெண்களை மன உளைச்சலுக்கு உள்ளாக்கும் விதத்தில் பாலியல் ரீதியிலான கேள்விகளையும் கேட்டுள்ளார். இது தொடர்பில் குருநகர் மக்கள் தொடர்ச்சியாக, யாழ்.மாவட்ட அரச அதிபருக்கும் முறைப்பாடு தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில், யாழ்ப்பாண பிரதேச செயலாளர் மீளாய்வின் போது முறைகேடுகள் எவையும் இடம்பெறவில்லை எனத் தெரிவித்து, கிராம சேவையாளர் ஊடாக கடிதங்களைப் பெற்றுக் கொள்வதற்கு முனைந்துள்ளதாக குற்றம் சுமத்திய மக்கள், அதற்கு எதிராக கலந்துரையாடல் நடத்தியுள்ளனர்.

குருநகர் மத்திய சனசமூக நிலையத்தில் பொதுமக்கள் ஏற்பாடு செய்த கலந்துரையாடலில், யாழ்ப்பாண பிரதேச செயலாளர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் அழையா விருந்தாளியாகக் கலந்து கொண்டு, தங்களுடன் முரண்பட்டதாக பொது மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அரச அதிகாரி என்ற தோரணையில் மிரட்டும் வகையில் தங்களுடன் முரண்பட்டதாக அந்த மக்கள் தெரிவித்தனர். குறித்த பிரதேச செயலாளரையும், சமுர்த்தி அதிகாரியையும் உடனடியாக இடமாற்றம் செய்ய வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில், யாழ்ப்பாண பிரதேச செயலாளர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரத்தின் கைத்தொலைபேசிக்குப் பலமுறை தொடர்பு கொண்டபோதும் அவர் பதிலளிக்கவில்லை. (த–5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிபொருள்களுக்கு தட்டுப்பாடில்லை

கொழும்பு, மே 10

எரிபொருள்களின் விலை அதிகரிக்கப் போவதாக மக்களை ஏமாற்றும் நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்படுவதாகச் சுட்டிக்காட்டியுள்ள மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு, நாட்டில் எரிபொருள்களுக்குத் தட்டுப்பாடு இல்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, எரிபொருள்களின் விலையை அதிகரிப்பதற்கு எவ்விதமான தீர்மானமும் எட்டப்படவில்லை என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது. நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவுவதற்கு ஒருபோது இடமளிக்கப்படமாட்டாது என்றும் அது அறிவித்துள்ளது.

எரிபொருள் மாபியாக்கள் மூலமாக முன்னெடுக்கப்படும் போலியான பிரசாரங்களை நம்பவேண்டாம் என்றும் அமைச்சு கூறியுள்ளது. (த)

## விடுவிக்கப்பட்ட பகுதிகளில் கிணறுகள் மீளவும் சோதனை

### வெடிபொருள்களைக் கண்டறிவதற்காக

யாழ்ப்பாணம், மே. 10

மக்களின் மீள்குடியமர்வுக்காக அனுமதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் தொடர்ச்சியாக குண்டுகள், வெடிபொருள்கள் கிணற்றுக்குள் இருந்து மீட்கப்பட்டு வருகின்றன. எனவே விடுவிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள கிணறுகளை மீளச் சோதனை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை, மீள்குடியமர்வு தொடர்பிலான கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

விடுவிக்கப்பட்ட வலி.கிழக்கு – வலி.வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுகளில் தொடர்ச்சியாக குண்டுகள், வெடிபொருள்கள் என்பன மீட்கப்பட்டு வருகின்றன. பெரும்பாலான குண்டுகள், கிணற்றிலிருந்தே மீட்கப்படுகின்றன. இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இராணுவத்தினரின் கண்ணிவெடி அகற்றும் பிரிவு மற்றும் ஹலோ ட்ரஸ்ட் என்பன குறித்த பகுதிகளில் ஏற்கனவே சோதனை செய்துள்ளன. இருப்பினும் இவ்வாறு மீட்கப்படுவதனால் அந்தப் பகுதிகளிலுள்ள கிணறுகளை மீளவும் சோதனை செய்வதற்கு அவர்கள் இணங்கியுள்ளனர்.

இராணுவத்தினரின் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரைப் பயன்படுத்தி விரைவில், கிணறுகளில் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அரச அதிபர் குறிப்பிட்டார். (த-5)

## கலை இலக்கியத் தேர்வின் பரிசு வழங்கல் இன்று

யாழ்ப்பாணம், மே 10

உதயன் 30 ஆவது அகவையை முன்னிட்டு மாகாண, மாவட்ட மட்டங்களில் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று காலை 9.20 மணியளவில் யாழ். இந்துக் கல்லூரி சபாலிங்கம் அரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் சங்கமிக்கும் இவ் வைபவத்தில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு உதயன் கல்விச் செயற்பாட்டுக்குழு கோரியுள்ளது. (த)

## தெல்லிப்பழை வைத்தியசாலையில் பெண்களுக்குச் சத்திர சிகிச்சை விடுதி

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் கடந்த 7 ஆம் திகதி பெண்களுக்கான சத்திரசிகிச்சை விடுதி இல. 2 திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு கடந்த 7 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் வைத்தியசாலை பதில் வைத்திய அத்தியட்சகர் மருத்துவர் திவாகர் தலைமையில் இடம்பெற்றது. மேற்படி விடுதியை, சத்திரசிகிச்சை நிபுணர் கிரிதரனும் பொது வைத்தியசாலை நிபுணர் திருமதி நளாயினியும் இணைந்து நாடாவை வெட்டித் திறந்து வைத்தனர். இதில் வைத்தியசாலை வைத்தியர்கள் மற்றும் பணியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் தலைமைதாங்கி உரையாற்றிய பதில் வைத்தியட்சகர் திவாகர் தமது உரையில், நீண்டகாலமாக எமது வைத்திய சாலையில் காணப்பட்ட குறைபாடு ஒன்று தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இந்த விடுதியைத் திறப்பதற்கு எமது சத்திர சிகிச்சை நிபுணரும், பொது வைத்திய நிபுணரும் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு எமது விடுதிக்குத் தேவையானதாதிய உத்தியோகத்தர்களை நியமனம் செய்வதற்கு அயராது உழைத்ததன் பயன் இன்று விடுதி திறக்கப்படுகிறது எனக் கூறினார். (த-36)

## வன்னியில் தேங்காய் உச்ச விலை

### ஒரு சில கடைகளில் மட்டுமே விற்பனை

முல்லைத்தீவு, மே 10

வன்னிப் பகுதிகளில் தேங்காயின் விலை அதிகரிப்புடன், தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

தற்போது வன்னிப் பகுதிகளில் தேங்காய் தட்டுப்பாடாக உள்ளதால் அதன் விலை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கிறது. சிறிய தேங்காய் ஒன்று 55 ரூபா முதல் 60 ரூபா வரை விற்பனையாகின்றது. அதுவும் ஒரு சில கடைகளில் தான் அவை விற்பனை செய்யப்படுகின்றன.

இம்முறை தேங்காயின் விளைச்சல் வெகுவாகக் குறைந்துள்ளது. இதனால் உள்ளூர்க் கடைகளுக்கு தேங்காய் வரவு இல்லாததால் தேங்காய்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, தேசிக்காய் விலையும் அதிகரித்துள்ளது. ஒரு கிலோ 15 – 20 ரூபாவாக விற்பனையான தேசிக்காய் தற்போது கிலோ ரூபா 100–120 ரூபாவாக உயர்ந்துள்ளது.

உள்ளூர் மரக்கறிகளின் உற்பத்தி குறைந்துள்ளமையால் மரக்றிகளின் விலைகளும் உயர்ந்து காணப்படுகின்றன. (த-500)

## நன்னீர் மீன்பிடியாளர் சங்கங்களுக்கு உதவி



கிளிநொச்சி, மே 10

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள எட்டு நன்னீர் மீன்பிடிச் சங்கங்களுக்கு வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் கடந்த வியாழக்கிழமை கதிரைகள் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் ஒவ்வொரு சங்கங்களுக்கும் தலா 25 கதிரைகள் வீதம் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்வில் வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் ஆகியோர் கலந்துகொண்டனர். (த-10)

## கோஷ்டி மோதலில் ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம் பூநாறி மரத்தடிப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் ஒருவர் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவத்தில் பூநாறி மரத்தடியைச் சேர்ந்த சாஜகான் (வயது –18) என்பவரே பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

வீடொன்றில் பெயின்ற் வேலை செய்து கொண்டிருந்த சமயம் வீட்டில் நுழைந்தவர்கள் கைவசம் வைத்திருந்த மேசன் கம்புகள், தலைக் கவசம் என்பவற்றால் அங்கிருந்தவர்களைத் தாக்கியுள்ளனர்.

இதன்போது பெயின்ட் வேலையில் ஈடுபட்டிருந்த நால்வர் காயமடைந்துள்ளதுடன், ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச் சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். (த-ரி)

## 180 நாள்களுக்குள் 53 பேர் மட்டு.வில் விபத்தில் சாவு

கொழும்பு, மே 10

180 நாள்களுக்குள் வீதி விபத்துக்களினால் மட்டக்களப்பில் 53 பேருக்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருப்பதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை மட்டக்களப்பு மாவட்ட நிறைவேற்றுப் பொறியியலாளர் என். சசிநந்தன் தெரிவித்துள்ளார்.

மே 4 ஆம் திகதியிலிருந்து 10 ஆம் திகதி வரை வீதிப் பாதுகாப்பு வாரம் நாடு முழுவதும் அனுஷ்டிக்கப்பட்டது. அதற்கமைய கடந்த 6 ஆம் திகதி மட்டக்களப்பு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தில் இதன் ஆரம்பவிழா கொண்டாடப்பட்டது. இதன்போது, வீதிகளில் பயணிக்கும்போது கடைப்பிடிக் கப்பட வேண்டியுள்ள வீதிச்சட்டங்களில்பின்பற்றப்பட வேண்டியுள்ள பாதுகாப்பு விதிமுறைகள் குறித்து மக்களுக்கு விளக்கமளிக்கப் பட்டது. (த-22)

## 100 க்கும் மேற்பட்ட கடாக்கள் பிரான்பற்றில் வெட்டிச் சரிப்பு

யாழ்ப்பாணம், மே 10

பண்டத்தரிப்பு –பிரான்பற்று புளியடி கட்டுவரி அம்மன் ஆலயத்தில் நேற்று ஆட்டுக் கடாக்கள் வெட்டிச் சரிக்கப்பட்டன.

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் 110 க்கும் மேற்பட்ட கடா ஆடுகள் ஆலயத்தின் முன்றிலில் வைத்து வெட்டிச் சரிக்கப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டன.

வலி.தென்மேற்கு பிரதேச சபை தவிசாளர் சி.சி.மகேந்திரன் பண்டத்தரிப்பு–பிரான்பற்று புளியடி கட்டுவரி அம்மன் ஆலயத்தில் வருடாந்த வேள்விக்காகச் சட்டத்தின் முன் உள்ள அதிகாரங்களின் படி ஆலய பிரதம குருவான அரசரத்தினத்துக்கு அனுமதியளித்திருந்தார். இதன் படி நேற்றுக் காலை 5.45 மணி முதல் கடா ஆடுகள் வெட்டப்பட்டன.

வலி. தென்மேற்கு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியும், பொதுச் சுகாதார பரிசோதகர்களும் அங்கு பிரசன்னமாகியிருந்தனர். (த-50,115)

## தேர்தல் திருத்தத்தில் அவசரம் வேண்டாம்

### சிறுபான்மைக் கட்சிகள் கோரிக்கை

கொழும்பு, மே 10

நன்கு ஆராயப்படாமல் அவசரப்பட்டுத் தேர்தல் சீர்திருத்தங்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கக் கூடாதெனஎதிர்ப்புத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை பத்தரமுல்ல வோட்டர்ஸ் எஜ் ஹோட்டலில் பல கட்சிகளின் பிரதிநிதிகள் பங்குபற்றிய முக்கிய கலந்துரையாடல் நடைபெற்றது. இதன்போதே மேற்படி எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகரஅபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சரும், சிறிலங்கா முஸ்லிம்காங்கிரஸ்தலைவருமான ரவூப் ஹக்கீம் இந்தக் கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்தார்.

இதன்போது, சிறுபான்மைக் கட்சிகளினதும், சிறிய கட்சிகளினதும் பிரதிநிதித்துவங்களை உறுதிப்படுத்தும் விதத்திலும், பாதிக்காத விதத்திலும் புதிய தேர்தல் சீர்திருத்தங்கள் அமையவேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

ஏற்கனவே அமைச்சரவையில் குறித்த 20ஆவது சீர்திருத்தம் தொடர்பாக இரண்டு அமைச்சரவைப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையிலும், அவற்றில் இறுதியாகச் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் சட்டவரைவின் வடிவிலேயே சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையிலும் இந்த விடயத்தில் அரசு அவசரப்பட்டு முடிவெடுக்குமானால் உயர் நீதிமன்றத்தை நாடவேண்டிய நிர்ப்பந்தம் சிறுபான்மையினக் கட்சிகளுக்கும், சிறிய கட்சிளுக்கும் ஏற்படலாம் என்றும் அமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலின்போது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ஹக்கீம், ஜனநாயகமக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க, ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் செயலாளர் நாயகம் வை.எல்.எஸ். ஹமீட் ஆகியோர் உட்பட அரசில் அங்கம் வகிக்கும் மற்றும் அங்கம் வகிக்காத பல சிறுபான்மையினக் கட்சிகளினதும், சிறிய கட்சிகளினதும் பிரதிநிதிகள் பங்குபற்றி தங்களது கட்சிகளின் சார்பில் பயனுள்ள கருத்துக்களை முன்வைக்கனர். (த-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சல்மான்கான் கைதாவாரா, இல்லையா? 2000 கோடிக்கு களைகட்டிய சூதாட்டம்

சல்மான்கான் வழக்குத் தீர்ப்பை வைத்து சுமார் 2 ஆயிரம் கோடி ரூபாவுக்கு சூதாட்டம் இடம்பெற்றுள்ளதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

நடிகர் சல்மான் கான், போதையில் காரை ஓட்டிச் சென்று ஒருவர் மீது ஏற்றிக் கொலை செய்த வழக்கில் கடந்த புதன்கிழமை மும்பை நீதிமன்றம் 5 ஆண்டு சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

இந் நிலையில் சல்மான்கான் மீதான வழக்கில் நீதிபதி தீர்ப்புக் கூறப் போகிறார் என்று அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து அது தொடர்பான சூதாட்டம் நடந்தது தற்போது தெரிய வந்துள்ளது. இந்த வழக்கில் சல்மான்கான் தண்டிக்கப்படுவாரா? இல்லை விடுதலை ஆவாரா? என்று இணையத்தளம் மூலம் இந்த சூதாட்டம் நடந்ததாக மும்பைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். தற்போது இது தொடர்பாக வழக்குப் பதிவு செய்து மும்பைப் பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

இதில் பணம் கட்டிய பலர் சல்மான்கான் விடுதலை ஆகமாட்டார் என்று பந்தயம் வைத்துள்ளனர்.

புதன்கிழமை மதியம் உச்சக் கட்டத்தை எட்டிய அந்தச் சூதாட்டத்தில், ஒரு ரூபா கட்டினால் 10 ரூபா கிடைக்கும் என்ற ரீதியில் சூதாட்டம் பரபரப்பாக இடம்பெற்றது.

மும்பை உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறுகையில், சல்மான்கான் விடுதலை ஆவாரா என்பதை வைத்து உலகம் முழுவதும் ரூபா 2 ஆயிரம் கோடி அளவுக்கு சூதாட்டம் நடந்துள்ளது. மும்பையை விட மற்ற நகரங்களில் தான் இந்த சூதாட்டம் அதிகமாக நடந்துள்ளது என்று தெரிவித்துள்ளார். (த)

# இலங்கை விபத்திலும் சல்மானுக்கு தொடர்பு?



கொழும்பு, மே 10

இலங்கையில் இடம்பெற்ற விபத்து ஒன்றுக்கும் நடிகர் சல்மான்கானுக்கும் தொடர்பு காணப்படுவதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.

சிங்கள ஊடகமொன்று இது தொடர்பிலான தகவல்களை வெளியிட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது நடிகர் சல்மான் கான் இலங்கைக்கு வருகை தந்திருந்தார். இதன்போது ராஜகிரிய கலப்புவாவ பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் 18 வயதுடைய இளைஞனும், 17 வயதுடைய யுவதியும் காயமடைந்துள்ளனர்.

வேகமாக வந்த டிபென்டர் ரக வாகனமொன்று பஸ் தரிப்பிடத்தில் நின்ற இளைஞனையும், யுவதியையும் மோதியது என அங்கிருந்தவர்கள் குறிப்பிட்டனர்.

இந்த விபத்துக்கும், நடிகர் சல்மான் கானுக்கும் தொடர்பு காணப்படுவதாகத் தெரிவித்தபோதிலும் அவரைக் காப்பாற்றும் நோக்கில் அவரை மீண்டும் இந்தியாவுக்குஅனுப்பிவைத்ததாகதெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்தவர்களைக் குறித்த வாகனத்தின் சா[illegible]தியே வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார். [illegible] பவத்தில் காயமடைந்த இளைஞர் தேசிய வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சையின் பின்னர் வீடு திரும்பியுள்ளார்.

காயமடைந்த யுவதி தற்போது வரையில் கால் ஊனமடைந்த நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வாகனத்தில் இருந்த நபர்கள் ஒரே மாதிரியான ஆடைகளை அணிந்திருந்தனர் என்று சம்பவத்தின் போது அந்த இடத்திற்கு வருகை தந்த கிராம மக்கள் தெரிவித்தனர்.

சம்பவ தினத்தன்று அந்தப் பகுதியிலுள்ள பாடசாலையொன்றுக்குச் சல்மான்கான் சென்றதாகவும், குறித்த நேரத்திற்கும் விபத்து நேர்ந்த நேரத்திற்கும் வித்தியாசம் காணப்படுகின்றது எனவும் நடிகரை காப்பாற்[illegible] நோக்கில், பொலிஸார் தெரி[illegible]துள்ளனர்.

மேலும் அந்தப் பகுதியிலுள்ள ஹோட்டலொன்றில் இடம்பெற்ற திருமண வைபவத்தில் கலந்து கொண்ட பல்கலைக்கழக மாணவர் ஒருவரினால் விபத்து நேர்ந்திருக்கலாம் என சந்தேகிப்பதாகவும், அவர் மற்றும் அவரது நண்பர் இந்த டிபென்டர் வாகனத்தில் சென்றிருக்கலாம் எனவும் பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

விபத்து இடம்பெற்ற டிபென்டர் வாகத்தின் இலக்கம் போலியானது எனப் பின்னர் தெரிய வந்துள்ளது. அதே இலக்கத்தையுடைய வேறொரு டிபென்டர் ரக வாகனம் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

அந்த இலக்கம் கடந்த கால அரசின் அமைச்சர் ஒருவரின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தமை குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆனாலும் அந்த இலக்கத்துடன் கூடிய வாகனத்தை தான் வேறொரு நபருக்கு விற்பனை செய்ததாக குறித்த அமைச்சரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் போது தெரி வித்துள்ளார்.

இன்னும் மேற்படி விபத்து தொடர்பான தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த)

## மரண அறிவித்தல்கள்

### சிவகுரு சிவராஜா

(ஓய்வு நிலை பொலிஸ் உத்தியோகத்தர்)



பிறப்பு 16.02.1949 இறப்பு 08.05.2015

சாவகச்சேரி, கிராம்புவிலைப் பிறப்பிடமாகவும், கேணிக்கிணற்றடி துன்னாலை கிழக்கைப் வசிப்பிடமாகவும் கொண்ட சிவராஜா 08.05.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு - புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் தர்மதேவியின் அன்புக் கணவரும், கதீசன்(லண்டன்), காண்டீபன் (சட்டத்திணைக்களம் - திறந்த பலகலைக்கழக மாணவன்), கஜேந்திரன் (பொறியியலாளர்), விநோதினி, கலினா (மாணவி ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத்தந்தையும், சுதாகரனின் அன்பு மாமனாரும், சிவகுமாரி (யசோ-கனடா), ஜெயக்குமாரி (ஜேர்மனி), காலஞ்சென்ற வரதராஜா (தம்பா) மற்றும் பிறேமகுமாரி(கனடா), அனுஷகுமாரி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 10.05.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கியான் காடு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கேணிக்கிணற்றடி, துன்னாலை கிழக்கு,
கரவெட்டி. 021 205 6315

தகவல்:
குடும்பத்தினர்.

### சின்னையா சிவக்கொழுந்து

(சிவராசா)



முகமாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் சோதியம்மா வீதி, மீசாலை மேற்கை தற்காலிக வதிவிட மாகவும் கொண்ட முகமாலை கத்தி யறுத்தான் தோட்டகணக் கருமான சின்னையா சிவக்கொழுந்து (சிவ ராசா) 08.05.2015 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னையா - தேவகுஞ்சரி தம்பதியரின் அன்பு மருமகனும், கனகம்மாவின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சிவானந்தம் மற்றும் சிவலோகநாதன் (ரவி - மீசாலை), சிவசுந்தரராஜன் (சிவா -ஜேர்மனி), சிவஞானசோதி (மீசாலை), சிவநாதன் (மீசாலை), சிவஞானவதி (அமுதி - கனடா), சிவகுமார் (கனடா), சிவமாலா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற கேதாரம் (முன்னாள் முன்பள்ளி ஆசிரியை - அல்லாரை) மற்றும் இராஜேஸ்வரி மாலா (ஜேர்மனி), சிவப்பிரகாசம் (ஓய்வுநிலை செயலாளர் பிரதேச சபை பளை), குணமதி (ஆசிரியை கைதடி - நுணாவில் அ.த.க. பாடசாலை), செல்வானந்தம் (கனடா), மதிவதனி (கனடா), காந்தரூபன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், பாமினி கஜன் (ஆஸ்திரேலியா), கஜனி (மாணவி - மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), தர்சன் (மாணவன் - மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), சிந்துஸன் (ஜேர்மனி), சுபாஸ் (ஜேர்மனி), சிவநேந்திரா (உதவி விரிவுரையாளர் - முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம் யாழ். பல்கலைக்கழகம்), தேவரூபன் (கிழக்கு பல்கலைக் கழகம்) துவாரகன் (ஆசிரியர் - வவுனியா), சிவகௌரிகா (மாணவி சாவகச்சேரி இந்துக் கல்லூரி), தர்ஜி (கனடா), பிரியன் (கனடா), பிரதிக்ஸா (கனடா), பிரதிக்ஸன் (கனடா), ரக்ஸயன் (கனடா), ரக்ஸனா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது தற்காலிக வதிவிடத்தில் நாளை (11.05.2015) திங்கட்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 11.00 மணியளவில் மீசாலை வடக்கு வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலய முன்பாக
சோதியம்மா வீதி, புக்கரோட்,
மீசாலை மேற்கு மீசாலை.
077 366 7302, 077 964 6453

தகவல்:
குடும்பத்தினர்

### முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



புஸ்பவதி குணரத்தினம்
(கோண்டாவில்)

பிறப்பு 03.04.1939 இறப்பு 10.05.2014

உங்கள் பிரிவால் வாடும் கணவர்
பேராசிரியர் குணரத்தினம் மற்றும்
குடும்பத்தினர்.


MANIPAL INTERNATIONAL UNIVERSITY (MIU).

மலேசியாவில் கல்வி பயிலுங்கள்

- Foundation
- Engineering
- Business Studies
- Science

சிறந்த தரமான கல்வியுடன் இணைந்த இலகுவான மற்றும் கட்டுப்படியான கட்டணங்கள் செலுத்தும் முறை



பாடத்திட்டத்திற்கான கட்டணம்
US $3000திற்கு மேல்
(ஒரு வருடத்திற்கு)

மேலதிக விபரங்களுக்கு
கௌரவ கலாநிதி சேனாநாயக்கவை
கீழேயுள்ள இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

INSTITUTE OF VOCATIONAL STUDIES
476, Kandy, Road,
Dalugama, Kelaniya, Sri Lanka.
Hotline: 0777444500


## மரண அறிவித்தல்

### திருமதி விக்னேஸ்வரி சபாரட்ணம்



பலாலி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் அப்பையா லேன், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விக்னேஸ்வரி சபாரட்ணம் (09.05.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை-நீலாம்பாள் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா- கண்மணி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான Dr.தங்கராசா, இராசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சபாரட்ணம் (ஓய்வு பெற்ற மேற்பார்வையாளர், நீர்பாசன இலாகா, யாழ். மாநகர சபை) அவர்களின் அன்பு மனைவியும், கௌசலாதேவியின் பாசமிகு தாயாரும், சந்திரகுமார் (இளைப்பாறிய முகாமையாளர், இலங்கை வங்கி, திருநெல்வேலி) அவர்களின் அன்பு மாமியாரும், சுதர்ஷன்- ஜெகபாலினி (கனடா), ருஷாந்தன் (Abans Finance Jaffna), பிரஷ்ஷிக்கா-குகப்பிரியன் (லண்டன்), தினுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஆருஜன் (கனடா), அக்சறா (கனடா), அஜூந் (லண்டன்), அட்சிகா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பூட்டியும், சந்திரகௌரீசன், பவானி, ஜெயந்தி, பஞ்சநிதி, சாந்தகுமாரி, தயாநிதி, கலாநிதி, யோகநிதி ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2015) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, மு.ப. 10.30 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு: 021 221 2177
"பிரஜிஸ்தன்" அப்பையா லேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (59636) (4.3.7)

தகவல்: சந்திரகுமார்
(மருமகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படகு மற்றும் இயந்திரத்துக்கு காப்புறுதியளித்த அமானா தகாபுல்



அமானா தகாபுல் காப்புறுதி நிறுவனமானது இலங்கையில் கடந்த 16 ஆண்டுகளாக காப்புறுதி துறையில் முன்னிலை வகிக்கின்றது. அதிலும் குறிப்பாக 55 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான 'செய்தன்' என்ற மருத்துவக்காப்புறுதியை வழங்கும் ஒரே ஒரு கம்பனியாகவும் காணப்படுகின்றது. மேலும் படகு மற்றும் எஞ்சின்களுக்கான காப்புறுதியில் பயனாளிகளுக்கு அதிகூடிய அனுகூலங்களையும் சிறந்த சேவையையும் வழங்கும் ஒரே ஒரு கம்பனியாகவும் விளங்குகின்றது.

கடந்த ஏப்ரல் 18 ஆம் திகதி விபத்தினூடான எரிந்து நாசமான படகு மற்றும் எஞ்சினுக்கான இழப்பீட்டுத் தொகையை வழங்கி இருந்தது. அதனை யாழ். மாவட்ட நீரியல்துறை உயர் அதிகாரி ரமேஸ்கண்ணா வழங்கியிருந்தார். (த)

## நேபாளத்தில் இடர் நிவாரணப் பணிக்கு ஆதரவளிக்கின்றது கொமர்ஷல் வங்கி




நேபாளத்தில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவை யான நிவாரணப் பணிகளில் கொமர்ஷல் வங்கியும் தனது பங்களிப்பை வழங்கியுள்ளது. பிராந்திய ரீதியான அமைப்பான இடர் முகாமைத்துவத்துக்கான ஆசிய பசுபிக் கூட்டமைப்பு நேபாளத்தில் மேற்கொண்டுவரும் பணிகளுக்கு அதன் கூட்டமைப்புக்களுள் ஒன்றான இலங்கை வர்த்தக சபை மேற்கொண்டுள்ள நிதி திரட்டல் நடவடிக்கைக்கே கொமர்ஷல் வங்கி தனது பங்களிப்பை வழங்கியுள்ளது.

இலங்கையில் இயற்கை இடர்கள் இடம்பெற்ற வேளையிலும் பிராந்திய ரீதியான அமைப்பான இடர் முகாமைத்துவத்துக்கான ஆசிய பசுபிக் கூட்டமைப்பு கைகொடுத்து உதவியுள்ளது. நேபாளத்துக்கு அது ஏற்கனவே ஒரு நிவாரணக் குழுவை அனுப்பி காத்மண்டுவில் கள ஆஸ்பத்திரி ஒன்றையும் ஸ்தாபித்துள்ளது. கொமர்ஷல் வங்கியின் சி.எஸ்.ஆர் நிதியம் சார்பாக ஜீவன் பெரேரா, மகேஷ் ரத்னாயக்க, திருமதி பிரியந்தி பெரேரா ஆகியோர் காசோலையை கையளித்தனர். இலங்கை வர்த்தக சபையின் செயலாளர் நாயகமும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மங்கள பி.பி.யாபா, சிரேஷ்ட உதவி செயலாளர் நாயகம் சந்திரரத்ன விதானகே, சிரேஷ்ட உதவி செயலாளர் நாயகம் திருமதி அயோனி வனிகநாயக்க, பிரதி செயலாளர் நாயகம் திருமதி அலிகீ பெரேரா ஆகியோரையும் காணலாம். (த)


### வேலையாள்கள் தேவை

1. பிளம்பர் (பைப் இணைப்பாளர்கள்)
2. எலக்ரீசியன்ஸ் (மின்னிணைப்பாளர்கள்)
3. வெல்டேர்ஸ்(ஒட்டுநர்கள்)
4. உதவியாளர்கள்
5. வேலை பயிலுநர்களும் ஏற்றுக் கொள்ளப்படுவர்.

தொடர்புகளுக்கு: 075 932 9907

பில்டிங் சேவிஸ் எஞ்ஜினியறிங் பிறைவேற் லிமிட்டெட்

### அமெரிக்க கிரீன்காா்ட் லொத்தர் 2016

அமெரிக்க கிரீன்கார்ட் லொத்தர் 2016ஆம் ஆண்டுக்கு தெரிவானோரின் விபரங்கள் 2015 மே 5ஆம் திகதி வெளிவரவுள்ளன. இதில் தெரிவாகும் அதிர்ஷ்டசாலிகள் நிரப்பவேண்டிய படிவங்களை 2003ஆம் ஆண்டு தொடக்கம் அமெரிக்க கிரீன்கார்ட் லொத்தர் விண்ணப்பிப்பதில் அனுபவம் வாய்ந்த எமக்கூடாக பூர்த்தி செய்துகொள்வதுடன் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள தொடர்புகொள்ளவும்.

முறைப்படி படிவங்கள் பூர்த்திசெய்யாமை அல்லது தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமை போன்ற காரணங்களால் அமெரிக்க தூதரகத்தினால் நடாத்தப்படும் நேர்முகப்பரீட்சையில் உங்கள் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.

BRISTOL CYBER CAFÉ
No. 8/3/4, Bristol Street, Colombo 01.
Tel: 0112 393919 / 0774 276579 www.bristolcc.biz





UK, Australia, Canada, USA, New Zealand, Denmark, France, Germany, Italy, Japan, Netherlands, Norway, Switzerland, Sweden etc...

### வங்கியில் பணவைப்பு

Saving book, Fixed Deposit, Statement
3, 6, 12 மாதங்களுக்கான (முன், பின்) பணவைப்பு (அரசவங்கிகளில் மட்டும்)

Migration / Skill Migration / Visit Visas / Student Visas / Dependent / Business / Investment / New Applications etc...

(நேரத்தை முன் கூட்டியே பதிவு செய்து கொண்டு வரவும்).

SKYWALK Visa Solutions
ஸ்கைவோர்க் வீசா சொலூஷன்
No.65, 1/1, Galle Road, Dehiwala. (Food City - 1st Floor)
077-7711905


## இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித்திட்டம்
## கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் - 2014

அனைத்துமுள்ளடக்கிய வருமானக்கூற்று

(ரூபா ஆயிரங்களில்)

| விடயம் | திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கு | |
|---|---|---|
| | 2014 | 2013 |
| வருமானம் | | |
| அங்கத்துவ நிறுவனங்களிலிருந்து வருமானம் | 4,815,193 | 4,269,996 |
| நிதியியல் சாதனங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற வட்டி வருமானம் | 1,591,506 | 1,366,757 |
| முதலீடுகளைக் கழிவுச் செய்வதன் மூலமான இலாபம் | 165,726 | - |
| **மொத்த வருமானம்** | **6,572,425** | **5,636,753** |
| செலவினம் | | |
| வாடகை மற்றும் நிர்வாகச் செலவுகள் | 5,833 | 6,344 |
| வெளியீடுகளுக்கான செலவுகள் | 524 | 505 |
| அதேநேர மொத்தத் தீர்ப்பனவுக் கட்டணங்கள் | 5 | 6 |
| கோரப்படாத உத்தேச வரிப் பற்று | 215,428 | 326,908 |
| பொருளாதாரப் பணிகள் விதிப்பு | 27,323 | - |
| **மொத்தச் செலவினம்** | **249,113** | **333,763** |
| வருமான வரிக்கு முந்திய காலப்பகுதிக்குரிய வருமான மிகை | **6,323,312** | **5,302,990** |
| கழி: வருமான வரிக்கான ஏற்பாடு | 242,059 | 296,111 |
| வருமான வரிக்குப் பிந்திய காலப்பகுதிக்குரிய வருமான மிகை | **6,081,253** | **5,006,879** |
| ஏனைய அனைத்துமுள்ளடக்கிய வருமானம் | | |
| விற்பனைக்குள்ள நிதியியல் சொத்துக்களின் மீள் மதிப்பீடு மூலமான இலாபங்கள் | 1,128,980 | - |
| கழி: ஏனைய அனைத்துமுள்ளடக்கிய வருமானங்கள் தொடர்பான வரி | - | - |
| ஆண்டுக்கான வரிக்குப் பிந்திய ஏனைய அனைத்துமுள்ளடக்கிய வருமானம் | **1,128,980** | - |
| மொத்த அனைத்துமுள்ளடக்கிய வருமானம் | **7,210,233** | **5,006,879** |

நிதியியல் நிலைமைக்கூற்று

(ரூபா ஆயிரங்களில்)

| விடயம் | திசெம்பர் 31இல் உள்ளவாறு | |
|---|---|---|
| | 2014 | 2013 |
| சொத்துக்கள் | | |
| வங்கியிலுள்ள பணம் | 347 | 710 |
| அங்கத்துவ நிறுவனங்களிலிருந்து பெற வேண்டியவை | 1,113,613 | 1,018,723 |
| முதலீடுகளுக்காக செலுத்தப்பட்ட அட்டுறு வட்டி | 475 | 55,798 |
| விற்பனைக்குள்ள நிதியியல் சொத்துக்கள் | 12,561,793 | - |
| கடன்களும் பெறுவனவுகளும் | 6,008,942 | - |
| முதிர்ச்சியடையும் வரை வைத்திருக்கப்படுகின்ற நிதியியல் முதலீடுகள் | - | 12,680,387 |
| மொத்தச் சொத்துக்கள் | **19,685,170** | **13,755,618** |
| பொறுப்புக்கள் | | |
| சில்லறை கடன்கொடுநர் | 2,225 | 486 |
| உள்நாட்டு வருமான வரி திணைக்களத்திற்கு செலுத்த வேண்டியவை | 4,564 | 1,286,984 |
| மொத்தப் பொறுப்புக்கள் | **6,789** | **1,287,470** |
| உரிமை மூலதனம் | | |
| இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவி நிதியம் | 18,549,401 | 12,468,148 |
| விற்பனைக்குள்ள ஒதுக்கம் | 1,128,980 | - |
| மொத்த உரிமை மூலதனம் | **19,678,381** | **12,468,148** |
| மொத்த உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள் | **19,685,170** | **13,755,618** |

மேற்காணப்படும் நிதிக்கூற்றுக்கள் 2015 ஏப்பிறல் 07 திகதியிடப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைப்படி இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித்திட்டத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

[illegible]
வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர்
இலங்கை மத்திய வங்கி

2015 மே 07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவிளம்பரங்கள்



## விற்பனைக்கு



### விற்பனைக்குண்டு
திருநெல்வேலி, பலாலி வீதி, 124 ஆம் இலக்கத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 3 மாடிக் கட்டடம் (1500 சதுர அடி) விற்பனைக்குண்டு. வாகனத் தரிப்பிட வசதிகள் உண்டு.
விலை பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு: 077 217 4038
(சி/16720)(4.3.7)

### வீடுவளவு விற்பனைக்கு
ஈச்சமோட்டை வீதியில் புது வீட்டுடன் சேர்ந்த 6 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. நவீன வசதிகள் யாவும் உண்டு.
தொடர்பு: (59316) (45.3.7)
071 564 4236,077 861 0025

### விற்பனைக்கு
ராஜா திரையரங்கில் பாவித்த மரக்கதிரைகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 021 222 7332, 021 222 7334
(59593)(6.3) முகாமையாளர்.

### ஊர்க்கோழிக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு
சிறந்த ரக யாழ்ப்பாண ஒரு மாத, இரண்டு மாத ஊர்க் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. (திருநெல்வேலியில்) ஒரு நாள் குஞ்சு ரூபா 70/=
(59652)(4.3.7) தொடர்பு: 077 755 6244

### விற்பனைக்கு
யமகா C-90 மோட்டார் சைக்கிளும், 5 KW ஜெனரேற்றரும் விற்பனைக்குள்ளன.
தொடர்பு: 077 830 4553
(59620)(4.3.7)

### வான் விற்பனைக்கு
NP LH 709 E.x Turbo TATA கன்ரர் 14½ அடி நீளம் கொண்ட வான் விற்பனைக்குண்டு.
(59628)(4.3.7) தொடர்பு: 077 609 5749

### மர அரிவு ஆலை விற்பனைக்கு
மிருசுவிலில் மர அரிவு இயந்திரங்களுடன் கூடிய 6¾ பரப்புடைய காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 255 7761
(41131)(4.3.7)

### காணி விற்பனைக்கு
15 பரப்புக் காணி அல்லைப்பிட்டியில் விற்பனைக்குஉண்டு. பண்ணை போடுவதற்கும் வசிப்பதற்கும் உகந்த நல்ல தண்ணீர்க் கிணற்றுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 835 0478, 077 670 4364
(59621) (4.3.7)

### காணி விற்பனைக்கு
நாவற்குழிச் சந்தியில் ஏ9, வீதியில் Hero Honda வுக்கு முன்பாக 8 ½ பரப்பு வெற்றுக் காணி விற்பனைக்குண்டு.
(சி/16724)(4.3.7)
தொடர்பு: 077 189 5427

## தேவை




### காணி தேவை
நல்லூர், கொக்குவில், கோண்டாவில், திருநெல்வேலி யாழ்.நகர் பகுதியில் ஏறத்தாழ 100 பரப்புக் காணி தேவைப்படுகின்றது. எனவே விற்பனைக்கோ அல்லது குத்தகைக்கோ கொடுக்க விரும்புபவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.
(59598)(4.3.7) தொடர்பு: 077 725 1036

### பணிப்பெண் தேவை
கொழும்பில் தங்கி நின்று வீட்டு வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.
(59630)(4.3.7) தொடர்பு: 077 386 6250

### மணமகள் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1986 இல் பிறந்த செவ்வாய்க் குற்றமற்ற அமெரிக்க பிரஜாவுரிமை உடைய Assistan Manager ஆகப் பணிபுரியும் 5'9" உயரமுடைய மணமகனுக்கு படித்த, மெல்லிய அழகிய தோற்றமுடைய மணமகள் தேவை.
(59592)(4.3.7) தொடர்பு: 077 617 4145

### சாரதி தேவை
யாழ்ப்பாணம்- கொழும்பு அனுபவம் உள்ள கனரக வாகன சாரதி அனுமதி பத்திரம் உள்ளவர்கள் உடனடியாகத் தேவை.
தொடர்பு: 077 386 6250
(59629)(4.3.7)

### மணமகள் தேவை
இந்து கௌரவ குடும்ப 1990 இல் பிறந்த மணமகள் மிருகசீரிட நட்சத்திரம் உதயத்து செவ்வாய், செவ்வாய் பாவம் 32, மொத்த பாவம் 46 லண்டனில் Bio Medical Engineering படித்தவர். தகுதியுடைய எஞ்சினியர், எக்கவுண்டன்,டாக்டர் மணமகன் தேவை. தகுதிக்கு தகுந்த சீதனம் கொடுக்கப்படும்
தொடர்புகளுக்கு: 077 399 3011
[illegible] (59168)(9.3) 021 720 1373

### மணமகன் தேவை
யாழ்.இந்து 1983, 1 இல் செவ்வாய் சதய நட்சத்திரம், 33 கிரகபாவம் அரச ஆசிரியராகக் கடமையாற்றும் மணமகளுக்கு அரச உத்தியோகத்தராகக் கடமையாற்றும் மணமகன் தேவை.
(59606)(4.3.7) தொடர்பு: 076 705 8546

## வேலைவாய்ப்பு

### வேலை வாய்ப்பு
★ வரவேற்பாளர்
★ கொம்பியூட்டர் ரைப்பிங்
★ புத்தகம் கட்டுநர்
★ போட்டோ பிரதியாக்கம்
அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
வடக்கின் முன்னோடி அச்சுப்பதிப்பகம்
தொ.பே : 0771974875

### வேலையாள்கள் தேவை
நல்லூரில் இயங்கும் ஐஸ்கிறீம் கடைக்கு சிட்டை எழுதுநர், சப்பிளேயர், சமையல்காரர் ஆகியோரும் வீட்டில் தங்கிநின்று வேலை செய்யக்கூடிய பெண் வேலையாளும் தேவை.
(59619)(4.3.7) தொடர்பு: 077 830 4553

### பணியாளர்கள் தேவை
பான்சிக் கடைக்கு
* விற்பனையாளர்
* கணக்குப்பதிவாளர் (பகுதி நேரம்) தேவை.
(59616)(4.3.7) தொடர்பு: 076 616 3975

### வெல்டிங் வேலையாள், தச்சுவேலையாள், மேசன் வேலையாள் - தேவை
எமது நிறுவன வேலைத்தளங்களில் தங்கி நின்று வேலைசெய்வதற்கு மேற்கூறிய வேலையாள்கள் தேவை.
தொடர்பு: 077 407 1537, 077 314 0306

### வேலையாள்கள் தேவை
சண்டிலிப்பாயில் இயங்கும் விற்பனை நிலையங்களுக்கு காசாளர்கள், மனேஜர் தேவை. ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் அல்லது தங்கி நிற்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
(59633)(4.3.7) தொடர்பு: 077 161 8268

### வேலைவாய்ப்பு
Hospital road, jaffna இல் அமைந்துள்ள Medical Clinic மற்றும் Computer Shop இற்கு வேலைக்கு ஆள்கள் தேவை.
தொடர்பு: 077 310 3205 (59601)(4.3.7)

## வாடகைக்கு

### வீடு வாடகைக்குத் தேவை
சிறிய குடும்பத்துக்கு யாழ்.இந்துக் கல்லூரிப் பிரதேசத்திலிருந்து 4km சுற்றாடலில் (கொக்குவில், கோண்டாவில், திருநெல்வேலி உட்பட) வீடு வாடகைக்குத் தேவை.
(59653)(4.3.7) தொடர்பு: 077 284 0990

### வீடு வாடகைக்கு
"சரவணன் வீடு" புன்னாலைக்கட்டுவன் தெற்குச் சந்தி பலாலி பிரதான வீதியில் (சேவிஸ்ரேசனுக்கு அருகில்) அமைந்துள்ள தோட்டக் காணியுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
தோட்டம் செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப் படும். 10 ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.
(59314)(4.3.7) தொடர்பு: 077 678 6312

### வீடு வாடகைக்கு
இல.68 கச்சேரி நல்லூர் வீதியில் அமைந் துள்ள புதிய வீடு வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு: 077 582 3346
(59579)(9.3)

### வீடு வாடகைக்கு
கடந்த ஐந்து வருடங்களாக வங்கி ஒன்றின் முகாமையாளர் விடுதியாகப் பயன்படுத்தப்பட்ட சகல வசதிகளும் கொண்ட பொஸ்கோ பாடசாலை, இந்தியதுணைத் தூதுவர் இல்லம் ஆகிய வற்றுக்கு அருகில் அமைந்த வீடு வாடகைக்கு உண்டு.
(59678) (45.3) தொடர்பு: 077 903 4050

### வீடு வாடகைக்கு
யாழ்ப்பாணம் 17/1, பிறவுண் றோட்டில் 2 மாடி வீடு 10 அறைகள், 2 சமையலறை, 3 குளியலறையுடன் வாடகைக்குண்டு. (நிறுவனங்கள் விரும்பத்தக்கது)
தொடர்பு: 077 807 2985
(59625)(4.3.7)

### வீடு வாடகைக்குண்டு
நல்லூர், செம்மணி றோட், வெயிலுகந்த விநாயகர் ஆலயத்துக்கு அருகில் பெரிய அளவிலான வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 28, [illegible] வீதி, [illegible], யாழ்ப்பாணம். 077 672 1687 (59494)(4.3.7)

## ஜோதிடம்

### இந்திய சாஸ்திரியார் வருகை
யாழ்ப்பாணம் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்.
ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற பரம்பரை ஜோதிடர்
S.N குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா?, குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.
காலை 9 மணி முதல்
மாலை 5.00 மணி வரை.
இல.424/11, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்
(சிவன்கோவிலடி பிரகாஷ் ரான்ஸ்போட் எதிரில்)
T.P: 072 681 6681, 072 681 6691
(57712) (4.3.6)


உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111


### இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும் பாபு சாஸ்த்திரி ஸ்ரீமுருகன் ஜோதிடம்
வசீகரணம் சக்தி ஜோதிடர் இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரீக ஜோதிடர். இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. கைரேகை பார்த்து பலன் சொல்லுவார், கணவன் மனைவி சண்டை, வேலை தொழில் உத்தியோகம் இப்படிப் பலவாறான தொழில் பாதிப்பு, வீட்டில் பேய் பிசாசு நடமாட்டம், கண்திருஷ்டியினால் வாழ்வில் முன்னேற்றம் இன்மை, குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்களுக்கு வேண்டிய வழிகளைக் காட்டுதல் ஆகியவற்றிற்கு பலன் சொல்வதோடு பிரச்சினைகளைத் தீர்த்தும் வைப்பார். மேலும் உங்கள் வீட்டை காவல்படுத்தல் போன்றவற்றையும் செய்வார். தமிழ் மொழிகளில் சொல்லப்படும். ஆகவே இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.
இல. 175, முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்விருந்தினர் விடுதி, G.G.Hotel, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 077 595 0463
(59478)(4.3.7)

### சீரடி சாய்பாபா ஜோதிடம்
இந்தியாவிலிருந்து வந்துள்ள பிரசித்தி பெற்ற ஜோதிடர்
[illegible] சாஸ்திரிகள்
ஜாதகம், கைரேகை, நாமநட்சத்திரம் பார்த்து பலன் சொல்லப்படும். வெளிநாட்டு பிரச்சினை, குழந்தைப்பாக்கியம், திருமண யோகம் என்பனவும் மற்றும் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும்.
காலை 9.00 மணி - மாலை 6.00 மணி வரை
076 [illegible]
Land Mark [illegible] Hotel
இல.46/1, கஸ்தூரி வீதி, (யாழ்.இந்துமகளிர் வைத்தியசாலைக்கு முன்பாக) [illegible], யாழ்ப்பாணம்.
(59429)(4.3.7).

## ஏனையவை



* பல் முக சீராக்கல் (Consultant orthodontist)
* முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்.

* மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
* ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
* நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
* வேர்முறை சிகிச்சை (Root canal Filling)
* நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
* பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

சன்றைஸ் டெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (உதய)

[illegible] மெடிக்கல் சென்ரர்
[illegible], ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்ஷினி)

Majestic Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில் CEYLON THEATRES




பிளட்டினம் 10.30am




பிளட்டினம் 2.30 / 6.30





சில்வர் 10.15 / 2.15 / 6.15



ப்றொன்ஸ் 10.30 / 2.30 / 6.30
விசாரணை ☎ 021-2227712


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் ஜெயராசா உதயகுமார் (J.P)

(ஓய்வுபெற்ற யாழ். மாநகரசபை, உத்தியோகத்தர்)

உதயம் 07.03.1952

மறைவு 11.04.2015

கடந்த11.04.2015 சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர் அமரர் ஜெயராசா உதயகுமார் (J.P) அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (11.05.2015) திங்கட்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் திக்கம் மடத்துவாசல் பிள்ளையார் கோயிலிலும் வீட்டுக்கிரியைகள் முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"கலாபவனம்"
திக்கம், அல்வாய் மேற்கு, அல்வாய்.
தொ.பே. 077 401 1352

குடும்பத்தினர்.


# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம், மே 10

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் அமைந்த வண்ணார்பண்ணை பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

இதன்படி நாளை திங்கட்கிழமை மு.ப 9 மணிமுதல் மு.ப 11 மணிவரை குமாரசுவாமி வீதியில் உள்ள கிராம சேவகர் அனுவலகத்திலும் மு.ப 11 மணி முதல் பி.ப ஒரு மணிவரை ஆத்திசூடி சனசமூக நிலையத்திலும்–

செவ்வாய்க்கிழமை மு.ப. 9 மணிமுதல் மு.ப. 11 மணிவரை அரசடி வீதியில் உள்ள ஞானக் குழந்தை பாலர் பாடசாலையிலும் மு.ப. 11 முதல் பி.ப. ஒரு மணிவரை கலாஜோதி சனசமூக நிலையத்திலும் தொடர்ந்து –

புதன்கிழமை மு.ப 9 மணிமுதல் மு.ப. 11 மணி வரை முருகமூர்த்தி வீதியிலும் மு.ப. 11 மணி முதல் பி.ப ஒரு மணிவரை கலைவாணி சனசமூக நிலையத்திலும் –

வியாழக்கிழமை மு.ப. 9 மணிமுதல் மு.ப. 11 மணிவரை தாமரை வீதியிலும் மு.ப. 11 மணி முதல் பி.ப. 1 மணிவரை பெரிய தம்பிரான் வீதியிலும் –

வெள்ளிக்கிழமை மு.ப 9 மணிமுதல் மு.ப. 11 மணிவ்ரை வள்ளுவன் சனசமூக நிலையத்திலும் மு.ப. 11 மணிமுதல் பி.ப. 1 மணிவரை கே.கே.எஸ் வீதியிலுள்ள கலைமகள் சனசமூக நிலையத்திலும் தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளன. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வளர்ப்பு நாய்க்ளுக்கு தடுப்பூசியைப் போட்டுக்கொள்ளும்படி மாநகர சபையினர் அறிவுறுத்தியுள்ளனர். (ஒ–10)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் இராசரத்தினம் யோகேஸ்வரன்

தோற்றம் 23.10.1963

மறைவு 10.04.2015

"அன்பிலாரெல்லாம் தமக்குரியர்
அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு"
என்ற குறள்வழி வாழ்ந்த நீ வாழ்க்கைப் பாதையிலே
பாதியிலே விட்டுச் சென்றாயே! எமது இதய மதில்
நினைவலையாய் என்றென்றும் நிறைந்தாயே!
ஓம் சாந்தி சாந்தி! சாந்தி!!!

நீர்வேலி வடக்கு, நீர்வேலி. குடும்பத்தினர்.



# ஓராண்டு நினைவஞ்சலி



அருணாசலம் கனகம்மா

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

தோற்றம் 14.08.1937

திதி: ஸப்தமி

மறைவு 21.04.2014

அன்பின் திருவுருவே, அமைதியின் பொக்கிசமே
மங்காத மணி விளக்கே மறைந்ததோ ஓராண்டு
அன்பினை மெழுகாக்கி, அறிவினை திரியாக்கி
எம் வாழ்வுக்கு ஒளி தந்தாய் அம்மா!
ஆண்டுபல சென்றாலும் ஆறுமோ
உங்கள் நினைவு அம்மா!

பாலாவி தெற்கு, கொடிகாமம். குடும்பத்தினர்.



# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் தினகரம்பிள்ளை செல்வக்குமார்

தோற்றம் 28.05.1975

மறைவு 16.04.2009

திதி: ஸப்தமி (10.05.2015)

அன்பிற் சிறந்தவனாய் அவனியில் உதித்து இல்லறவாழ்வில் நறுமணம் பரப்பி உறவுகள் போற்றிடும் உத்தம தந்தையாய், மகனாய், சகோதரராய் பிறர்துயர் துடைக்கும் அன்புச் செல்வக்குமார் வித்தைகள் புரிந்திடும் காரிய வீரனாய் எல்லையில்லா அரிய அன்புள்ளம் கொண்டவனாய் இங்கிருந்தாய். வாழ்ந்திட்டவேளை தன்னில் கருணையில்லாக் காலனின் கண்கெட்ட செயலால் இமைகள் முடித்திறப்பதற்குள் எல்லாம் முடிந்து கலங்கி நாம் தவிக்கின்றோம். எங்கே சென்றாய்? மீண்டும் பிறக்க தவியாய்த் தவிக்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் நினைவுகளுடன் தவிக்கும்
தாய், மாலினி- சகோதரி, மகன்- தேருஜன்.


# திருநாவுக்கரசர் குருபூசை

யாழ்ப்பாணம், மே 10

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் அருள்மிகு ஸ்ரீ சட்டநாதசுவாமி தேவஸ்தானத்தில் ஆலயப் பூசையைத் தொடர்ந்து திருநாவுக்கரசு நாயனார் குரு பூசை வைபவத்தை கொண்டாட உள்ளதாக மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ண மூர்த்தி தெரிவிக்கின்றார்.

அத்தோடு பலாலி வீதி, கந்தர்மடம், அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமான் திருக்கோயிலிலும் மாலை 5.30 மணியளவில் திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு அபிஷேம் வழிபாடுகள் நடைபெற்று குருபூசை வைபவம் நடைபெறஉள்ளது. (ஒ)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி யனுசியா சற்குணராசா

தாய் மடியில் 23.11.2006

காலன் பிடியில் 21.04.2014


பிஞ்சு மகப் பிறை நிலவே
நெஞ்சமெல்லாம் உன் நினைவே
தஞ்சமென வேண்டுகின்றோம்
தாய் அணைத்த கை இறைவனையோ
உன் ஆத்மா சாந்தி அடைய
பிரார்த்திக்கின்றோம்

சற்குணராசா சாந்தினி
பேரன் ஆனந்தராசா கமலாதேவி
குடும்பம்.

அல்லாரை தெற்கு,
அல்லாரை.



# நீங்கா நினைவுகளில் முதலாம் வருட இதயஅஞ்சலி



மலர்வு 16 . 10 . 1968

உதிர்வு 21 . 04 . 2014

திதி : 10.05.2015

அமரர் சுப்பிரமணியம் ஏரம்பமூர்த்தி (கண்ணன்)

(கணேசா ஹார்ட்வெயர் - சாவகச்சேரி)

ஆண்டு ஒன்று ஆனதப்பா ஆறவில்லை எம்மனமோ
அன்பு காட்டி அறிவூட்டி இன்பமுடன் வாழ
ஏற்றமுடன் உழைத்தீர் எங்களை வாழ வைக்க
அறிவுக் களஞ்சியமாய் அன்பின் பொக்கிசமாய்
இனிய கதைகள் பேசி அள்ளி அணைத்திடுவீர்கள்
அப்பா என அழைத்தால் அன்பாகப் பேசிடுவீர்கள்
ஆலமரம் போல நீங்கள் ஆயிரம் கிளைகளைப் பரப்பி
பறவைகள் எல்லாம் இளைப்பாற இடம் கொடுத்தீர்கள்
ஊரவர் போற்றிடவே உத்தமராய் வாழ்ந்தீர்கள்
கோயில் குளம் என்று கும்பிட்டு வந்தீர்களே
தொண்டுகள் யாவும் களைப்பின்றி செய்து நின்றீர்கள்
பதின்நான்கு ஆண்டுகளும் பத்திரமாய் பாதுகாத்தீர்கள்
எல்லாம் இருக்கிறது ஆனாலும் எங்களோடு நீங்கள்
இருக்கவில்லை என்று உள்ளம் கலங்குகின்றோம்
அப்பாவின் நிகருக்கு யாருமில்லை இவ்வுலகில்
ஆண்டவனும் உங்கள் வாழ்வை அழிக்க நினைத்தானோ
இவ்வுலகில் இருந்து உங்கள் உயிர் போனாலும்
எங்கள் உள்ளங்களில் உயிரோடு இருக்கிறீர்கள்
உங்கள் கடமையெல்லாம் என்றென்றும் செய்திடுவோம்
கடமைகள் கனவுகளை நனவாக்கி வாழ்ந்திடுவோம்
எல்லாம் விதிவசமே நாம் என்ன செய்வோம் அப்பா
[illegible] அலைகள் மாறாது நம் கவலை
உங்கள் ஆத்மசாந்திக்கு ஆயிரம் அஞ்சலிகள்

மீசாலை மேற்கு, மீசாலை குடும்பத்தினர்.


# பாணாவிடை சிவனுக்கு நாளை தேர்

யாழ்ப்பாணம், மே 10

புங்குடுதீவு பாணாவிடை சிவன் கோயில் தேர்த்திருவிழா நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. முற்பகல் 10 மணிக்கு சுவாமி தேரில் ஆரோகணித்து திரு வீதி வலம் வந்ததும் பிற்பகல் ஒரு மணிக்கு பச்சை சாத்துதல் இடம்பெறும்.

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மாலை கொடியிறக்கமும் நடைபெறவுள் ளன.

"ஈழத்து இராமேஸ்வரம்" எனப்படும் இவ்வாலய பெருந்திருவிழா கடந்த 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ)

உதயன்
விளம்பரங்களுக்கு
advt@uthayan.com
0215671111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வடக்கை உலுக்கி அசைக்கும் போதைப் பொருள் பாவனை

வட மாகாணத்தில், மிகக்குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருகிறது. போதைப் பொருள் விற்பனையாளர்களை, இரகசியப் பொலிஸ் பிரிவினரைச் சிவில் உடையில் கடமையில் அமர்த்திக் கண்டுபிடிக்க முயன்ற போதிலும், அது பெரிய அளவில் வெற்றி தரவில்லை. குற்றவாளிகள் மிக இலகுவாக பொலிஸாரை இனங்கண்டு கொள்கின்றனர்.

மேற்போந்தவாறு கவலை வெளியிட்டுள்ளார், வடக்கு மாகாணத்தின் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஏ.ஜெயசிங்க.

ஒரு நாட்டை அல்லது அதன் பெரும் பிராந்தியத்தைக் கைப்பற்றுவதற்கு, அந்த நாட்டு மக்களை, இயன்ற வழிமுறைகள் அத்தனையையும் பயன்படுத்தி, போதைவஸ்து விழுங்குவோராக -- உட்கொள்வோராக -- மாற்றுவதே மிகச் சிறந்த மார்க்கம்.

அதனை விலாவாரியாக விளக்கி, அதனால் விளையும் சமூகப் பாதிப்புக்களையும், தாம் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் எடுத்துரைத்தார் பிரதிப் பொலிஸ்மா அதிபர்.

போதைப்பொருள் ஒழிப்பை இலக்கு வைத்து தாம் மேற்கொண்டுள்ள பணிக்கு மக்கள் தகவல் வழங்காவிடில், அது மிகக் கடினமான ஒன்றாகி, "பூமராங்" போன்று அவர்களையே திரும்பச் சென்று தாக்கும் என்றும் அவர் விஸ்தாரமாக விளக்கினார்.

தமக்குத் தகவல் வழங்குவோரை, எந்தச் சந்தர்ப்பத்திலும் காட்டிக் கொடுக்கமாட்டார் என்று ஊடவியலாளர்கள் ஊடாக அவர் உறுதி கூறியிருக்கிறார்.

வடக்கில் ஹெரோயின் போதைப்பொருள் பாவனை வேகவேகமாகப் பரவி வருகிறது. அது மட்டுமன்றி நீண்டகாலமாக பிரதான போதைப்பொருளாக விளங்கிய கஞ்சா தாராளமாகக் கிடைக்கும் நிலை பரவி வருகிறது. அதனூடாகவும் எமது பிரதேச இளைஞர்கள் கஞ்சாப் பாவனையால் தமது எதிர்காலத்தையே சீரழிக்கிறார்கள். உத்தியோகபூர்வ வட்டாரங்களின் தகவலின்படி இதன் பாவனை அல்லும் பகலும் அதிகரித்து வருகிறது. இவற்றை விற்பனை செய்வோரை மட்டுமன்றி, இவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் தம்மைத்தாமே நோயாளிகள் ஆக்குவோரையும், சமூகத்துக்கு பெருங்கேடு விளைவிப்போரையும் இனங்கண்டு தண்டிக்க வேண்டிய தேவை, அவசிய அவசரமாக மேலெழுந்து வருகிறது.

ஹெரோயின் பாவனை வடக்கின் முதலாவது எதிரியாக, ஏன் உயிர் கொல்லியாகவும் மாறும்வரை காலத்தைப் போக்காமல், உடனடி மாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மிகக் குறிப்பாக, இளைஞர் சமூகத்தைக் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பில் பெற்றோர், ஆசிரியர்கள், சமூக நலன்விரும்பிகள் ஒன்றிணைந்து செயற்படுவது தவிர்க்க முடியாத காலத்தின் தேவையாகும்.

ஆரம்பக் கட்ட நிலையில் அது தடுக்கப்படாவிடின், இளைஞர்கள் காப்பாற்றப்படாது போனால், புற்றுநோய் உடலை விரைந்து சேதமாக்கி உயிரைப் பறிப்பது போன்ற இழப்புகளும் சமூகக் கெடுதிகளும் வேகவேகமாகப் பரவிப் படரும்.

இது குறித்து ஒவ்வொருவரிடமும் சமூக நலன் நாடிய மனவேட்கை விரைந்து விளைந்து மேலெழ வேண்டும்.

பேரழிவைத் தரும் போதைப் பொருள் பாவனையைத் தடுப்பதற்கு, சமூக மட்டத்தில் விழிப்புணர்வும், ஒன்றித்த செயற்பாடும் அத்தியாவசியம். அதற்கான சமூகப் பொறுப்பு விரைந்து விளையட்டும், எமது மண்ணில்.

# தமிழர் தரப்புக்குத் தேவை புதிய பார்வை



■ கந்தவனம் கோணேஸ்வரன்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது நூறுநாள் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்திருக்கிறார். சிங்கள அரசியல்வாதிகள் தரப்பில் யார் என்ன சொன்னாலும், மைத்திரி தனது இலக்கில் வெற்றி கண்டிருக்கிறார் என்பதுதான் உண்மை.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் மைத்திரி ஆட்சியில் சொல்லிக்கொள்ளத்தக்க நன்மை எதனையும் அவர்கள் பெற்றுக் கொள்ளவில்லை. அமைதியாக வாழ்ந்தோம்; ஓரளவு பயம் குறைந்த வாழ்க்கையை அனுபவித்தோம் என்று சொல்லிக்கொள்ளலாமே தவிர, விடுதலை இலக்கில் ஒரு அங்குலமாவது முன்னேறியிருக்கிறோம் என்று சொல்வதற்கில்லை.

சந்திரிகா அரசு காலத்தில் நிலவிய ஒரு மாயத்தோற்றம் இப்போது இலங்கையை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. சந்திரிகாவின் தீர்வுத்திட்ட முயற்சிபோல், மைத்திரியின் நல்லெண்ண வாக்குறுதிகள் அடுத்த நகர்வுக்குத் தமிழர்கள் செல்லமுடியாத அளவில் இராஜதந்திர முட்டுக்கட்டை போட்டிருக்கின்றது.

போராட்டம் என்பது தமிழர்களின் விருப்பத்துக்குரிய தெரிவன்று. ஆனால், போராட்டத்தை நிறுத்தி விடுவோமானால், அடுத்த சந்ததிக்குத் தீங்கிழைத்தவர்களாகி விடுவோம். கிணற்றைத் தாண்டுவது என்று முடிவெடுத்துவிட்டால் முழுமையாகத் தாண்டியேயாக வேண்டும்.

இலங்கையின் நாடாளுமன்றம் எந்த நேரத்திலும் கலைக்கப்படலாம். பொதுத்தேர்தலை எதிர்கொள்ள நேரிடலாம். சரியாக வியூகம் வகுத்து செயற்படத்தவறினால் இதேமுறை தமிழர் தரப்பு தமது நாடாளுமன்றப் பலத்தை தக்க வைத்துக்கொள்வதுகூட சிரமமாகி விடும்.

கிழக்கு மாகாணத்தின் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவேளையில் காணப்பட்டதுபோலே இப்போதும் காணப்படுகிறார். மாகாணக் கல்வி அமைச்சில் தினமும் காலையில் சிங்களத்தில் தேசிய கீதம் இசைக்கப்படுகிறது. கல்விச் சுற்றறிக்கைகள் சிங்களத்தில் மட்டுமே வெளி வந்துகொண்டிருக்கின்றன. விளையாட்டுத்துறை அமைச்சின் நிகழ்ச்சிகள் சிங்களமயமாகக் காட்சியளித்ததால் அமைச்சரின் அணியைச் சேர்ந்த மாகாணசபை உறுப்பினர்கள் இருவரும், பிரதி சபைத் தலைவரும் மனம் பொறுக்க மாட்டாமல் நிகழ்ச்சியின் இடைநடுவில் வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள்.

கல்வித்துறையில் நாற்பது ஆண்டுகளாகச் சேவைசெய்த கல்வி அமைச்சருக்கு அந்தத் துறையின் அமைச்சுப் பொறுப்புகளைக் கவனிப்பதே பெரும்பாடாக இருக்கிறது. அவருக்குத் தெரியாமல் காரியங்கள் நடைபெறுகின்றன என்று அவரைச் சார்ந்தவர்கள் சமாதானம் சொல்லிக் கொள்கிறார்கள்.

ஊழல் செய்கின்றவர்களாலும், ஒழுக்க நெறியில் பிழைவிடுபவர்களாலும் ஒருபோதும் போராட்ட உணர்வுடன் செயற்பட முடியாது. தங்களைக் காப்பாற்றிக்கொள்வதற்காக அதிகாரத்தில் உள்ளோர்களுடன் சமரசம் செய்துகொள்வதுதான் இவர்களுடைய அரசியலாக இருக்கும். இத்தகைய நிலையில், வாக்களித்த மக்கள் நிச்சயம் ஏமாற்றப்படுவார்கள். நேர்மையான, ஊழலற்ற துணிவுடையவர்கள்தான். இன்று தமிழ் மக்களுக்குத் தேவையானவர்களாக இருக்கிறார்கள்.

இந்த நிலையில்தான் நாடாளுமன்றத் தேர்தலும், உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களும் இடம்பெறக் கூடிய சூழல் நெருங்கி வருகிறது. இப்போது மக்களின் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் தங்கள் இருப்பை மீளவும் உறுதிசெய்து கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். எதிர்வரும் தேர்தல்களில் மக்கள் பிரதிநிதிகளாக வருவதற்கு விரும்புபவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கீழ் போட்டியிடும் அனுமதிக்காக இப்போதே அலுவல்கள் பார்க்கத் தொடங்கி விட்டார்கள்.

தந்தை செல்வா காலத்தில் தமிழர்களின் அரசியல், புனித வேள்வியாகவே இருந்தது. கொள்கைப் பற்று உள்ளவர்களே மக்கள் பிரதிநிதிகளாயினர். நேர்மையுடனும், துணிச்சலுடனும் செயற்பட்டனர். தன்னலங் கருதாது மக்களுக்கு நன்மைகளைச்செய்தனர். பொது மக்கள் பணத்திலிருந்து ஒரு சதத்துக்கேனும் ஆசைப்படாத உத்தமர்களாகவாழ்ந்திருந்தனர்.

2010 தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்த சில உதிரிகள் தமிழின ஒற்றுமைக்கு மாறாக தங்கள் பதவிகளையும் பாரம் பரியங்களையும் முன்னிறுத்திச்செயற்பட்டு மக்களிடமிருந்து தொலைந்து போனவர்களாக ஆகிப் போய் விட்டனர்.


> "தந்தை செல்வா காலத்தில் தமிழர்களின் அரசியல், புனித வேள்வியாகவே இருந்தது. கொள்கைப் பற்று உள்ளவர்களே மக்கள் பிரதிநிதிகளாயினர். நேர்மையுடனும், துணிச்சலுடனும் செயற்பட்டனர். தன்னலங் கருதாது மக்களுக்கு நன்மைகளைச் செய்தனர்.

தமிழர்களின் போராட்ட உணர்வுகள் திசைமாற்றப்பட்டு நாடாளுமன்றக் கதிரைகளுக்கும், மாகாண உள்ளூராட்சிச் சபை ஆசனங்களுக்கும் போட்டியிடுவதே அரசியல் என்றாகிவிட்டது. இதில் வெற்றி பெறுபவர்களே தமிழ் மக்களின் தலைவர்கள் என்ற நிலைமையும் மெல்ல மெல்லத் தோன்றிவருகிறது.

இவை போராடுகின்ற இனத்தின் எதிர்காலத்துக்கு நன்மை தரக் கூடியவை அல்ல. 19ஆவது அரசமைப்புத் திருத்தச்சட்டத்தின் மூலம் இலங்கை அரசு உலக அரங்கில் தலை நிமிர்ந்து நிற்கிறது. இதில் இலங்கையர் என்று நாமும் பெருமைப்படலாமே தவிர, தமிழர்கள் என்று மகிழ்ச்சியடைவதற்கு எந்த நியாயமும் இருப்பதாகத் தெரியவில்லை. மாறாக, நல்லரசு என்று உலகரங்கில் சான்றிதழ் வாங்கியவர்களிடமிருந்து எங்கள் உரிமைகளை மீட்டுக்கொள்ள வேண்டியவர்களாக நாங்கள் இருக்கின்றோம்.

இதற்கேற்றாற்போல் வியூகங்களை வகுக்கவேண்டிய பொறுப்பு தமிழர் தலைமையிடம் இருக்கிறது. கோஷம் போடுகிறவர்களையும், கோமாளித்தனங் கள் செய்கின்றவர்களையும் மக்கள் பிரதிநிதிகளாக்கினால் போராட்டம் சிதைவடைந்து போய் விடும் என்பது தமிழர் தலைமைக்குப் புரியாததல்ல. தேர்தலில் தமிழர் தலைமை புதிய பார்வையுடனும், புதிய எழுச்சியுடனும் அடியெடுத்து வைப்பதே இன்றைய தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# A GREAT PLACE WANTS YOU

As Sri Lanka's largest entity to be recognized by the global Great Place to Work index, Singer is an employer of choice. Singer instills a culture of trust within the workplace, where a 160-year tradition of delivering Trusted Excellence continues. Our employees take pride in distributing leading brands such as Singer, SISIL, Sony, Samsung, Huawei, Hitachi, Philips, Whirlpool and Kenwood. From industry-best IT systems to environmentally-friendly manufacturing facilities, we are empowered by innovation and sustainability. Our retail and service network are the largest in the nation, giving millions of Sri Lankans access to a better standard of living. Our 410 retail stores, 11 service centres and 10 Singer Finance branches are spread across the country, and bring together employees from all walks of life. Singer is one of the Top Ten Corporate Citizens and the Number One Brand in Sri Lanka.

## BRANCH MANAGERS
(Singer Plus/SISIL World Showrooms)

Responsible for planning, organizing and managing the branch's day-to-day business activities, the ideal candidate would have an entrepreneurial mindset. Applicants should be mature individuals between the age of 30 and 40 years, with knowledge of hire-purchase, inventory management, customer care, visual merchandising and marketing activities. Strong people management skills will be critical to success.

Selected candidates will be charged with achieving aggressive monthly sales targets, maintaining a stringent recovery ratio, managing inventory and independently leading a motivated team.

A security deposit of Rs. 150,000/- will be required of successful applicants, as proof of financial strength. You can look forward to a six-figure monthly income, inclusive of incentives and commissions. Selected candidates will undergo extensive training with exposure to all sales and administrative functions of a retail store.

## TRAINEE ASSISTANT BRANCH MANAGERS
(Singer Plus/SISIL World Showrooms)

Applicants for this position should be between 28 and 35 years of age and have achieved strong results in G.C.E. A/L and G.C.E. O/L examinations (including credit passes in English and Mathematics) or possess an equivalent higher educational qualification.

Selected candidates will undergo extensive training with exposure to all the sales and administrative functions of a retail store. High performers will be eligible to advance to a Branch Manager position. Successful applicants will receive a generous allowance.

---

**Vacancies available island-wide due to extensive branch expansions in all districts.**

Singer, as an equal opportunity employer, encourages both female and male candidates who meet the above criteria to apply for the above position. Please send in your CV together with the contact details of two non-related referees to the address given below or e-mail **chamindamu@singersl.com** within 7 days of this advertisement. Please indicate the post applied for on the top left corner of the envelope or in the subject field of the e-mail.

**Assistant Manager – Recruitment & Systems**
**Singer (Sri Lanka) PLC | 80, Nawam Mawatha, Colombo 2**

GREAT PLACE TO WORK
Best companies to work for 2014
Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SINGER
Trusted Excellence

# சந்தைகளில் சரிந்தது வாழைப்பழத்தின் விலை

யாழ்ப்பாணம், மே 10

வாழைப்பழத்தின் விலை திடீரென சரிவடைந்துள்ளது. கடந்த வாரம் கிலோ 50 ரூபாவாக விற்கப்பட்ட கதலிப்பழம் தற்போது கிலோ 25 ரூபாவாக சரிந்து காணப்படுகின்றது.

வலி.வடக்கு மற்றும் வலி. கிழக்கு பிரதேசத்தில் கடந்த திங்கட்கிழமை மழையுடன் வீசிய மினி சூறாவளி காற்றால் அனேகமான வாழைத் தோட்டங்களில் குலைகளுடன் வாழைகள் முறிவடைந்தன.

இதன் காரணத்தால் முறிந்த காய்க் குலைகள் அதிகளவில் சந்தைக்கு வந்து சேர்வதால் வாழைக் குலைகளின் விலை திடீரென சரிவடைந்து காணப்படுகின்றது.

இதேசமயம், நீர்வேலி வாழைக் குலை விற்பனை சந்தைக்கு கடந்த புதன், வியாழக் கிழமைகளில் பெரும் எண்ணிக்கையான வாழைக்குலைகள் வந்து சேர்ந்தன.

தென்பகுதியில் இருந்தும் வாழைக் குலை வியாபாரிகள் சந்தைக்கு வருகை தந்து, வாழைக்குலைகளைக் கொள்வனவு செய்து கொண்டு சென்றனர்.



இதேசமயம் திருநெல்வேலி, சுன்னாகம், மருதனார்மடம் போன்ற சந்தைகளில் வாழைக் குலைகளின் விலை வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. (வ-17)

# மாணவர் கற்றல் செயற்பாட்டை மேம்படுத்தும் கலந்துரையாடல்

வவுனியா, மே 9

வவுனியா மூன்றுமுறிப்பு பாடசாலையில் க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்கு இவ் வாண்டு தோற்றவுள்ள மாணவர்களின் கற்றல் ஆற்றலை மேம்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது.

வவுனியா மூன்றுமுறிப்பு பாடசாலை, வவுனியா நகரில் இருந்து கண்டி வீதியில் வவு னியா நகரில் இருந்து ஒரு கிலோமீற்றருக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ளது. வறிய மாணவர்களைக் கொண்ட குறித்த பாடசாலையில் தேக்கவத்தை, மூன்றுமுறிப்பு, தோணிக்கல், மத குவைத்தகுளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். அவர்களின் கற்றல் ஆற்றலை மேம்படுத்தும் முகமாக பாடசாலை மட்டத்தி லும் பாடசாலை அதிபர் எஸ். பொன்னம்பலம் தலைமையில் பெற்றோர் மட்டத்திலும் கலந்து ரையாடல் முன்னெடுக்கப்பட்டது. மாணவர்களின் ஒவ்வொருவரது கற்றல் செயற்பாடுகள் குறித்தும் அந்தந்த பாட ஆசிரியர்கள் வகுப்பு ஆசிரியர்களிடமும் கலந்து ஆலோசிக்கப்பட்டது. (வ-402)

# பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகளில் சமூக நிறுவனங்களின் பங்களிப்பும் தேவை

## யாழ். மாவட்ட சபை முன்னாள் தலைவர் கூறுகிறார்

அச்சுவேலி, மே 10

பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகளில் சமூக நிறுவனங்களும் பெற்றோரும் விழிப்புணர்வோடு கூடிய நிலையில் கவனம் செலுத்த வேண்டும். பரீட்சைகளில் சித்தியடைவதற்கு ஏற்ற வகையில் உற் சாகப்படுத்த ஊக்குவிக்க முன் வரவேண்டும்.

பொருத்தமானமுறையில்உற்சாகப்படுத்துவதன் மூலம்மாணவர்கள்கற்றல்செயற்பாட்டில்இருந்து இடை விலகுவதைத் தடுத்து நிறுத்தலாம்.

இவ்வாறு கூறினார் யாழ். மாவட்ட சபையின் முன்னாள் தலைவர் ஆ.ந.இராசேந்திரம்.

பத்தமேனி இளங்கதிர் சனசமூக நிலையத்தில் க.பொ.த்.சாதாரண தரம் மற்றும் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி உற்சாகப்படுத்தும் நிகழ்வு நடைபெற்றது.

இளங்கதிர் சனசமூக நிலையத்தின் முன்றிலில் கு.சூரியப் பிரகாசம் தலைமையில் நடைபெற்ற மாணவர்களை பாராட்டும் நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

"இன்று மாணவர்கள் உரிய முறையில் கண்காணிப்பு மற்றும் ஊக்குவிப்பு உதவிகள் இல்லாத நிலையில் பாடசாலைக் கல்வியில் இருந்து இடைவிலகிக் கொள்கின்றனர். கற்றலில் இடைவிலகல் ஆரம்ப வகுப்புக்களில் இருந்து ஆரம்பமாகின்றது. இதனைத் தடுத்து நிறுத்தி தொடர்ந்து கற்பதற்கான சூழலை உருவாக்குவதில் சமூக நிறுவனங்களும் பெற்றோரும் விழிப்புணர்வோடு செயற்பட வேண்டும். மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு உதவுவதற்கு புலம் பெயர் உறவுகள் காத்திருக்கின்றன. அதனை உரிய முறையில் பயன்படுத்த முன்வர வேண்டும். பரீட்சைக்கு ஒரு தடவை தோற்றிய நிலையில் சித்தியடையவில்லை என்பதால் மீண்டும் தோற்றுவதற்கு முன்வராமல் விட்டுவிடுகின்றனர். இந்த நிலையில் மாணவர்கள் முயற்சி செய்து முன்னேற முன்வரவேண்டும். மாணவர்களின் கற்றல் செயற்பாடு களுக்கு சமூக நிறுவனங்கள் காத்திரமான தொடர் பங்களிப்பை வழங்க முன்வர வேண்டும்"-என்று கூறினார்.

மாணவர்களுக்கு கற்றல் சாதனங்கள் மற்றும் பண உதவிகள் வழங்கப்பட்டன. (வ-11)












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்பத்து காட்டுப் பகுதி அழிப்பு விசாரணை கோருகிறார் ரிஷாத்

கொழும்பு, மே 10

வில்பத்து காட்டுப் பகுதி அழிக்கப்படுவது தொடர்பில் விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவிடம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் கோரிக்கை விடுத்துள்ளார். குறித்த விவகாரம் தொடர்பில் தன் மீது போலிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப் படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வில்பத்து காட்டுப் பகுயை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் அழிப்பதாக வெளிவரும் செய்திகள் தொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் மாநாடு வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்றது. அங்கு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்:

"முஸ்லிம்களுக்கு எதிராக செயற்பட்ட அமைப்புக்களின் மற்றுமொரு சதியே வில்பத்து காடழிப்புக்கு என் மீது பழி சுமத்துவது. மன்னார் மாவட்டத்தில் எந்தவொரு வெளி மாவட்டத்தாரின் குடியேற்றமும் இடம்பெறவில்லை என்றும் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களே அங்கு மீளக்குடியேறுகின்றனர்.

20 வருடங்களுக்கு மேலாக முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களின் மீள் குடியேற்றம் பற்றி பேசுகின்றோம். ஆனால் அரசு இது தொடர்பில் அக்கறை செலுத்த வில்லை. திட்டமிடப்பட்ட மீள் குடியேற்றம் அங்கு நடைபெறவில்லை. அவர்களது காணிகள் துப்புரவு செய்து கொடுக்கப் படவில்லை.

இந்த நிலையில் அந்த மக்களது வாக்கினால் நாடாளுமன்றம் சென்ற நான் இது தொடர்பில் பேசுவது அல்லது முயற்சிப்பது பிழையா? இதனை வைத்துக் கொண்டு சில ஊடகங்கள் எமக்கு எதிராக உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிடுவதுடன் முஸ்லிம்கள் தொடர்பில் ஏனைய மதத்தவர்கள் மத்தியில் பிழையான பார்வையினை ஏற்படுத்துகின்றனர்.

நாட்டில் மதச் சுதந்திரம் இருக்கின்றது. ஆனால் கடந்த அரசின் இறுதி இரண்டு வருடங்கள் முஸ்லிம்களுக்கு எதிராக இனக் குழுக்கள் மேற்கொண்ட அடக்குமுறைகள் குறித்து நாம் அறிவோம். அது போன்று தான் இந்த வில்பத்து விடயத்தை பார்க்கின்றேன். நான் காணி அமைச்சரல்ல. இந்த மக்க



ளுக்கு வழங்கப்பட்ட காணிகள் உரிய அரசின் சட்ட திட்டங்க ளுக்கு அமைய வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெளிவாக கூறிக்கொள்ள விரும்புகின் றேன்.

வடக்கு முஸ்லிம்கள் இந்த நாட்டை பிரிப்பதற்கு துணை போனவர்கள் அல்ல. இந்த நாட்டில் அனைவரும் சமமாக வாழ வேண்டும் என்ற ஆசையுடன் வாழ்பவர்கள். என் மீது சுமத்தப்பட்ட இந்த குற்றச் சாட்டுக்களை நிரூபிக்கும் பட்சத்தில் அதற்கான தண்ட னையை ஏற்றுக் கொள்ளத் தயாராகவுள்ளேன்.

அதேவேளை அரசில் உள்ள அமைச்சரவை அமைச்சர் என்ற வகையில் இது தொடர்பில் விசாரணை நடத்த ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளேன். ஊடகங்கள் கூறுவதுபோல் நான் பாகிஸ்தான் மற்றும் இலங்கையின் வேறு மாவட்ட மக்களை மீள்குடியேற்றம் செய்திருப்பதை ஊர்ஜிதம் செய்தால் எனது அமைச்சுப் பதவியினையும் துறக்கத் தயாராகவுள்ளேன்' என்றார். (வ-10)


www.dpmco.com

மற்றும் சிறந்த தகைமைகளையும் திறமைகளையும் ஒருங்கிணைந்த இளைஞர்களுக்கு விடுக்கும் ஓர் உன்னத அழைப்பு

## பயிற்சி விற்பனை பிரதிநிதிகள்
(வட பகுதி)

உத்தியோகத்தின் மாதிரி

விண்ணப்பதாரர் விற்பனைத்துறையில் தேர்ந்த அறிவினைக் கொண்டிருத்தல் வேண்டும். விற்பனைத்துறையின் அனைத்துவிதமான அங்கங்களையும் நன்கறிந்திருத்தல் வேண்டும். நல்லொழுக்கத்துடனும் சிறந்த ஈடுபாட்டுடனும் கடமையாற்றக்கூடியவராக இருத்தல் அவசியம். அத்துடன் நாட்டின் எப்பிரதேசத்திற்கும் சென்று கடமையாற்றக்கூடியவராகவும் களக்கடமையை மேற்கொள்ளக்கூடியவராகவும் இருத்தல் அவசியம்.

தகைமைகள்

விண்ணப்பதாரர் 20 முதல் 25 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். க.பொ.த. உயர்தரத்தில் இரு சித்திகளும் க.பொ.த. சாதாரண தரத்தில் ஆங்கிலம் மற்றும் கணிதப் பாடங்களில் சாதாரண சித்தியினையும் பெற்றிருத்தல் வேண்டும். கணிணித்துறையில் (MS Word / Excel / Power Point) விசேட நிபுணத்துவம் பெற்றிருத்தல் அவசியம். அங்கிகரிக்கப்பட்ட வாகன சாரதி அனுமதிப்பத்திரம் இருத்தல் அவசியம். முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் மன்னார் போன்ற பிரதேசங்களிலிருந்து விண்ணப்பிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழி புலமையானது அத்தியாவசிய தகைமையாக கருதப்படுகின்றது. முன் அனுபவம் மற்றும் தகைமைகள் அடிப்படையில் ஊதியம் தீர்மானிக்கப்படும், இவ் வாய்ப்பானது உங்களது தொழில் மற்றும் வாழ்க்கை அபிவிருத்தியினை அதிகரித்துக்கொள்வதற்கான ஓர் சிறந்த வாய்ப்பாகும்.

நாம் நோக்கும் நபர் நீங்களெனில் உங்கள் சுய விபரக்கோவையினை இவ் விளம்பர பிரசுரத்தின் பின் ஏழு நாட்களுக்குள் உங்களது தொடர்பு விபரங்களுடனும் இரு உறவினர்கள் அல்லாத மத்தியஸ்த்தர்களின் பெயர் மற்றும் விபரங்கள் ஆகியவற்றுடன் எமக்கு கிடைக்கப்பெறச்செய்யவும்.

David Pieris Group of Companies



## Save the Children

### Project Officer (JICA) – Mullaitivu

- Qualification in Education or other relevant fields.
- 5 years working experience with minimum 3 years' experience in the education sector.
- General understanding of children's education as well as children's issues in the Northern Province of Sri Lanka.
- Ability to collect, sort and analyze information.
- Excellent interpersonal, communication and presentation skills.
- Fluency in written and spoken in Tamil and English.

**Salary will commensurate with experience & qualifications.**

Refer our web site http://srilanka.savethechildren.net for the specific job profile.

Interested candidates are encouraged to submit a cover letter and CV before 19th May 2015, stating the position on the top left corner of the envelope or as the subject of the e-mail.

**All recruitment practices and procedures reflect Save the Children's commitment to protecting children from abuse**

SUCCESS ADZ

**Save the Children International**

12, Amarasekara Mawatha, Colombo 5

E-mail: slhr@savethechildren.org or apply via online

Only applicants selected for the interview will be contacted.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









துணுக்காய் பிரதேச செயலக கலாசார விழா அண்மையில் மிக விமரிசையாக நடைபெற்றது. விழாவின் சில காட்சிகளை இங்கு காணலாம். (வ)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தும்பளை மேற்கு சன சமூக நிலையத்தின் ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட யோகாசன கண்காட்சியில் யோகா ஆசிரியர் தே.தேவராஜேந்திரனின் வழிகாட்டலில் மாணவர்கள் வழங்கிய யோகாசன நிகழ்வை இங்கு காணலாம். (வ–173)



வவுனியா பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகளின் வேப்பங்குளம், ஓமந்தை. சின்னப் புதுக்குளம் உட்பட்ட வங்கிக் கிளைகள் தமிழ் சிங்கள புது வருடத்தை முன்னிட்டு இணைந்து நடத்திய மாபெரும் விளையாட்டுப் போட்டி அண்மையில் வவுனியா வைரவப் புளியங்குளத்தில் வவுனியா பிரதேச செயலாளர் க. உதயராசா தலைமையில் இடம்பெற்றது. இதில் பாரம்பரிய விளையாட்டுக்கள் இடம் பெற்றதுடன் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் பிரதேசசபை ஊழியர்கள், சமுதாய அடிப்படை வங்கி உத்தியோகத்தர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.(வ)



சுன்னாகம் பிரதேச அபிவிருத்தி வங்கியில் ஒரு லட்சத்துக்கு வைப்பிலிட்ட இணுவில் அளவோடையைச் சேர்ந்த சிவானந்தசர்மா கீதஷ்ஸ்ரீ என்பவருக்கு புதிய லுமாலா சைக்கிளொன்றை வைபவ ரீதியாக பிரதேச அபிவிருத்தி வங்கி முகாமையாளர் கே.லட்சுமண சர்மா வழங்கினார். (வ–173)











சர்வதேச மகளிர் தினம் சுழிபுரம் பாரதி கலை மன்றத்தில் மன்றத் தலைவி திருமதி சுதாகரன் தலைமையில் அண்மையில் அனுட்டிக் கப்பட்டது. நிகழ்வின் போது வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார். முன்னதாக அருகில் உள்ள ஆலயத்தில் வழிபாடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து மழலைகள் வரவேற்புடன் பிரதம விருந்தினர் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வில் பல சிறுவர் மற்றும் மகளிர் நிகழ்வுகள் இடம்பெற்றன. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னாள் ஊடகவியலாளரும் இளைப்பாறிய நவாலியூர் அமரர் பொ.பொன்னுத்துரையின் பாரியார் சறோஜினிதேவிக்கு வலி.தென்மேற்கு பிரதேச செயலாளர் (உதவி) திருமதி நே.செல்வகுமாரியினால் அரச ஒய்வூதிய நம்பிக்கை நிதியத்தினால் இறப்பு மானிய நன்கொடை வழங்குவதைக் காணலாம். (ஒ-50)



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நவாலி அட்டகிரி சிவன் தேவஸ்தானத்தில் திருவாதிரை உற்சவத்தின் போது சுவாமி தேரில் வீதி வலம் வருவதையும், ஆலய பிரதம குரு சிவத்திரு கா.துரைச்சாமி குருக்கள் விசேட பூசை வழிபாடு நடத்துவதையும் காணலாம். (ஒ-50)

கைதடி கிழக்கு வளர்மதி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் முன்பள்ளி மைதானத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சுரேஸ் பிரேமச்சந்திரன் வெற்றியீட்டிய மழலை ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் அருகில் வளர்மதி விளையாட்டுக் கழகத் தலைவர் எஸ். கபிலன் நிற்பதையும் காணலாம். (ஒ-288)





மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலையில் நடைபெற்ற வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு மற்றும் வலிகாம வலய பிள்ளை நேயப் பாடசாலைகளுக்கு இடையிலான கண் காட்சிப் போட்டியில் கோட்ட, வலய மட்டங்களில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டதை அடுத்து நடைபெற்ற சிறப்பு நிகழ்வில். (ஒ)





யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் கீழ் இயங்கும் கைதடி தொழிற்பூங்காவுக்கு அங்கு தங்கியுள்ளோரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அண்மையில் இரு குடும்பங்களினால் நிதியுதவிகளும் உணவுப் பொருள்களும் வழங்கப்பட்டன.

கைதடி மேற்கைச் சேர்ந்த தொழிலதிபர் லயன் து.மகேந்திரன் தம்பதிகள் ஒரு தொகை நிதியையும், கைதடி வடக்கைச் சேர்ந்த பிரான்ஸ் வாழ். உறவுகளான வாமதேவன் மீரா தம்பதிகள் ஒரு தொகை நிதியையும் அண்மையில் தொழிற்பூங்காவுக்கு நேரடியாக வருகை தந்து வழங்கியதுடன் சிற்றுண்டிகளையும் விழிப்புலனற்றோருக்கு வழங்கி மகிழ்வித்தனர். (ஒ-288)



கிளிநொச்சி மாவட்ட மாற்றுத் திறனாளிகளை, சமூக சேவைகள் அமைச்சால் வழங்கப்படவுள்ள 3 ஆயிரம் ரூபா கொடுப்பனவுக்கு இணைப்பது தொடர்பாக ... சமூக சேவைகள் திணைக்கள அலுவலர்களுக்கான செயலமர்வு அண்மையில் மாவட்ட செயலக மண்டபத்தில் இடம்பெற்றபோது சமூக சேவைகள் அமைச்சின் திட்டப் பணிப்பாளர் எஸ்.இராமமூர்த்தி வளவாளராகக் கலந்து கொண்டு உரையாற்றினார். (வ-9)



தர்கிலைமடு அ.த.க.பாடசாலையில் புதுவருடத்தை ஒட்டி கல்வி, விளையாட்டுத் துறை மற்றும் பண்பாட்டுத்துறை அமைச்சும் மாவட்டச் செயலகமும் இணைந்து நடத்திய விளையாட்டு நிகழ்வுகள். (வ-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கந்தன்குளம் சண் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்திய கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி அண்மையில் நடைபெற்றது. மேற்படி விளையாட்டுப் போட்டிக்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனும் சிறப்பு விருந்தினராக வட மாகாணசபை உறுப்பினர் மருத்துவ கலாநிதி சி.சிவமோகனும் கலந்து கொண்டு நிகழ்வைத் தொடக்கி வைத்தனர். (வ)



வவுனியா கலைமகள் சனசமூக நிலையமும் கலைமகள் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்திய 31 ஆவது சித்திரைப்புத்தாண்டு விளையாட்டுப்போட்டி அண்மையில் சனசமூக நிலைய தலைவர் இ.செல்வராசா தலைமையில் கலைமகள் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக வட மாகாண சபை உறுப்பினரும் கலைமகள் சனசமூக நிலைய போசகருமான ம.தியாகராசா மற்றும் சனசமூக நிலைய உறுப்பினர்கள், விளையாட்டுக்கழக உறுப்பினர்கள், பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டனர். (வ)



கொக்குவில் வளர்மதி முன்பள்ளி மாணவர்கள் மலரும் தமிழ் சிங்கள புத்தாண்டை வரவேற்கும் விழாவொன்றை அண் மையில் கொண்டாடியிருந்தனர். தமிழ் சிங்கள புது வருடத்தை அடையாளப்படுத்தும் வகையில் ஆசிரியைகளும், எமது வருங்காலத் தலைவர்களும் தமிழ், சிங்களப் பாரம்பரிய உடைகளை அணிந்திருந்தனர். நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக, பாரம்பரிய விளையாட்டுக்கள் நடைபெற்றன. (வ)



பரி.யோவான் கல்லூரி ஆசிரியர் ஜெ.துஷிராஜ், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட 4 ஆம் வருட மாணவன் ஜெ.துஜீவன் ஆகியோரால் சுன்னாகம் பொதுநூலகத்தில் 'மாணவர்களுக்கான ஆங்கிலம்' என்னும் நூல் வெளியீட்டு விழா அண்மையில் நடத்தப்பட்டது. நிகழ்வுக்கு வடமாகாண கல்வி, கலாசார, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் பிரதம விருந்தினர்களாகவும், சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் வண. என்.ஜே. ஞானப்பொன்ராஜா மற்றும் வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலய அதிபர் ஜே.யூட் மரியரட்ணம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும், யாழ். பல்கலைக்கழக ஆங்கில மொழி சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கே .சிவாஜி நூல் ஆய்வாளராகவும் கலந்து கொண்டனர். (வ)



நவாலி தெற்கு முதியோர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் அபிவிருத்திக் கூட்டமும் நவாலி ஹேமலதா ஞாபகார்த்த சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் சங்கத் தலைவர் சி. தேவராசா உரையாற்றுவதையும் அருகில் செயலாளர் பொ. ஆனந்தராசா, வி.க.இராசதுரை, சமாசத் தலைவர் ச.சர்வானந்தன், சிரேஷ்ட பொது சுகாதார பரிசோதகர் வி. பரமேஸ்வரன் ஆகியோரையும் காணலாம். (ஒ-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணத்து நகரப்புற பாடசாலை மாணவத் தலைவர்களுக்கான பிறிஃபெக்ஸ் பயிற்சிப் பட்டறை அண்மையில் யாழ். வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் நடைபெற்றது. மாணவத் "தலைவர்களையும் தலைமைத்துவமும்" கட்டுப்பாடும் என்னும் பொருளில் சொற்பொழிவாற்றிய பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசனையும் காணலாம். (ஒ)





சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. பாண்ட் வாத்திய அணியினருடன் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் பிரதம விருந்தினர் சி. கந்தசாமி (பிரதிக் கல்விப் பணிப்பாளர்) பரிசில் வழங்குவதையும் அதிபர் திருமதி ம.குணபாலனையும் காணலாம். (ஒ)





மன்னார் கௌரியம்பாள் அ.த.க.பாடசாலையில் 2014 இல் க.பொ.த. (உ/த) பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 86 வீதத்தினர் அதில் சித்தி பெற்றுள்ளனர். பரீட்சைக்குத் தோற்றிச் சித்தி பெற்ற மாணவர்கள் அனைவரையும் பாராட்டி முன்னாள் அதிபர் க.இரத்தின பூபாலன் பணப் பரிசில் வழங்கிக் கௌரவிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் காணலாம். (ஒ)







இலங்கை அரச பாடசாலைகள் இடையே இன, மத ஒற்றுமையை வளர்க்கும் நோக்கில் முன்னெடுக்கப்படும் "அன்பின் கல்விக் கூடம்" செயற்றிட்ட நிகழ்வுகள் மல்லாகம் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றன. இதில் குருநாகல் – மாவத்தகம மத்திய மகா வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

மாவத்தகம மத்திய மகா வித்தியாலய அதிபர் எச்.எம்.ஜி. ஹேரத் மற்றும் 14 ஆசிரியர்களும் 6,7 ஆம் திகதிகளில் மல்லாகம் மகா வித்தியாலயத்தில் தங்கியிருந்ததுடன் பல்வேறு நிகழ்வுகளிலும் கலந்து கொண்டனர். நிகழ்வில் சில காட்சிகள். (ஒ)





வரணி வடக்கு அ.த.க. பாடசாலையின் வருடாந்த விளையாட்டு நிகழ்வின் போது பிரதம விருந்தினர் மற்றும் சிறப்பு விருந்தினர்களான வடமாகாண சபை உறுப்பினர் வே. சிவயோகன் மற்றும் தென்மராட்சி கல்வி வலய அழகியல்துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் கோ.கைலைநாதன் உள்ளிட்ட பிரமுகர்கள் பாடசாலை அதிபர் நடராசா வசந்தரூபன் தலைமையில் பாடசாலை மாணவர்களின் பாண்ட் [illegible] அழைத்து வரப்படுவதையும், அதிபர் வித்தியாலய கொடியை ஏற்றி [illegible] காணலாம். (ஓ-122)





மாதிரி சந்தை செயற்றிட்டம் நிகழ்வு அண்மையில் திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளியில் நடைபெற்றது. முன்பள்ளிப் பணிப்பாளர் திருமதி த.கர்ணி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முன்பள்ளிச் சிறார்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். (ஒ-29-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன்துறை தெற்கு பளை நகரிலுள்ள சுயம்பு மூர்த்த பராசக்திக்கு பாலஸ்தாபனம்






யாழ்ப்பாணம், மே 10
அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட காங்கேசன்துறை தெற்கு பளை நகரில் சுயம்பு மூர்த்தமாக வீற்றிருக்கும் வரலாற்றுப் பெருமை வாய்ந்த ஸ்ரீ பராசக்தி அம்பாள் ஆலயத்தின் பாலஸ்தாபன பூசை வழிபாடுகள் 25 வருடங்களின் பின்பு கடந்த முதலாம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.
ஆலயத்தின் அறங்காவலர் கோ.சி. பாலகுருநாதன் தலைமையில் நடைபெற்ற பூசை வழிபாட்டு நிகழ்வில் பராசக்தி அம்பாளுக்கு விசேட பூசைகள் பாலஸ்தாபன அபிசேகம் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.
பூசை நிகழ்வில் சிவத்திரு குமார சுவாமி ஐயா கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினார். 25 வருடங்களின் பிற்பாடு மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட மக்கள் பூசை வழிபாட்டில் கலந்து கொண்டார்கள்.
அந்த ஆலயத்தின் எழுந்தருளி விக்கிரகம், சிங்கம், குதிரை வாகனங்கள், ஆலயத்தின் பூசை வழிபாட்டுப் பொருள்கள், பிள்ளையார் விக்கிரகம், வைரவர் விக்கிரகம் என்பன மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட போது ஆலயத்தில் இல்லாது களவாடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

## வவுனியாவில் டெங்கு கட்டுப்பாட்டு விழிப்புணர்வுச் செயற்பாடுகள்

வவுனியா, மே 10
டெங்கு நுளம்பினை கட்டுப்படுத்தும் முகமாக வவுனியா நகர சுகாதாரப் பணிமனையினர் வீதிகளில் புகைஅடித்தல் மற்றும் விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.
வவுனியாவில் அண்மைக் காலமாக மாலை வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்து வருகின்றது இவ்வாறான மழையின் போது ஆங்காங்கே மழை நீர் கணிசமான அளவு தேங்கி நின்று டெங்கு நுளம்புகள் வர்த்தக நிலையங்களின் முற் பகுதி உட்பட பல்வேறு இடங்களில் பெருகிக் காணப்படுவதை இனங் கண்ட சுகாதாரப் பிரிவினர் புகையூட்டல் மற்றும் சிரமதானப் பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர். இந்தப்பணிக்கு பொது மக்கள் மத்தியில் வரவேற்புக் கிடைத்துள்ளது. (வ-402)






ஆயுர்வேதத்தில் கண்டறியப்பட்ட மருத்துவ மூலிகைகள் 9 இன் சாற்றுடன் இயற்கையாக குளிரூட்டும் மென்தோலுடன் இயற்கையான விற்றமின் "E" யும் சேர்த்து விஞ்ஞான முறைப்படி நவீன தொழிநுட்பத்தை கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

தினசரி பாவனையின் மூலம்

* தலைக்கு குளிர்ச்சியை தருகின்றது
* தலைவலிக்கு நிவாரணத்தை அளிக்கிறது
* நாள் முழுவதும் புத்துணர்ச்சியை தருகின்றது
* தலைமுடிக்கு போசணை வழங்கி ஆரோக்கியத்தை அளிக்கிறது

ரூ.190/=

LINK NATURAL

HAIR CARE COOL

LINK லிங்க் நெச்சுரல் புரொடக்ஸ் தனியார் நிறுவனம் சீ.ஐ.சீ. இல்லம் 199, கில் வீதி, கொழும்பு 02. தொ.பே.எண். : 011-2409294 மின்அஞ்சல் : info@linknaturalproducts.com இணையம் : www.linknaturalproducts.com

ALPHA α

YAMAHA



ரூ. 225,900/-

மனம் உண்டானால் தாராளமாக குடும்பத்திற்கே இடம் உண்டு



5 YEAR WARRANTY

மிகவும் பாதுகாப்பான பெரிய ஸ்கூட்டர்!

புதிய Yamaha Alpha இப்பொழுது கால்களுக்கான தாரான இடவசதியையும் தாராள ஆசன வசதியையும் தாரான இடவசதி உடைய கபியையும் கொண்டதுடன் அதிக சுமையைத் தாங்கக்கூடியவாறும் தயாரிக்கப்பட்டுள்ளது! அகன்ற தோற்றம் பாதுகாப்பை அதிகரிப்பதனால் இது உங்கள் குடும்பத்திற்கு மிகவும் ஏற்ற ஸ்கூட்டராகும். மேலதிக விபரங்களுக்கு இன்றே அழையுங்கள்!

AMW bringing the world to you

அசோசியேட் மோட்டர்வேய்ஸ் (பிரைவேட்) லிமிட்டட், 107, டீ. எஸ். சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 08
www.yamahaworld.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு என்னும் பே(ா)ராயுதம்



அன்பு உடல், உள, சமூக ஆரோக்கியத்தின் அடிநாதமாய், திறவு கோலாய் எங்கும் வியாபித்து நிற்கின்றது. மனம் அன்புமயமாகி நிற்கும்பொழுது ஏற்படும் அளவு கடந்த ஆறு தலும் அமைதியும் மனிதனுக்கு பேராற்றலையும், துல்லியமாகச் செயற்படும் திறனையும், நோய்களை எதிர்க்கும் வல்லமையும் வழங்கி நிற்பதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டி நிற்கின்றன. இறைவன் அன்புமயமானவன் என்று சொல்லுவார்கள். அதனாலேயே அவன் சர்வ வல்லமையும் பொருந்தியவனாக விளங்குகின்றான்.

மனச் சஞ்சலங்களே பல நோய்களுக்கு வித்திடுகின்றன. இந்த மனச் சஞ்சலங்களை அகற்றும் அரு மருந்தாய் அன்பு மிளிர்கிறது.

எம் மீதும் எமது குடும்பத்தின் மீதும் அன்பு கொள்வோம். எமது சுற்றம், உறவுகள், நண்பர்கள் அனைவர் மீதும் அன்பு கொள்வோம். ஊர், தேசம், மொழி, கலை, கலாசாரம் அனைத்தின் மீதும் அன்பு கொள்வோம். உலகிவரும் உயிர்களிலும் இயற்கையிலும் அன்பு கொள்வோம். இந்த அன்பினால் ஏற்படும் மன அமைதி உடலின் நோய் எதிர்ப்பு படைபலத்தைப் பெருக்கும் பேராயுத மாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

எம்மை வெறுப்பவர்களிடமும் அன்பு வைக்கும் மனவலிமையை வளர்த்துக் கொள்வது இலகுவான காரியமல்ல. அதே சமயம் அது முடியாத விடயமுமல்ல. எம்மைப் பிறர் வெறுப்பதற்குக் காரணம் என்ன? நாம் பிறரை வெறுப்பதற்குக் காரணம் என்ன? எமது எதிரியாக நாம் கருதிக் கொள்பவர்களிடம் புதைநது கிடக்கும் அன்பு ஊற்றை அடையாளப்படுத்திக்கொள்ள என்ன செய்யலாம்? வெறுப்புத்தான் அன்பினதும் ஆரோக்கியத்தினதும் எதிரி என்று தெரிந்தும் அதனை ஏன் வளர்த்துக் கொள்ளமுயலுகிறோம்? தெரிந்தும் ஏன் பிழையான திசையில் செல்ல முனைகிறோம்.

மனிதர்கள் அனைவருமே அடிப்படையில் அன்புமயமானவர்கள் தான். அன்பு இல்லாத மனிதர்கள் யாரும் இருக்க முடியாது. எம்மைப் பலர் வெறுப்பதற்கும், நாம் பலரை வெறுப்பதற்கும் அடிப்படையாய், காரணமாய் இருப்பது என்ன என்பதை நாமே அறிந்துகொள்வது இலகுவான காரியமல்ல. ஆனால் இந்த வெறுப்புணர்வுதான் அன்பினதும் ஆரோக்கியத்தினதும் முதல் எதிரி என்பதை நாம் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டி இருக்கிறது.

எதிரியிலும் அன்பு கொண்டு மன்னித்து எமது பாதையைத் தற்காத்து தடம் மாறாது பயணிக்கும் மனத்திடத்தை வளர்த்துக் கொள்வது உடல், உள, சமூக நன்னிலையான , உண்மையான ஆரோக்கியத்துக்கு வழி சமைக்கும்.

கோபமும், வெறுப்பும், பகை உணர்வும் ஒருவனின் ஆற்றலையும், ஆளுமையையும், வளர்ச்சியையும், மகிழ்ச்சியையும் பாதித்து நிற்கும் ஒரு பொது எதிரியாக வர்ணிக்கப்படுகிறது. இந்தப் பொது எதிரியானவன் எமது பொன்னான நேரத்தின் பெரும் பகுதியையும் விழுங்கி ஏப்பம்விட்டுவிடுகின்றான். இந்த எதிரியை அன்பு என்ற அஸ்திரம் கொண்டு தாக்கி அழிப்பது ஒரு இலகுவான போர் அல்ல. பல தடவைகள் நாம் அந்த போரில் தோற்றுவிடுகிறோம். ஆனாலும் இந்தத் தோல்விகள் நிரந்தரமானவையல்ல என்பதை மனதில் நிறுத்தி அன்பு என்ற அம்பைக் கொண்டு அந்தப் பொது எதிரி மீது இலக்குவைப்போம்.

அன்பு என்னும்பேராயுதத்தை சரியான முறையில் கையாளக் கற்றுக் கொண்டால் நாம் பல தொற்று நோய்களையும் வாழ்வின் தடைகளையும் வெற்றி கொண்டு சுகமான விடியலை நோக்கிப் பயணிக்கமுடியும்.

சி.சிவன்சுதன்,
பொது வைத்திய நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

### நீரிழிவு நோய் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கும், நோய் ஏற்பட்டாலும் அதனை கட்டுப்படுத்துவதற்கும் தினமும்

# நடைப்பயிற்சி அவசியமா?

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது முன்னோர் வாக்கு. ஒருவர் இவ்வுலக வாழ்வை அனுபவிப்பதற்கு நோயற்ற உடல் அவசியம். நடைப்பயிற்சி மேற்கொள்பவர்களை நோய்கள் எளிதில் தாக்குவதில்லை. தினமும் குறிப்பிட்ட தூரம் நடப்பது நல்லதொரு தேகப்பயிற்சி, பத்திரமானது. செலவே இல்லாதது. எமது அன்றாட அலுவல்களுடன் எளிதாக இதனையும் மேற்கொள்ளலாம். இது எமது வாழ்நாள் முழுவதும் செய்யக்கூடிய மகிழ்ச்சி தரும் பயிற்சியாகும். எனினும் ஒரே தடவையில் நீண்ட தூரத்தை இலக்காக வைத்து நடக்க வேண்டாம். ஆரம்பத்தில் 5 – 10 நிமிடங்களுக்கு நடக்கவும். பின்பு மெதுவாக நேரத்தைக் கூட்டவும். மெதுவாக நடக்கும் நேரத்தை கொஞ்சம் கொஞ்சமாக கூட்டிக்கொண்டு போனால், இயற்கையாகவே செல்லும் தூரம் அதிகமாகும். ஆரம்பத்தில் ஒருவர் 30 நிமிடங்களில் ஒரு மைல் நடப்பார் என்றால் ஓர் அனுபவஸ்தர் அதையே 10 – 12 நிமிடங்களில் நடந்து முடித்துவிடுவார். உங்களால் முடிந்த வரையில் உடல் சௌக்கியத்தையும் மகிழ்ச்சியையும் கொடுக்கக்கூடிய வேகத்தில் நடக்கவும். இந்தப் பயிற்சியில் ஈடுபாடு உடைய நண்பர் ஒருவர் உங்களுக்கு கிடைப்பாரானால் அது உங்களுக்கு உதவியாக இருக்கும். உங்களுக்கு அலுப்பு, சோர்வு ஏற்படும்போது அவருடைய ஈடுபாடு உதவியாக இருக்கும்.






நீரிழிவு நோயாளிகள் தினமும் 40 நிமிடங்களுக்கு வேகமாக நடைப் பயிற்சி செய்வது நல்லது. நடக்கும்போது கைகளை வீசி நடவுங்கள். இறுக்கமான ஆடை அணிவதைத்தவிருங்கள். உடல்வியர்வை வெளியேற்றும் தளர்வான ஆடைகளை அணியுங்கள். தரமான எடை குறைவான செருப்பு, சப்பாத்துக்களை உங்கள் வயது விருப்பத்துக்கு ஏற்ற காலணிகளை அணியுங்கள். அத்துடன் நடக்கும்போது முழங்காலில் இருந்து அடி எடுத்து வைக்காமல் உங்கள் இடுப்பில் இருந்தே அடி எடுத்து வையுங்கள். நடக்கும்போது உங்கள் தலையை நிமிர்த்தி வைத்துக்கொண்டு நடவுங்கள்.

இரண்டாம் வகை நீரிழிவு நோயாளிக்கு (Type II Diabetic) இன்சுலின் சரியான அளவில் சுரந்தாலும், அது முழுமையான அளவில் வேலை செய்யாது. இவர்களின் உடலில் இன்சுலின் இயங்காமல் இருப்பதற்கு இன்சுலின் எதிர்ப்பு நிலை இருப்பதே காரணம். அதாவது நமது உடலில் உள்ள கலங்களில் காணப்படும் இன்சுலின் வாங்கிகள் Insulin Receptors என்ற பூட்டுக்கள் திறக்கப்பட வேண்டும். இதற்கு இன்சுலின் என்ற சாவி தேவை. நடைப்பயிற்சியின் போது மேற்படி இன்சுலின் வாங்கிகள் எல்லாம் தூண்டப்படுவதால் கலங்களில் காணப்படும் குளுக்கோஸ் நுழைவாசல்கள் திறக்கப்படுகின்றன. இதனால் குருதியில் உள்ள வெல்லமானது கலங்களுக்குள் நுழைகின்றது. அத்துடன் சக்தியாக மாறுகின்றது. இது தசை திசுக்களின் செயற்பாட்டுக்கு உதவுகின்றது. இதன் மூலம் குருதியின் வெல்ல மட்டம் குறைகின்றது. எனவே நடைப் பயிற்சி நீரிழிவு நோயாளிக்கு நல்ல மருந்து.

அத்துடன் பெரும் பாலான நீரிழிவு நோயாளிகளுக்கு உயர் இரத்த அழுத்தம் இருக்கும். கொலஸ்ரோல் அதிகம் இருக்கும். இரத்த நாளங்களின் மீளும் திறனை நடைப் பயிற்சியை அதிகப்படுத்துவதால் உயர் இரத்த அழுத்தம் கட்டுப்படுத்தப்படுகிறது. இது தவிர எமது இருதயத்துக்கு தீமை செய்யும் எல்.டி.எல்.(LDL) கொலஸ்ரோல் மற்றும் டிரைகிளிரைட்ஸ் அளவையும் குறைக்கின்றது. அத்துடன் உடலுக்குநன்மைசெய்யும் எச்.டி.எல். (HDL) கொலஸ்ரோலையும் அதிகப்படுத்துகிறது. இதன் காரணமாக மாரடைப்பு வரும் வாய்ப்புக்கள் நடைப் பயிற்சி செய் வோருக்கு குறைவடைகின்றது. மேலும் சாதாரண வேளைகளில் தசைகளுக்குள் சோம்பிக்கிடக்கும் மெல்லிய இரத்த நாளங்கள்கூட நடைப்பயிற்சியின் போது விரிவடைகின்றன. இதனால் பல புதிய நாளங்கள் தோன்றுகின்றன.

இதனால் தசைகளின் இரத்த ஓட்டம் அதிகரிக்கப்படுகின்றது. இதன் போது இரத்தத்தில் மிகுந்து இருக்கும் வெல்லத்தைப் பயன்படுத்த இப்பொழுது அதிக இடம் கிடைக்கின்றது. இதன்மூலம் குருதியின் வெல்ல அளவு குறைவதற்கு வாய்ப்பு உள்ளது.

உடல் எடை அதிகரிப்பானது எண்ணற்ற நோய்களின் பிறப் பிடமாகும். நடைப் பயிற்சியின்போது பெரும்பாலான தசைகள் ஒரே நேரத்தில் தொடர்ந்து வேலை செய்வ தால் அதிகளவில் சக்தி வெளி யேறுகின்றது. இதற்கு கொழுப்பு பயன்படுத்தப்படுகின்றது. இதன் பயனாக உடலில் தேவையற்ற இடங்களில் உள்ள கொழுப்பு குறைவ தால் உடல் எடை குறைகின் றது. உடல் எடையைக் குறைப் பதற்கும், கட்டுப்படுத்துவதற் கும் ஓர் இலகுவான வழி, நடைப் பயிற் சியாகும். அத்துடன் எடை அதிகரிப்பால் உருவாகும் நீரிழிவை நடைப் பயிற்சியால் தவிர்க்க முடியும். நடக்கும்போது எவ்வாறு சுவாசிக்கின்றோம் என்பதை உணருங்கள். முதலாவதாக, ஆழ்ந்தமூச்சைவெளியே விடுங்கள். பின்னர் உங்களைச் சுற்றி இருக்கும் வளியை ஆகாயத்தை முகர்வது போன்று முயற்சி செய்யுங்கள். அதிகாலை வேளையில் திறந்த வெளிகளில் மலைகள் மீதான பாதைகளில் வேகமாக நடக்கும் போது அமைதியான சுற்றுச் சூழலுடன் தூய்மையான வளி மண்டலக் காற்றை நுகர முடியும். இதன் மூலம் உங்கள் உடலும் உள்ளமும் புத்துணர்ச்சி அடைகின்றன. அத்துடன் எமது மூளையில் எண்டார்பின் (Endorphin) எனப்படும் ஹோர்மோன் தூண்டப்படுவ தால் மன அழுத்தம் குறைகின்றது. மன அமைதிக்கு வழி செய்தால் நாள் முழுவதும் உற்சாகமாக உழைப்பது மட்டுமல்லாமல் மன அழுத்தத்தால் உருவாகும் நீரிழிவு நோயைத் தவிர்க்கலாம். எனவே ஒருவர் நடக்காவிட்டால் அவர் நீரிழிவை நோக்கி நடக்கின்றார் என்பதை உணருங்கள்.






நீரிழிவு சிகிச்சை நிலையம்,
போதான வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 நூற்றாண்டுகளைக் கடந்த பளை றோ.க.த.க. பாடசாலை

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக விரிவுரையாளர்
– யாழ் பல்கலைக்கழகம்

கல்வியைக் கண்ணென மதிக்கும் தமிழ் மக்களுக்கு – எந்தச் செல்வத்தை இழந்தாலும் கல்விச்செல்வத்தை இழக்க முடியாது – கல்வியே தமிழ் மக்களின் பாரம்பரிய பரம்பரைச் சொத்து என அதனைப் பேணிப் பாதுகாத்து வருபவர்களுக்கு – இதுவரை பலரும் அறியாத ஒரு வரலாற்றுத் தொன்மையுடைய ஒரு கலைக்கூடமாகக் கிளிநொச்சி புலோப்பளையில் அமைந்துள்ள பளை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை 388 ஆண்டுகளைத் தாண்டி தலை நிமிர்ந்து நிற்கிறது என்ற செய்தி மகிழ்வோடு பெருமை சேர்க்கும் செய்தியாகும்.

இந்த வரலாற்றுத் தொன்மையை ஆராய்ந்து சான்றாதாரங்களைத் தேடி ஒரு அரிய உண்மையை அறிக்கையிட அரும் பணியாற்றிய பாடசாலை அதிபர் வ.ஜீவரத்தினம், – பளைப் பங்குத்தந்தை ஆ.யஞீன் அடிகளார், புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி வரலாற்று விரிவுரையாளர் எஸ்.வி.பி மங்களராஜா அடிகளார் ஆகியோர் பாராட்டப்பட வேண்டியவர்கள். இவர்களின் மகத்தான பணியால் ஒரு வரலாற்றுச் செய்தி ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு பாடசாலை தலை நிமிர்ந்து தன் வரலாற்றைப் படித்து பெருமைப்பட்டு இன்னும் வளர்ந்து கல்லூரித் தரத்திற்கு உயரக் கனவு காண்கிறது. இந்தச் சான்றுகளை 1941ஆம் ஆண்டு எழுதப்பட்ட 'பிலிப் பால்டேயுஸ்' என்பவருடைய புகழ் பெற்ற 'இலங்கைத் தீவின் விவரணம்' என்ற நூலில் இருந்தும், 'இலங்கையில் இயேசு சபைக் குருமார்' என்ற எஸ்.ஜி. பெரேரா அடிகளாருடைய நூலில் இருந்தும் பெற்று ஆதாரப் படுத்தியுள்ளார்கள். போர்த்துக்கேயர் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் குறிப்பாக, 1627ஆம் ஆண்டு வடமாகாணத்தில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட கத்தோலிக்க பாடசாலை இதுவாகும். இது புலோப்பளை தமிழ்ப் பாடசாலை என்ற பெயரில் 1627ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1888 ஆம் ஆண்டு பளை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை எனப் பெயர் மாற்றப்பட்டு இன்று வரை இதே பெயரில் இயங்கி வருவது குறிப்பிடப்பட வேண்டிய முக்கிய தகவலாகும்.

இந்தப் பாடசாலை கத்தோலிக்க திருச் சபையின் ஆரம்பப் பாடசாலையாக கிளிநொச்சி – பளை றோ.க. த.க. பாடசாலை என 1888 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டமை பாடசாலை வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும். இந்தச் செய்தி கொழும்பில் உள்ள சுவடிகள் காப்பகப் பதிவேட்டில் பொறிக்கப்பட்டுள்ளதை மேலதிக கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் – வரலாற்றுத்தரவுகளை ஆவணப்படுத்துதல் – என்ற தலைப்பில் அமைந்த தமது கட்டுரையில் நிரூபித்துள்ளார் என நானிலம் என்ற 338 ஆவது ஆண்டு மலரில் அதனது தொகுப்பாசிரியர் கந்தசாமி விஜ யகரன் – 388 ஆண்டுகளைக் கடந்து நிலைத்து நிற்கும் கிளிநொச்சி பளை றோ.க.த.க பாடசாலையின் தோற்றமும் வளர்ச்சியும் – என்ற ஆக்கத்தில் தெரிவிக்கின்றார்.

இவருடைய ஆக்கத்தில் இருந்து இங்கு மேலும் குறிப்பிடப்பட வேண்டிய விடயம் என்னவென்றால், கல்விப் பாரம்பரிய பூமியான யாழ்ப்பாணத்தில் 1817ஆம் ஆண்டு முதலாவது பாடசாலையாக யாழ் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பெருமைப்பட்டுள்ளது. ஆனால் கிளிநொச்சி – பளை றோ.க.த.க. பாடசாலை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் தோற்றத்துக்கு ஏறத்தாழ 200 ஆண்டுகளுக்கு முன்பே தோற்றம் பெற்ற பெருமைக்குரியதாக விளங்குகிறது என்பதாகும். நானிலம் என்ற 138 ஆவது ஆண்டு மலரில் – ஒரு பாடசாலையின் வரலாற்றுத் தொன்மையையைத் தேடி – என்னும் கலாநிதி செ.திருநாவுக்கரசு என்பவரின் ஆக்கம் இங்கு குறிப்பிட சிறப்பு முக்கியத்துவம் பெற்றது. இது ஒரு சிறந்த அதேவேளை ஆழமான ஆய்வின் அடிப்படையில் எழுதப்பட்ட ஆய்வாகும். சம்பந்தப்பட்ட அனைவரும் படிக்க வேண்டிய ஆய்வாகும்.




கிளிநொச்சி – பளை றோ.க.த.க. பாடசாலை தற்போது 250ற்கு மேற்பட்ட மாணவர்களையும் 22 ஆசிரியர்களையும் கொண்டு தரம் 11 வரை கல்விப்பணி ஆற்றி வரும் பளைக் கோட்டத்தின் இரண்டாவது பெரிய பாடசாலையாகும். கல்வி – இணைபாடவிதான செயற்பாடுகளிலும் கோட்ட – வலய – மாவட்ட – மாகாண செயற்பாடுகளிலும் இடம் பிடித்துத் தடம் பதித்துள்ள இந்தப் பாடசாலை மாணவர்கள், தமிழ்த் தினப் போட்டி – ஆங்கில தினப்போட்டி, கரப்பந்தாட்டம்போன்ற ஏனைய கலை, விளையாட்டு நிகழ்வுகளிலும் பங்குபற்றி வருகின்றனர். பளை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாட சாலையை கல்லூரியாகத் தர முயர்த்தும் நோக்கை முன்வைத்துப் பணியாற்றுவதே இன்று சம்பந்தப்பட்ட அனைவரின் பணியாக வேண்டும்.

பளை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் 388 ஆண்டு நிறைவு விழாவும், அதனை ஒட்டிய நானிலம் என்ற மலர் வெளியீடும், பரிசளிப்பு நிகழ்வும் இந்த மாதம் 4ஆம் திகதி அன்று வெகு சிறப்பாகப் பாட சாலை அதிபர் வ.ஜீவரத்தினம் தலைமையில் கொண்டாடப்பட்டுள்ளது. பிரதம விருந்தினராக வட மாகாணக் கல்வி அமைச்சர் தம் பிராசா குருகுலராசா கலந்து கொண்டு சிறப்பித்தார். கௌரவ விருந்தினராக யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அழைக்கப்பட்டிருந்த போதிலும், சுகவீனம் காரணமாக அவர் கலந்து கொள்ளவில்லை.

போர்த்துக்கேயரின் ஆட்சிக் காலத்தில் பளை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை குறிப்பாக 1627ஆம் ஆண்டு இயேசு சபைக்குருமாரின் பராமரிப்பில் இருந்துள்ளது. இக்காலப்பகுதியில் 300 மாணவர்கள் கல்வி கற்றதாக அறிய வருகிறது. இக்காலத்தில் பாரம்பரிய திண்ணைப்பள்ளிக் கல்வி முறையே இங்கு நிலவியது. பின்னர் ஒல்லாந்தருடைய ஆட்சிக்காலத்தில் மண்ணாலும் மரத்தாலும்கட்டப்பட்ட இந்தப்பாடசாலை எதிரிகளின் தாக்குதலைச் சமாளிக்கும் வகையில் திட்டமிட்டு அமைக்கப்பட்டதாக அறிய வருகிறது. இங்கு குறிப்பிடப்படும் தேவாலயம் தற்போது இங்கு விளங்கும் பேதுருவானவர் ஆலயமாகும். 1796இல் ஒல்லாந்தரிடமிருந்து ஆட்சி ஆங்கிலேயர் கைக்கு மாறிய போது இலவச சுதேச மொழிக் கல்வி வழங்கப்பட்டமை பாடசாலை வளர்ச்சிக்கு ஒரு மைற் கல்லாக அமைந்தது.



1914 முதல் இங்கு அதிபர்களாகப் பணியாற்றியோரின் பெயர் விவரங் கள் மலரில் தரப்பட்டுள்ளன. இதில் இங்கு குறிப்பிடப்பட வேண்டியது என்னவென்றால் இந்தப் பாடசாலையின் அதிபர்களாகக் குருக்களும் பணியாற்றியுள்ளனர் என்பதாகும்.

1948 முதல் 1952 வரை டலோ அடிகளாரும் 1953 தொடக்கம் 1963 வரை பெனிபஸ் அடிகளாரும் இந்தப் பாடசாலையின் அதிபர்களாகப் பணியாற்றியுள்ளனர். இக்காலத்தில் இப்பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் மற்றும் ஒழுக்க விழுமியங்கள் மேம்பாடு அடைந்து – யாவராலும் போற்றப்படும் ஓர் உயர்ந்த கலைக் கூடமாக மிளிர்ந்து – இப்பாடசாலை வரலாற்றின் பொற்காலமாகப் பறை சாற்றப்பட்டது.

யாழ். குடாநாட்டின் கீழ்த்திசையில், யாழ்நகரின் நுளை வாயிலாகத் திகழும் கிளிநொச்சி மாவட்டப் பிரதேச செயலர் பிரிவுகளில் ஒன்றான பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் அமைந்துள்ள வரலாற்றுப் பழமைமிக்க பளை நகரத்திற்கு அண்மையில் ஏ9 வீதியில் உள்ள புலோப்பளை வீதியில் இருந்து 2 கிலோ மீற்றர் தொலைவில் இப்பாடசாலை அமைந்துள்ளது. வீதியின் இருமருங்கும் அழகிய தென்னஞ்சோலைகளால் நிறைந்து இப்பிரதேசத்திற்கு எழில்வளம் சேர்க்கும் காட்சி காண்போர் மனதைக் கொள்ளை கொள்ளவும் குளிர்மையை உடலில் சேர்க்கும், இதமான உணர்வைத் தரவும் மிக்கதாக விளங்குகிறது.

நீர்வளமும் நிலவளமும் சூழ்ந்திருக்கும் புலோப்பளைக் கிராமம், கத்தோலிக்க பாரம்பரியத்தைக் கட்டிக்காத்த பெருமைக்குரிய கிராமமாக இன்றும் விளங்குகிறது. இங்கு கிளிநொச்சி மாவட்டத்தில் முதன் முதலில் உதயமான பளை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை இதுவரை பலரும் அறியாத ஒரு வரலாற்றுத் தொன்மையுடைய ஒரு கலைக் கூடமாக 388 ஆண்டுகளைத் தாண்டி தலை நிமிர்ந்து நிற்கிறது என்ற செய்தி மகிழ்வோடு பெருமை சேர்க்கும் செய்தியாகும். பளை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் வளர்ச்சிக்காக அன்று முதல் இன்று வரை பணியாற்றி வருவோர் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். இறந்து மடிந்து போனவர்கள் இறைவனின் இன்ப சந்நிதானத்தில் அமைதி அடைய வேண்டியவர்கள். இந்தப் பாடசாலை தலை நிமிர்ந்து தனது வரலாற்றைப் படித்து பெருமைப்பட்டு இன்னமும் வளர்ந்து கல்லூரித் தரத்துக்கு உயர அனைவரும் ஆசிப்போம். மூன்று நூற் றாண்டுகளைக் கடந்த வட மாகாணத்தின் முதல் கத்தோலிக்க பாடசாலை – பளை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை என்பது பெருமைக்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒ
எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை
9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்
கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், க
கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிர
(மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வே
குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டை
நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய
ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் எ
அறி முகப் படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கி

ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான
படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல் களையும்
யும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்
ங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்
லும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள்
டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்
டாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே
றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது
ஆகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை
2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | 9 | 3 | 5 | 8 | 7 | 2 | 6 |
| 6 | 3 | 2 | 9 | 4 | 7 | 1 | 5 | 8 |
| 7 | 5 | 8 | 1 | 2 | 6 | 9 | 4 | 3 |
| 1 | 8 | 7 | 2 | 3 | 4 | 6 | 9 | 5 |
| 3 | 2 | 6 | 5 | 8 | 9 | 4 | 1 | 7 |
| 5 | 9 | 4 | 7 | 6 | 1 | 3 | 8 | 2 |
| 2 | 4 | 5 | 6 | 1 | 3 | 8 | 7 | 9 |
| 8 | 7 | 3 | 4 | 9 | 5 | 2 | 6 | 1 |
| 9 | 6 | 1 | 8 | 7 | 2 | 5 | 3 | 4 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | 3 | 7 | 1 | | 2 | | |
| | | 8 | 2 | | | | | 1 |
| | | | 9 | | | 4 | 8 | 3 |
| 2 | | 5 | | | 4 | | 3 | |
| | | | 5 | 3 | 7 | | | |
| | 9 | | 8 | | | 7 | | 5 |
| 8 | 2 | 1 | | | 9 | | | |
| 6 | | | | | 2 | 8 | | |
| | | 7 | | 8 | 6 | 9 | | 4 |


# மழையாய் தங்க காசு!

## விரையுங்கள்

ஜூன் 30ம் திகதி வரை மாத்திரமே



AIRMATE



XD - 40
- 3 வரை வேகத்தை சீர்ப்படுத்தலாம்
- Soft, Smooth Wind

ரூ.4,400
விசேட விலை ரூ 3,900

XS-40
- 3 வரை வேகத்தை சீர்ப்படுத்தலாம்
- Soft, Smooth Wind
- உயரத்தை சீர்செய்யலாம்

ரூ.5,600
விசேட விலை ரூ 5,200

அபான்ஸ், அபான்ஸ் லைட் மற்றும் அபான்ஸ் அங்கீகாரம் பெற்ற முகவர்களிடமும் பெறலாம்

கிளிநொச்சி - 077-1092102, முல்லைத்தீவு - 021-2290146, புதுக்குடியிருப்பு - 021-2061604, பெரியகல் பெதுர - 077-7392252, நெல்லியடி - 071-6474128, அச்சுவேலி - 077-9554229, சுன்னாகம் - 077-3763503, மானிப்பாய் - 077-7222351, திருநெல்வேலி - 077-3699000, யாழ்ப்பாணம் B - 077-4678578, யாழ்ப்பாணம் A - 077-4433030, யாழ்ப்பாணம் - 021-2222009, சாவகச்சேரி - 077-2162666, கிளிநொச்சி - 077-3548546, மன்னார் - 023-2223553, மன்னார் - 071-9062845

Abans


# மனம்மகிழ் பாராட்டுக்கள்



உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி
பணிமனையில் அபிவிருத்தி உத்தியோ
கத்தராகக் கடமையாற்றி இலங்கை
கணக்காளர்சேவை பரீட்சையில் சித்தி பெற்று
மன்னார் மடு கல்வி வலயக் கணக்காளராகப்
பதவி உயர்வு பெற்றுள்ள

**உயர்திரு.மகாலிங்கம் ஜெயக்குமார்**
**B.B.A,H.N.D.A**

அவர்கள் மேன்மேலும் பற்பல பதவி உயர்வு
கள் பெற்று.தீர்க்க ஆயுளுடனும் நீண்ட
உடல்நல சுகத்துடனும் பல
ஆண்டுகள் வாழ இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்தி
உவந்தளிக்கப் பெற்ற **வாழ்த்துப் பாமாலை**

நேர்மையொடு பொறுமையுடைத்தோன்
தலைமைத்துவமும் ஆளுமையும் நிறையப்பெற்றோன்
விவேகமொடு அடக்கமும் ஒருங்கே புடைத்தோன்
புத்திசாதுர்யமும் சாமர்த்தியமும் கைவரப் பெற்றவன்
பணிவொடு தன்னடக்கமெனும் நற்குணம் படைத்தவன் – அவன்
சேவையின் மூப்பால் கணக்காளராகின்றான் !
சீர்மேவு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தன்னில்
பார்மேவு பண்பாளன் ஜெயக்குமாரனென்போன்
ஊர்மேவு தொழில் நேர்மை கொண்ட செம்மல்
வார்மேவு கடமையொடு கண்ணியமும் கொண்டு
பேரோங்கப் பெருமையுடன் நெடிபுகழொடு கடமைபுரிந்து
கார்போற்றப் பெருமையுடன் வாழ்க பல்லாண்டு நீடே !

வாழ்த்துவோர்:
சுகாதாரவைத்திய அதிகாரியும்,
உத்தியோகத்தர்களும், பணியாளர்களும்,
உடுவில்.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை,
உடுவில்.





**மிகுதியை பிள்ளைகளின் எதிர்காலம் கருதி கொமர்ஷல் வங்கியின் NRFC கணக்கில் வைப்பிலிடுகின்றார்**

எனது கணவர் வெளிநாட்டில் கஷ்டப்பட்டு உழைப்பது பிள்ளைகளின் எதிர்காலத்திற்காகத் தான். அதற்காகவே சம்பளத்தில் ஒரு பகுதியை மாற்றாமல் கொமர்ஷல் வங்கியின் NRFC கணக்கில் சேமிக்கின்றார். அந்த சேமிப்பிற்கு வட்டி வெளிநாட்டு நாணயத்தில் கிடைக்கிறதால் எமது கனவுகள் நிறைவேறும் என்று உறுதியாக நம்புகிறோம்.

வெளிநாட்டு நாணயக் கணக்கில் சேமிக்கும் உங்களுக்கு நாம் வழங்கும் அனுகூலங்கள்
- வெளிநாட்டு நாணயத்தில் உயர்ந்த வட்டி
- நாடுமுழுவதும் பரந்துள்ள வங்கிக் கிளை வலையமைப்பு
- உங்கள் வெளிநாட்டு நாணய முதலீடு சம்பந்தமாக வதிவுரிமையுள்ள (RFC) வதிவுரிமையற்ற (NRFC) விசேட கணக்கொன்றை தெரிவு செய்ய முடியும்.

COMMERCIAL BANK

Fitch ரேட்டிங் - AA(lka)

+94 112 353 333 www.combank.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துறைமுக நகர் திட்டத்துக்கு எதிராக உரிமை மீறல் மனு

கொழும்பு, மே 10

கொழும்பு துறைமுக நகரத் திட்டத்துக்கு எதிராக மற்றொரு அடிப்படை உரிமை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அகில இலங்கை மீனவர் சமூக தொழிற்சங்கம் ஒன்று, நேற்றுமுன்தினம் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்துள்ளது.

கொழும்பு துறைமுக நகர நிர்மாணிப்புக்காக எந்தவித சாத்தியக் கூற்றறிக்கையையும் கவனத்தில் கொள்ளாது துறைமுக நகரத் திட்டத்துக்காக அரசுக்குரிய காணி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தமது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சங்கத்தின் தலைவர் அருண றொஷாந்த பெர்னாண்டோ தாக்கல் செய்த மனுவில் பிரதிவாதிகளாக சட்டமா அதிபர், துறைமுக அதிகார சபை, கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம், கொழும்பு மாநகர சபை, வீதிஅபிவிருத்தி அதிகார சபை, சீன கொமினிகேஷன் கன்ஸ்ட்ரக்சன் நிறுவனம் என்பன குறிப்பிட்டுள்ளனர்.

துறைமுக நகரில் 20 ஏக்கர் நிலப் பரப்பொன்றை உருவாக்குவதற்காக நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டுள்ள சீன நிறுவனத்துக்கு எந்தவித கேள்வியும் இன்றி வழங்கப்பட்டுள்ளது என்றும் துறைமுக நகரத்துக்காக ஒதுக்கப்பட்ட பகுதியை நிரப்பும் போது கொழும்பு மற்றும் நீர்கொழும்பு வரையிலான கரையோரப் பகுதிகளில் கடற்றொழிலில் ஈடுபட்டு வரும் சுமார் 30,000 குடும்பங்களின் வாழ்வாதாரம் முற்றாகப் பாதிக்கப்படுவதாகவும் மனுவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (த)

## மைத்திரி- மஹிந்த ஆட்சியே நாட்டுக்கு அவசியம் தேவை

### பந்துல சொல்லும் மந்திரம் இது



கொழும்பு, மே 10

மைத்திரி – மஹிந்த ஆட்சியே தற்போது நாட்டுக்கு தேவை என முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். இதனால், மஹிந்தராஜபக்ஷவைபிரதமர் வேட்பாளராக அறிவிக்க வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்;

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சில் இறுதித் தீர்வு எதுவும் எட்டப்படவில்லை என்பதனால், அது சம்பந்தமாக தொடர்ந்தும் பேச்சு நடத்தப்படும்.

மஹிந்தவைப் பிரதமர் வேட்பாளராக நிறுத்தினால், சிறுபான்மை மக்களின் வாக்குகள் மற்றும் மிதக்கும் வாக்குகள் கிடைக்காமல் போகும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சிலர் தமது தனிப்பட்ட கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

எனினும் தற்போதைய அரசு நாட்டுக்குள் செயற்படுத்தி வரும் வேலைத்திட்டங்கள் மற்றும் செயற்படும் விதம் காரணமாக அவர்களுக்கு மிதக்கும் வாக்குகள் கிடைக்காது. அத்துடன் மஹிந்த ராஜ[illegible]ஷவுக்கு சிறுபான்மை மக்களின் வாக்குகள் கிடைக்காது என்று எவரும் கூறமுடியாது.


19ஆவது அரசமைப்புத் திருத்தம் மூலம் பலம் மிக்க பிரதமர் பதவி உருவாக்கப்பட்டுள்ளது.

இதனால், மக்கள் மைத்திரி – மஹிந்த இணைப்பையே எதிர்ப்பார்க்கின்றனர். இதனால் மக்கள் கோருவதைப் பெற்றுக் கொடுக்கத் தொடர்ந்தும் பேச்சுக்களை நடத்தவேண்டும்– என்றார். (த)

## மரண அறிவித்தல்

### சீவரத்தினம் மகேசரத்தினம்(பாபு)

(முன்னாள் இ.போ.ச ஊழியர், கல்வியங்காடு ஞா.பா.ச கலாசார ஒன்றிய அங்கத்தவர் (கனடா))



யாழ்ப்பாணம், கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் ஸ்காபறோ, கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சீவரத்தினம் மகேசரத்தினம் 08.05.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீவரத்தினம் - மகேஸ்வரி தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் அரியமலர் (லீலா)வின் அன்புக் கணவரும் , ஈஸ்வரிதேவி, சிவசூரியர்(ஆஸ்திரேலியா), கோபாலரத்தினம்(நோர்வே), காலஞ்சென்றவர்களான உமாதேவி, அருட்சோதி மற்றும் புஸ்பதேவி, அருணகிரிநாதன் (Ret.C.T.O தாவரவியல் துறை, யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற அரியரத்தினம் மற்றும் பரராசசிங்கம், (ஓய்வூதியர் திருமலை கடற்படை), சரவணதாசன் (ஓய்வூதியர்P.W.D), ஞானாம்பிகை (ஆஸ்திரேலியா), பொன்னரசி(Norway), புனிதவதி, மனோன்மணிதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை), காலஞ்சென்ற Dr.ஸ்ரீகரன் (U.S.A) மற்றும் சுதமதி(AD.வடமராட்சி கல்விவலயம்) ஆகியோரின் மைத்துனரும் குமாரசுவாமி, Dr.கலாவல்லி(U.S.A), நந்தபாலன் (Canada), ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும் கல்யாணி, கற்பகம்( Lib.Assit. திருமலை வளாகம், பரதன்(UK), மீராதேவி(Bank officer Canada),கோகுலன் (Swiss), கோபிகிருஸ்ணன் (M/A Officer RDA - Jaffna), யசோதா (USA), Dr.அரவிந்தன் (U.S.A) ஆகியோரின் மாமனும், பத்மநாதன் (Australia), சியாமளா, கீதாஞ்சலி(U.S.A), Dr.யாதவி (நோர்வே), ஜனகன்(Norway) ஆகியோரின் சிறிய தந்தையும் மற்றும் ஹரிந்திரன் (மருத்துவபீட மாணவன் - கொழும்பு), பகீரதி (மருத்துவ பீடமாணவி -கொழும்பு) ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் உள்ள Chapel Fundral Home, 8911 woodbine Ave, Markham என்னும் இடத்தில் இன்று (10/05/2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

G.P.Sலேன்,
கல்வியங்காடு.

தகவல்:
சி.அருணகிரிநாதன்
(சகோதரன்)

## மரண அறிவித்தல்

### நாகேந்திரம் தவேந்திரநாதன்



கோப்பாய் வடக்கு, கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகேந்திரம் - தவேந்திர நாதன் 07.05.2015 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகேந்திரம் - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசலிங்கம் கனகம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகனும் இன்பமலரின் அன்புக் கணவரும், மஞ்சுளா (லண்டன்) அவர்களின் அன்புத் தந்தையும், ஸ்ரீதரனின் பாசமிகு மாமனாரும், மதுரனின் அன்புப் பேரனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2015) ஞாயிற்றுக் கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராச வீதி,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## செல்லப்பா தேவராசா (ராசு)



தாவடி தெற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட செல்லப்பா தேவராசா 08.05.2015 வெள்ளிக்கிழமை தாவடியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மலர்சோதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திரு.திருமதி செல்லப்பாவின் மகனும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, பெரியதம்பி ஆகியோரின் சகோதரனும், ரவீந்திரன் (கனடா), வசந்தா (ஆஸ்திரேலியா), சித்திரா (ஆஸ்திரேலியா), சாந்தா (கனடா) ஆகியோரின் தந்தையும், தனபாலரட்ணம், ராஜ்குமார், பிரபானந் தன், தர்மாம்பிகை ஆகியோரின் மாமனும், துசானி, ஜெசன், றொசான், கிறிசான், கிறிஸ்கா, கீரன், நீதன், நிசானா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.05.2015) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அம்பலவாணர் முருகமூர்த்தி கோயிலடி, தாவடி தெற்கில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தாவடி தெற்கு, கொக்குவில்.
T.P. 021 205 3118

தகவல்:
புஸ்பராசா (புகழ்களஞ்சியம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ் நகர் பகுதியில் இயங்கும் பிரபல அழகுசாதன பொருள்கள் விற்பனை செய்யும் நிறுவனம் ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை. (பெண்கள் மட்டும்)

முன் அனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

தொடர்பு: 077 725 1036 (59597)(9.3)

## நீங்கள் முடி உதிர்வு, பொடுகு, அரிப்பு என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா???

இப் பிரச்சினைகளிற்கு தீர்வாக இன்றே பாவியுங்கள் சிறந்த மூலிகைகள் அடங்கிய

"றோயல் அகஸ்தியா கூந்தல் எண்ணெய்"

தலைக்கு குளிர்ச்சியினை அளித்து தலைச் சருமத்துக்கு ஊட்டமளித்து, முடி உதிர்வைத் தடுத்து, கூந்தலைக் கருமையாகவும், நீளமாகவும், அடர்த்தியாகவும் வளரச் செய்து முகத்திற்கு பொலிவை அளிக்கவல்லது.

சந்தைப்படுத்துவோர்: சிவா நறுமணப்பூங்கா, இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கு அருகில்) தொ.பே: 021 222 2567
Manufactured by: Royal Industries Colombo -13

Quality Royal A Kasthiya Hair Oil Guaranteed

யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்துக் கடைகளிலும், மருந்தகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். (சி/16708)(4.2.7)

## விநியோகஸ்தர்கள் தேவை

- Bottled Drinking Water (போத்தல் குடி தண்ணீர்)
- Fruit Drinks (பழரசம்)
- Jam
- Cordial
- Spices
- Chips
- Carbonate Soda
- Toffees & Sweets

உட்பட பலவகை உணவுப்பொருள்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் பிரபல கம்பனிக்கு.

✓யாழ்ப்பாணம் ✓மட்டக்களப்பு
✓வவுனியா/மன்னார் ✓அம்பாறை/கல்முனை
✓கிளிநொச்சி/முல்லைத்தீவு

ஆகிய மாவட்டங்களுக்கு திறமையும் ஆர்வமும் உள்ள விநியோகஸ்தர்கள் தேவை.

SUBRA Foods
City office:- 57/1, பழைய கெஸ்பாவு வீதி, நுகேகொட.
Branch:- கே.கே.எஸ்.றோட் (K.K.S Road), இணுவில், யாழ்ப்பாணம்.

077 0792298, 021 300 3990, 021 300 3991

# இலங்கையின் விமானம் ஒன்று புனேயில் அவசர தரையிறக்கம்

புனே, மே 10

இலங்கை இராணுவத்தினருக்கான குதிரைகளை, பாகிஸ்தானில் இருந்து ஏற்றி வந்த, இலங்கை விமானப்படையின், சி–130 விமானம், நடுவானில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறை அடுத்து, இந்தியாவின் புனே விமான நிலையத்தில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

இஸ்லாமாபாத்தில் இருந்து 8 குதிரைகள் மற்றும் 13 பேருடன் கொழும்பு நோக்கி வந்துகொண்டிருந்த போதே, நடுவானில் கோளாறு ஏற்பட்டது.

உடனடியாக இந்த விமானம் நேற்று முன் தினம் மாலை 5.40 மணியளவில் புனே சர்வதேச விமான நிலையத்தில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

அந்த விமானத்தில், விமானிகளுடன், 8 இலங்கைப் படையினர், மற்றும் ஒரு பாகிஸ்தான் இராணுவ மேஜர் (கால்நடை மருத்துவர்) உள்ளிட்ட 13 பேர் இருந்தனர்.

இந்த விமானத்துக்கு மாற்று உதிரிப் பாகங்கள் இலங்கையில் இருந்து கொண்டு வர வேண்டியுள்ளதால், புனே விமான நிலையத்தில் விமானம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் இராணுவம், இலங்கை இராணுவப் பயிற்சி அக்கடமிக்கு அன்பளிப்பாக வழங்கிய குதிரை களை ஏற்றிவந்த போதே விமானத் தில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளது.

எண்ணெய்க் கசிவு ஏற்பட்டு விமானத்தின் இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டதையடுத்து, புனே விமான நிலையத்தில் தரையிறங்க அவசர உதவி கோரப்பட்டது.

புனே விமான நிலைய அதிகாரிகள், உடனடியாக புதுடில்லியில் உள்ள இந்திய விமானப்படைத் தலைமை யகத்துக்குத் தகவல் அனுப்பினர். அதையடுத்து, இந்தியாவின் உள் நாட்டுப் புலனாய்வு அமைப்பான ஐ.பி மற்றும் குடிவரவுப் பகுதியினரின் பாதுகாப்புப் பரிசோதனைகளின் முடிவில் இலங்கை விமானத்தைத் தரையிறக்க அனுமதி அளிக்கப்பட்டது.

அதுவரை, இலங்கை விமானப் படை விமானம் புனே நகருக்கு மேலாக வட்டமிட்டுக் கொண்டிருந் தது. மாலை 5.40 மணியளவில், விமானம் புனே விமான நிலையத் தில் தரையிறக்கப்பட்டது.

இலங்கை விமானப்படையின், இந்த சி–130 விமானம் அண்மையில் நேபாளத்துக்கு உதவிப் பணியாளர் களை ஏற்றிச் சென்றபோதும், தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டு, அங்கேயே சில நாள்கள் தரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

Nivithra

## கேக் ஐசிங் பயிற்சி

நிவித்ரா அழகுக்கலை நிலையத்தில் புதிய கேக் ஐசிங் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இப்பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புபவர் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

முதல் 10 பதிவுகளுக்கு 25% விலைக்கழிவு உண்டு



## அழகுக்கலைப் பயிற்சி

நிவித்ரா அழகுக்கலை நிலையத்தில் அழகுக்கலை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
Basic Course, Advance Beauty Therapy, Diploma
எனும் 3 பிரிவுகளாக வகுப்புக்கள் நடைபெறவுள்ளன.

குழுவாக இணைபவர்களுக்கு 20% விஷேட விலைக்கழிவுண்டு.

முதல் 10 பதிவுகளுக்கு கேக் ஐசிங் பயிற்சி முற்று முழுதாக இலவசம்.

பதிவுகளுக்கு முந்துங்கள்

Nivithra Beauty Parlour & Training Academy
340 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P: 076 691 9277

## லக்ஸ்மி மருத்துவ ஆய்வுகூடம்
## ஆலடிச்சந்தி (கொமர்ஷல் வங்கி முன்பாக) யாழ். வீதி மானிப்பாய்

* எமது ஆய்வுகூடத்தில் தற்போது Belgium நாட்டின் அதிநவீன தொழிநுட்பத்தில் உருவான CLINDIAG-SA-20 Bio chemistry Analyzer மூலம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றதால்

15.04.2015 தொடக்கம் அத்தியாவசிய பரிசோதனைகளுக்கான கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

* எமது லக்ஸ்மி மெடிகெயார் சென்ரர் பிரதான வீதி சென்பீற்றர் தேவாலயம் அருகில் நவாலியிலும் எமது ஆய்வுகூடத்தில் பரிசோதனைகளை மேற்கொள்ளும் கிளினிக்சென்ரர்களிலும் எமது சேவைகளைப்பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு: இவ்வுபகரணத்தின் உயர்தொழிநுட்பத்தின் மூலம் இரசாயனப்பொருள்களுக்கான செலவீனம் குறைக்கப்பட்டுள்ளதாலும் எமது சொந்த மூலவளங்களைப் பயன்படுத்துவதாலுமே இக்கட்டணக்குறைப்பை எம்மால் செய்யமுடிந்துள்ளது என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

தொ.பே. 077 444 4180 021 790 4444 (59618)(45.7.3)



## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்
## அறிவித்தல்

2015 - உயர்திருவிழாக் காலத்தில் - தற்காலிக கடைகள் அமைத்தல், உடை தேங்காய் பெற்றுக்கொள்ளுதல் ஆகியவற்றுக்கான

## ஏலம் கூறுதல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலின் வருடாந்த உயர்திருவிழா 2015.06.17 ஆம் திகதியன்று ஆரம்பமாகி 2015.07.02 ஆம் திகதியன்று நிறைவுபெறும், இக்காலப்பகுதியில், தற்காலிகமாக வியாபாரம் செய்வதற்குரிய -நிர்வாகத்தினால் சுட்டிக்காட்டப்படும் இடங்களுக்கான பகிரங்க ஏலம் கூறுதலும் உடை தேங்காய்க்கான பகிரங்க ஏலம் கூறுதலும் 2015.05.16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு ஆலய வளாகத்தில் நடைபெறும், ஏலத்தில் பங்கு கொள்ள விரும்புவோர் குறிப்பிட்ட நேரத்தில் தவறாது சமுகமளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

குறிப்பு:

01. குளிர்பானக் கடைகள் நடத்துபவர்கள் முறையான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

02. சுகாதாரம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

03. ஏலத்தில் முதல்நிலை பெற்றவர்கள் அன்றைய தினமே ஏலத் தொகையின் மூன்றில் ஒரு (1/3) பங்கினைச் செலுத்திப்பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளவேண்டும். மிகுதித் தொகையினை பத்தாவது நாள் திருவிழாவுக்கு முன்னதாகச் செலுத்தி முடிக்கவேண்டும்.

ப.க.பரமலிங்கம்,
செயலாளர்,
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்.

(சி/15790)(45.3.7)

# இலங்கைப் பணியாளர்களின் குடியிருப்பு கட்டாரில் தீக்கிரை



கட்டார், மே 10

கட்டாரின் செகெலியா என்னும் பகுதியில் 350 இலங்கைப் பணியாளர்கள் தங்கியிருந்த குடியிருப்புகள் தீக்கிரையாகியுள்ளன.

கட்டாரிலுள்ள துப்புரவுத் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரியும் இலங்கையர்கள் தங்கியிருந்த குடியிருப்பிலேயே இவ்வாறு தீ பரவியுள்ளது.

இதன் காரணமாக தாம் தம்முடைய உடைமைகள் அனைத்தையும் இழந்து, உணவு, உறைவிடமற்ற நிலையில் இருப்பதாகப் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதிகாரிகள் இதுபற்றிக் கவனம் செலுத்தி தமக்கான நிவாரணங்களை வழங்கவில்லை எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தைத் தொடர்புகொண்டு கேட்டபோது, தீ விபத்து தொடர்பில் ஆராய்ந்து பார்க்குமாறு கட்டாரிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் உயர் அதிகாரி ஒருவருக்குஅறிவிக்கப்பட்டுள்ளது- என்று தெரிவிக்கப்பட்டது. (த-9)

## பஹ்ரேன் நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு

இலவசம்... இலவசம்... இலவசம்... 100
கனரக வாகன சாரதி
(அதி சொகுசு பஸ்) சம்பளம் 56,400/= - BD160
1BD = Rs. 353.03

தகைமைகள்:-
- செல்லுபடியான கல்ப் (GCC) லைசன்ஸ் வைத்திருப்பதுடன் ஐந்து வருடம் கனரக வாகனம் செலுத்துவதில் அனுபவம்.
- இடைநிலைக் கல்வி அல்லது இரண்டாந்தர கல்வி.
- ஆங்கிலம் அல்லது அறபு மொழி பேசத் தெரிந்திருத்தல் வேண்டும்.

Send your cv - prucv@sltnet.lk Visit our web - www.prudentialagency.lk
Ad.app.No: AL/2709/Advt 34/15

Prudential Foreign Employment Agency (Pvt) Ltd
No 72/1, 2nd Floor, Colombo Road, Kurunegala.
077 45 74 555 077 9 200 500 037 494 5555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## SB TRAVELS & TOURS (PVT) LTD

SPECIAL AIR FARES

| | | | | | |
|---|---|---|---|---|---|
| CHENNAI | 21,800/- | AI | LONDON | 79,500/- | KU |
| MADURAI | 17,400/- | MJ | TORONTO | 115,100/- | 9W |
| TRICHI | 26,600/ | UL | MALDIVES | 16,700/- | MU |
| BOMBAY | 28,100/- | AI | PARIS | 63,600/- | 9W |
| BENGALURE | 30,700/- | UL | NEWYORK | 101,800/- | CX |
| KOCHI | 25,500/- | UL | MELBOURNE | 90,900/- | MH |
| DELHI | 29,800/- | AI | CANTON | 63,900/- | MH |
| MALAYSIA | 29,600/- | MH | PERTH | 99,800/- | MH |
| SINGAPORE | 28,100/- | MH | NARITA | 65,900/- | CX |
| BANGKOK | 28,400/- | MH | AUCKLAND | 109,300/- | CX |
| | | | SYDNEY | 104,800/- | MH |

*Condition Apply

VISA / MASTER AMERICAN EXPRESS CARD ACCEPTED.

IATA

ONEWAY:

DUBAI - 17,300/- QR , DOHA - 19,800/- KU, SHARJAH - 14,000/- QR

சகல நாடுகளுக்குமான டிக்கட்டுகளை மிக நியாய கட்டணத்தில் பெற இன்றே அழையுங்கள்: 0771083480,81,82,83

0766911080,81,82,83,84,85,86,87,89,90

Doha Qatar Bureau Arrangement செய்து தரப்படும்.

India, Bangkok, Malaysia Visa Arrangement செய்து தரப்படும்.

No324, ALUTHMAWATHA ROAD, COLOMBO-15. TEL-011 2540280
No: 132, SRI KATHERASAN STREET, COLOMBO 13. TEL -011 2333322
NO 15, JEMPATTAH STRRET, COLOMBO-13. TEL- 011 2446666

E-mail: sbtravels99@yahoo.com Contact for Travel Insurence



## MBBS & BDS

இந்தியா, மலேசியா, சீனா, ரஷ்யாவில் பயிலுங்கள்



- சிறந்த தரமான கல்வியுடன் இணைந்த இலகுவான மற்றும் கட்டுப்படியான கட்டணங்கள் செலுத்தும் முறை
- மாணவர்களுக்கு நட்புரீதியான வசதிகள்

பாடத்திட்டத்திற்கான கட்டணம் US $3000 திற்கு மேல் (ஒரு வருடத்திற்கு)

மேலதிக விரபங்களுக்கு

கௌரவ கலாநிதி சேனாநாயக்கவை கீழேயுள்ள இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

INSTITUTE OF VOCATIONAL STUDIES

476, Kandy, Road,
Dalugama, Kelaniya, Sri Lanka.
Hotline: 0777444500



## கட்டார் நாட்டில்

### உடனடி வேலைவாய்ப்பு

**20 Store Helpers / 1200Qrs**

Salary : Rs.43200/-

**10 Heavy Vechile டிரைவர்**

( G.C.C Licence ) / 2000Qrs

Salary : Rs.72,000/-

நிபந்தனைகள் & சலுகைகள் : 1 QRS = Rs. 36.00

- **Helpers மட்டும் உணவு இலவசம்**
- தங்குமிடம்,போக்குவரத்து,மருத்துவ வசதி வழங்கப்படும்.
- 2 வருட ஒப்பந்தம் • வேலை நேரம் ஒரு நாளைக்கு 8 மணிநேரம் , கிழமைக்கு 48 மணி நேரம். கிழமையில் ஒரு நாள் லீவு உண்டு
- 2 வருட ஒப்பந்தகால நிறைவின் பின் இரு வழி விமானச்சீட்டு வழங்கப்படும் • ஏனைய நிபந்தனைகளும்,விதிமுறைகளும் கட்டார் நாட்டு தொழிலாளர் சட்டத்திற்கு அமைவானது.

ஓரளவு ஆங்கில அறிவு அவசியம்

40 வயதிற்கு உட்பட்டவர்கள் ( Helpers மட்டும் )

3 நாட்களில் வீசா பெற்றுத்தரப்படும் பாஸ்போட் உடன் கீழ்க்காணும் முகவரிக்கு விரைந்து வாருங்கள்

RODNEY FOREIGN EMPLOYMENT AGENCY

றொட்னி வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

இல. 292B-2/1, ஹவ்லொக் றோட், கொழும்பு - 05.

Tel : 0112552598|0112506900 |0773074744 |0752058078

E - Mail : rodneyagency@hotmail.com

AL / 2427 /ADVT 05/15

max adz



## Gnani musicals

(பியானோ, வீணை, வயலின், ஹார்மோனியம், சுருதிப்பெட்டி, மெலேடிக்கா, எக்கோடியன் அணிவகுப்பு பான்ட் உட்பட) அனைத்து வகையான இசைக்கருவிகளும் பழுதுபார்த்துத் தரப்படும்.

பாவித்த பழுதடைந்த இசைக்கருவிகள் பெறுமதிக்கேற்ப கொள்வனவு செய்யப்படும்.

தொடர்பு: ஞானி மியூசிக்கல்ஸ்

405, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

077 923 8376, 071 777 5757

(59587)(4.3.7)



## பங்குதாரர்கள் தேவை

அரச அங்கீகாரத்துடன் நவீன உலகின் தேவைக்கேற்ப கற்றல் வசதிகள் கொண்ட Blooming Buts International பாடசாலையில் மேலதிக வகுப்பறை வசதிகள் காணப்படுவதோடு இன்னும் தெமட்டக்கொடை, கொழும்பு-09 இல் அமைந்துள்ள எங்களது நிறுவனத்தில் ஆசிரியர் பயிலுநர் வகுப்பும் மிகத் திறமையான முறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இன்னும் எங்களது நிறுவனத்தினை நாடெங்கிலும் பரவ 5 இலட்சம் முதலீடு செய்யக்கூடிய பங்குதாரர்கள் தேவை. இதில் முதலீடு செய்பவர்களுக்கு பங்கு இலாபமும் பங்காளர் பதவியும் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிறுவனத்தில் முதலீட்டினை மேற்கொண்டு எங்களது எதிர்கால வாழ்க்கையினை வளமாக்கிக்கொள்ள இன்றே எங்களுடன் இணைந்துகொள்ளுங்கள்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**Blooming Buds International School & Academy**

**Teacher Training Institute**

No.390/2/7, Base Line Road,
Dematagoda, Colombo-09.

Tel : 011 2677641,
071 5669641

BLOOMING BUDS The Wisdom of children

PV 94034

Government Reg No.PV94034



## தேவை

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து வேலை ஒப்பந்தக்காரர்கள் தேவை

கம்பஹா மாவட்டத்திலுள்ள எமது கோழி பதனிடும் தொழிற்சாலை மற்றும் குஞ்சு பொரிக்கும் நிலையத்துக்கும் தொழிலாளர்களை வழங்கக் கூடிய வேலை ஒப்பந்தக்காரர்கள் தேவைப்படுகிறார்கள்.

தெரிவுசெய்யப்படும் தொழிலாளிகள் ஒவ்வொருவருக்கும் 20,000/= ரூபாவுக்கு குறையாத மாதச் சம்பளம், இலவச தங்குமிடவசதி, சகாயவிலையில் உணவு மற்றும் சலுகைகள் வழங்கப்படும்.

மேலும் விபரமறிய தொடர்பு கொள்ளுங்கள்:

குழும முகாமையாளர்
(ஆளணி மற்றும் நிர்வாகம்)

**பைரஹா பார்மஸ் PLC**

இல. 64/1, கிறீன் பார்க், நிட்டம்புவ.

மின்னஞ்சல்: dinesh@bairaha.com

தொலைபேசி: 077 3936766 / 033 4678428

தொலை நகல்: 033 4678407

(சி/16718)(4.3.7)



## வாடகைக்குண்டு

Concrete Mixer, Concrete, Vibrator, Plate Compacter, Tamping Rammer, Cable Hoist என்பன வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: சாமுவேல் 071 040 8630

(சி/15795)(4.3.7)

## வாடகைக்கு அல்லது குத்தகைக்கு

யாழ்ப்பாணம் திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் இல.187இல் அமைந்துள்ள நன்கு பராமரிக்கப்பட்ட வீடு (பிரதம செயலாளர் செயலகமாக இருந்த வீடு) இரண்டு வருட குத்தகைக்கு உள்ளது. நன்கு பராமரிக்கக்கூடிய நபர்கள் அல்லது வங்கிகள்.

தொடர்பு: 011 2055069 10 am - 7 pm

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கோண்டாவில் மேற்கு முத்தட்டி மட ஒழுங்கை K.K.S. Road இற்கு அருகில் 4 பரப்புக் காணியுடன் உள்ள புதுவீடு விற்பனைக்கு உண்டு. (சுற்று மதிலுடன்)

தொடர்புக்கு: 0773 117394 / 0775 296698

## வீடு வாடகைக்கு

நல்லூர் செட்டித்தெருவில் சகல வசதிகளுடன் 3 அறைகளுடைய தனி வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புக்கு: 0768 508411 / 0776 874651

## பாட்டுவாள் மிசின் விற்பனைக்கு

டிஜிற்றல் பாட்டுவாள் மிசின், 36'' அரியக்கூடியது.

தொடர்புக்கு: 071 497 7019

## வேலைவாய்ப்பு

FR Advertising கம்பனியில் வேலைக்கான வெற்றிடங்கள் உள்ளன. O/L, A/L தகைமை உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு:

கிளிநொச்சி : 0772803773
யாழ்ப்பாணம் : 0772083140

## வாடகைக்கு

யாழிலிருந்து கொழும்பு வரும் யாழ்தேவி A/C புகையிரதம் தரித்து நிற்கும் வெள்ளவத்தை புகையிரத நிலையத்திற்கு முன்பாக இல. 8, புகையிரத வீதி வெள்ளவத்தையில் அமைந்துள்ள லொட்ஜில் இணைந்த குளியலறையுடன் கூடிய அறைகள் மற்றும் தனி அறைகள் நாள், கிழமை, மாத வாடகைக்கு உண்டு.

தொடர்பு. 0712991256, 0112504281

## Electronic Gadgets

256 GB Pendrive (1 Year Warranty) - 3500/=
Selfie Stick - 1700/=
2600 mah power bank - 500/=
USB LEDS - 500/=
மேலும் பல....

தொடர்பு: 077 430 8010

இல.20 கே.கே.எஸ் வீதி,கொக்குவில்.
(பூநாறி மரத்தடி)

## பதவிவெற்றிடம்

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் அமைந்திருக்கும் "EVERSHINE AMA[illegible] ROOFING" தொழிற்சாலைக்கு கீழ்க் கண்ட பணியாளர்கள் மிகவும் அவசரமாக வேண்டப்படுகின்றார்கள்.

அனுபவம் மிக்கவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

உடன் விண்ணப்பிக்கவும்.

MACHINE OPERATORS & HELPERS

தொடர்பு: நாராயணா கட்டடப் பொருள்கள் வர்த்தகர்.
இல.92C, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(59595)(4.3.7)

## அருந்ததி

www.arunthathee.com இணையத்தினூடாக பதிவுகளை மேற்கொண்டு உங்களுக்குப் பொருத்தமான வரன்களை தேடிக் கொள்ளுங்கள். தரகுப் பணம் எதுவுமில்லை.

Mobile: 077 716 4524 (59585)(4.3.7)

கொழும்பு : 011 406 3282, யாழ்: 021 492 7527

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111



## பயிற்சி மூலம் ஆசிரியர்களை சேர்த்துக்கொள்ளல்

**English Medium (Gr 1 - 11) All Subjects 10 மாதங்களுக்கு**

**தொடர்புகள்: தெமட்டகொட, புத்தளம்,யாழ்ப்பாணம், சுதுமலை**

### தகைமைகள்

1. 18 தொடக்கம் 35 வயது வரை ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
2. க.பொ.த. சாதாரண தரம் 6 பாடங்களில் திறமை சித்தி மற்றும் க.பொ.த. உயர்தரம் படித்திருக்க வேண்டும்.
3. நேர்முகப்பரீட்சையில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு தெமட்டகொட, புத்தளம், யாழ்ப்பாணம், சுதுமலை ஆகிய இடங்களில் 10 மாதங்கள் பயிற்சி கொடுக்கப்படும்.
4. பயிற்சிக் காலத்தில் 1 தொடக்கம் 11ஆம் வகுப்பு வரை உள்ள தனியார் பாடசாலைகளில் பயிற்சி கொடுக்கப்படும். (English Medium)
5. உங்களது விண்ணப்பத்தை பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், தராதரப் பத்திர குறிப்பு பிரதி எடுத்து அத்துடன் 9X4 வடிவமுள்ள தபாலுறையில் 45 ரூபா முத்திரையுடன் தபாலுறையின் மேல் மூலையில் 1 தொடக்கம் 11ஆம் வகுப்பு வரை என்று எழுதி பதிவுத்தபாலில் அனுப்பவும். பாடங்களை பயிற்றுவிக்க ஆசிரியர்களை சேர்த்து பயிற்சி கொடுத்தல் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### தகுதி

- க.பொ.த. G.C.E.O/Level 6 பாடங்களில் திறமைசித்தி மற்றும் G.C.E. A/Level பாடங்களில் சித்தி அடைந்தவரும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.
- ஒரு நாள் செய்கைப்பயிற்சி வகுப்பு தெமட்டகொடை காரியாலயத்தில் நடைபெறும்.
- ஆங்கில பாடத்தில் குறைவானவர்களுக்கு 60 நாட்களில் ஆங்கில பயிற்சி கொடுக்கப்படும் மற்றும் கணனி கற்கைநெறி (இலவசமாக Diploma)
- பயிற்சி கிழமையில் 5 நாட்கள் வீதம் 10 மாதத்திற்குக்கொடுக்கப்படும்.
- [illegible] பகுதியில் உள்ள [illegible] கொடுக்கப்படும்.
- (போயா தினம் உட்பட அரசாங்க விடுமுறை தவிர ஏனைய நாட்கள் காலை 8.30 தொடக்கம் 5.00 வரை) வேலை நாட்களாகும்.

பயிற்சியின் பின்னர் மாதாந்த கட்டணம் ரூபா 34,500/- Salary ஐ கொடுத்து உங்களை எங்கள் நிறுவனத்தின் சிறந்த ஆசிரியர்களாக தேர்ந்தெடுக்க நாங்கள் தயார்

**Teacher Training Institute**

390/2/1 Baseline road Dematagoda

தொலைபேசி : 071 5669641/ 077 1529731/ 0112 677641

பதிவுத்தபாலில் அனுப்பவும் அனுப்ப வேண்டிய முகவரி

Officer
Blooming Buds International
Teaching Training Institute, No.388/1/1
Base Line Road, Dematagoda, Colombo-09

BLOOMING BUDS The Wisdom of children

PV 94034


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக அனுமதிக்கான கையேடு வெளியிடப்பட்டது

2014ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த.(உ/த) பரீட்சை முடிவுகளை அடிப்படை யாகக் கொண்டு 2014/2015ஆம் கல்வியாண்டு பல்கலைக்கழக அனுமதிக்கான கையேடு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் நேற்றுமுன் தினம் வெளி யிடப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களைப் பூரணப் படுத்தி இணையத்தினூடாக பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் வேண்டும். இணையத்தினூடாக சமர்ப்பித்ததற்கான அறிவுறுத்தல்கள் 2014/2015 பல்கலைக்கழக கைநூலில் குறிப் பிடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக அனுமதிக்கான நிபந்தனைகள் மற்றும் விதி முறைகள் அடங்கிய மேற்படி கையேட்டினை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவிலும் நாடளாவிய ரீதியில் விநியோக முகவர்களின் புத்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

ஏனைய தேவைப்பாடுகளை பூர்த்தி செய்து இலத்திரனியல் சேவையினூடாகப் பெறப்படும் அச்சுப்பிரதி விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து உதவிச் செயலாளர் – (பல்கலைக்கழக அனுமதிகள்) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு – இல 20, வாட்ஸ்பிளேஸ், கொழும்பு 7 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் மே 29 ஆம்திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும். நேரடியாக விண்ணப்பங்களை கையளிக்க முடியாது என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட சில கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் உளச்சார்பு பரீட்சையில் தோற்றுவது அவசியம் என்றும் குறிப்பிட்டுள்ளது. (வ–4)

---

## தமிழர்களை

பொது நிர்வாக அமைச்சர் கரு ஜெயசூரியவுடன், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தனவும் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ருவான் விஜேவர்த்தன, இலங்கையில் 30 ஆண்டுகளாக நீடித்த போருக்கு, மொழிப் பிரச்சினை முக்கியமானதொரு காரணம்.

இரு இனங்களுக்கு இடையில் உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கு சிங்களவர்கள் தமிழ் மொழியையும், தமிழர்கள் சிங்கள மொழியையும் கற்க வேண்டும். மொழியின் ஊடாக படையினரும் – சிங்கள மக்களும், தமிழர்களை வெல்ல முடியும், என்றும் தெரிவித்துள்ளார். (த–5)

## வலி. வடக்கில்

மீளக்குடியமர்ந்த மக்கள் தொடர் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர்.

இந்த நிலையில், மீளக்குடியமர்ந்த மக்களுக்கு உதவி செய்வதற்குப் புலம்பெயர் தமிழர்கள் முன்வந்துள்ளனர். அவர்களின் நிதிப் பங்களிப்பில், மீள்குடியமர்ந்த மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன.

வறுத்தலைவிளான் மற்றும் பளை, வீமன்காமம் தெற்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கி, 100 வீடுகள் புதிதாக நிர்மாணித்துக் கொடுக்கப்படவுள்ளன. அத்துடன், அந்தப் பிரதேசத்தில் மாதிரிக் கிராமத்துக்குரிய முழுமையான வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளன.

இதற்காக, குறித்த கிராமங்களின் தேவைகளை ஆராயும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த வாரமளவில் அந்த நடவடிக்கைகள் பூர்த்தியடையும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. அதன் பின்னர், அந்த மக்களுக்கான வீட்டுத் திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்று தவிசாளர் சோ.சுகிர்தன் குறிப்பிட்டார். (த–5)

## தனியார்

யாழ்.தூர சேவைப் பேருந்து உரிமையாளர்களின் கம்பனியின் தலைவர் சி.சிவபரன் இது தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையிலேயே போராட்டம் கைவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் நேர அட்டவணையற்ற சேவைகளை நிறுத்தும்படி பல தடவைகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்தும் எதுவித நடவடிக் கையும் எடுக்கப்படவில்லை. இதனால் வடக்கு மாகாணத்தில் தூர சேவைகளை மேற்கொள்ளும் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா சங்கங்கள் இணைந்து நாளை திங்கள்கிழமை பணிப்புறக் கணிப்புப் போராட்டம் நடத்தத் திட்டமிடப்பட்டது.

இருப்பினும் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், இந்த விடயத்தில் தலையிட்டு உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். யாழ்.மாவட்ட அரச அதிபர், இலங்கைப் போக்குவரத்து சபை அதிகாரிகள், யாழ்.தூர சேவைப் பஸ் உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரை அழைத்து கடந்த 7 ஆம் திகதி யாழ்.மாவட்டச் செயலகத்தில் கலந்துரையாடல் நடத்தியிருந்தார்.

இதில் உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு அமைவாக, தனியார் போக்குவரத்துச் சேவைக்கு 60 வீத சேவையும், இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு 40 வீத சேவையும் என்பதற்கு அமைவாக நேர அட்டவணை தயாரிப்பது என்று முடிவு செய்யப்பட்டது. நேர அட்டவணை தயாரிப்புக்கு குழு நியமிக்கப்பட்டது. இவர்கள் இரண்டு கிழமைக்குள் நேர அட்டவணை தயாரிப்பார்கள் என்று உறுதியும் வழங்கப்பட்டது.

இதேபோன்று வடக்கு மாகாண அமைச்சரினால், ஏனைய மாவட்டங்களிலும் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. இதற்கமைய பொதுவான நேர அட்டவணை தயாரிப்பதற்கு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக நாளை நடைபெறவிருந்த பணிப் புறக்கணிப்பு போராட்டத்தை கைவிடுகின்றோம்.

மேலும், யாழ்ப்பாணத்தில் நவீன முறையில் தனியாருக்கும் – இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கும் பொதுவான பேருந்து தரிப்பிடத்தை அமைத்து தருவதாக அமைச்சர் பா.டெனீஸ்வரன் உறுதியளித்துள்ளதாகவும், அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த–5)

## மேடைக்கு

செல்கின்றது.

இந்தக் கூட்டத்துக்கு, மஹிந்த ராஜபக்ஷ தனது உரையை அனுப்பி வைத்திருந்தார். அதில், விரைவில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மேடைக்கு வரவுள்ளதாக கூறியுள்ளார். ஆனால் தாம் எப்போது மேடைக்கு வர வேண்டும் என்பதை மக்களே தீர்மானிப்பர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த–5)

## ஓய்வு பெற்ற

இடத்திலேயே உயிரிழந்தார்.

பஸ் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார் எனவும், விபத்து தொடர் பில் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன எனவும் பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவரின் சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நேற்று பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டிருந்தது. (த)

## இனப்படுகொலைக்கு

நாள்களில் அந்த மக்களுக்காகவும், அவர்களது படுகொலைகளுக்காகவும் நீதி கேட்கவேண்டும். 6 ஆண்டுகள் கடந்தும் நீதி கிடைக்கவில்லை.

அத்துடன், தமிழக அரசு இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கவேண்டும் என்ற வரலாற்றுத் தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தது. அந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தவேண்டும் என்று கோருகின்றோம். இலங்கையின் உற்பத்திப் பொருள்கள், இலங்கை நிறுவனங்கள் தமிழகத்தில் தொடர்ந்தும் செயற்படுவதனை தடை செய்ய வேண்டும். அந்த நிறுவனங்களை இழுத்து மூட வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை முன்வைத்து, தமிழகத்தில் இன்று முதல் தொடர்ச்சியாகப் – பரவலாக – கவனவீர்ப்புப் போராட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக, தமிழக மாணவர் மற்றும் இளைஞர் இயக்கங்கள் தெரிவித்துள்ளன. (த–5)

## சீனாவை

இந்தியக் கடற்படையின் கப்பல்கள் மற்றும் விமானங்களும், இந்தியக் கடலோரக் காவல் படையும், கிழக்கு மற்றும் மேற்குக் கடல் பகுதிகளில் கண்காணிப்பை மேற்கொண்டுள்ளன.

கண்காணிப்புத் தொடர்பான தகவல்கள் பல்வேறு முகவர் அமைப்புகளுடன் பகிரப்படுகின்றன. இதற்காகக் கடலோர ராடர் வலையமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலும், மொறிஸியசிலும், கடலோரக் கண்காணிப்பு ராடர்களையும், தன்னியக்க அடையாளப் பொறிமுறைகளையும் இந்தியா நிறுவியுள்ளது. இந்தியப் பெருங்கடல் நாடுகளில், அந்த நாடுகளின் வேண்டுகோளுக்கமைய, ராடர்கள் நிறுவப்படும். கப்பல்களைக் கண்காணிக்க இவை உதவும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த–5)

**விற்பனைக்கு**

அலுவலக கதிரைகள் (தம்ரோ), மேசை, அலுமாரி, கண்ணாடி மேசை என்பன உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
077 6021794

**தவறிவிட்டது**

K.K.S. வீதி, கொக்குவில் சந்தை அயலில் மூன்று தேசிய அடையாள அட்டைகளுடன் பேர்ஸ் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். தர்மலிங்கம் - தவச்செல்வன், வளலாய், அச்சுவேலி.

தொ.பே. 0776620882

## மரண அறிவித்தல்

### கனகசபாபதி அருளானந்தம்

(இளைப்பாறிய பிரதி அதிபர், ஹாட்லிக் கல்லூரி)



பருத்தித்துறை புலோலி மேற்கு, திருநாவலூரைப் பிறப்பிடமாகவும், புலோலி மேற்கு, தம்பசிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய பிரதி அதிபர், ஹாட் லிக் கல்லூரி, பிரபல கணித ஆசான் க. அருளானந்தம் நேற்று (09.05. 2015) சனிக் கிழமை அகால மரணமா னார்.

அன்னார் காலஞ் சென்ற கனகசபாபதி நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மக னும், காலஞ்சென்ற வ. வேலுப்பிள்ளை மற்றும் நவமணி தம் பதியரின் மருமகனும், வசந்தாதேவியின் (ஆசிரியை, மெ.மெ.உ. பாடசாலை) அன்புக் கணவரும், அனோஜா வின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.05. 2015) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.
T.P:- 0212264250

146, தம்பசிட்டி வீதி,
பருத்தித்துறை.

## மரண அறிவித்தல்

### திருமதி நல்லம்மா கனகரத்தினம்



முருகமூர்த்தி கோயில் வீதி, சாவகச்சேரி வடக்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா கனகரத்தினம் நேற்று (09.05.2015) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கனகரத்தினத்தின் (ராசா) அன்பு மனைவியும், தங்கமணி (கனடா), கணேசலிங்கம் (டென்மார்க்), தவமணி சரோஜாதேவி (லண்டன்), சரோஜா மலர் (டென்மார்க்), லிங்கராஜ் (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு தாயும், மகாலிங்கம் (பிள்ளையார் ஸ்ரோர்ஸ் - சாவகச்சேரி, தற்போது கனடா), தபோதினி (டென்மார்க்), நல்லதம்பி (சாவகச்சேரி, நகரசபை), பாலகுலோஜன் (டென்மார்க்), ஜெகதீசன் (டென்மார்க்), தனுசா (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமியும், அருணா கணேஸ்வரன், மிருணா-சசிகுமார் ஐங்கரன் (கனடா), சேயனா கிளவுஸ் சோபியா (டென்மார்க்), சுபோஜனா- மதிவதனன் (பிரதேச செயலகம்-தென்மராட்சி), சுஜிதா (சுகாதாரத் திணைக்களம்-யாழ்ப்பாணம்), கோபிகா (சாவகச்சேரி-நகரசபை), ஹரிபன் அதிதா (லண்டன்), கீர்த்திகன் (டென்மார்க்) ஆகியோரின் பேர்த்தியும், அய்சாலினி ஆதீஸ் வருகனி டிலுக்ஷிகா ஹிருத்திக் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் ஒரு மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முருகமூர்த்தி கோயில் வீதி,
சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி.

தகவல்: நா.நல்லதம்பி.
(மருமகன்)

## மரண அறிவித்தல்

ஓம் ஸ்ரீ சாய்ராம்

### திருமதி மனோன்மணி நல்லையா (சங்கானை)

(ஓய்வுநிலை தாதிய உத்தியோகத்தர்,
யாழ். போதனா வைத்தியசாலை)



ஓடக்கரை வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி நல்லையா நேற்று (09.05.2015) சனிக்கிழமை இயற்கை எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு –செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும் நல்லையாவின் (ஓய்வுநிலை அதிபர், யா/சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயம், சங்கானை சத்திய சாயி பாபா நிலையம்) அருமை மனைவியும், ஹரிகரன் (ஆசிரியர், பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.), கமல்ராஜ் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற செந்தமிழ்ச்செல்வம் மற்றும் இராசகுலேந்திரன், சந்திரகுமார், ஜெயானந்தசிங்கம், தயாநிதி (தாதிய உத்தியோகத்தர், பிரதேச வைத்தியசாலை, சங்கானை) ஆகியோரின் அருமைச் சகோதரியும், மைதிலி (ஆசிரியை, கிளி/வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலை) தமிழினி (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் மனோகராதேவி, தேவராணி, வரதராசன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஆகாஸ், ஆர்த்தி (மானிப்பாய் சத்திய சாயி பாடசாலை மாணவர்கள் ) காருண்யன், துவாரகா (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.05.2015) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.
தொ.பே.: 021 225 0225, 077 9 7734

ஓடக்கரை வீதி,
சங்கானை.

What to do after O/L, A/L...
Do u want a white collar job
38 நாட்களில் சரளமாக பேச..
ஆங்கிலம்
2 மாதகால பகுதிநேர வகுப்பு
சனி - ஞாயிறு மு.ப 8.30 - பி.ப 4.30 மணிவரை
வார நாட்கள் காலை 8.00 - இரவு 9.00 மணி வரை.
35 பாடத்திட்டத்தை முடிக்க Rs.39,400 மாத்திரமே (உணவு, தங்குமிடம் இலவசம்.)
உங்கள் ஆங்கில மொழித்திறனை வளர்த்துக்கொள்வதற்கும்.. நல்ல தொழில் வாய்ப்பைப் பெறுவதற்கும்..
பாடநெறியின் இறுதியில் உடனடியாக வேலைவாய்ப்பு
Job Guaranteed 100% After Course

SPOKEN English
G.C.E O/L பரீட்சையில் சித்தியடையவில்லையா? கவலை வேண்டாம்.
இதோ!! அதற்கான அரிய சந்தர்ப்பம்!!!
பாடநெறிக்கட்டணம் Rs.5000/-
உணவு, தங்குமிட வசதி தேவையானவர்களுக்கு ஒழுங்கு செய்துதரப்படும்.
உங்களை தகுந்த முறையில் A சித்தியடைய வைப்பதே எமது நோக்கம். தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் சிறப்பாக கற்பிக்கப்படும். சகலவித வசதிகளுடன் காலை நேர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
திங்கள் முதல் சனி வரை மு.ப 8.30 முதல் பி.ப 3.30 வரை.
எங்களுடன் இணையுங்கள்.
Blooming Buds International
TEACHER TRAINING INSTITUTE/ACADEMY OF SPOKEN ENGLISH
No.390/2/1, Baseline Road, Dematagoda. T.P : 0112 677641, 077 4690044, 077 1529731

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்தில் இளைஞர் இருவர் காயம்

யாழ்ப்பாணம், மே 10

பஸ்–மோட்டார் சைக்கிள் மோதிக் கொண்ட விபத்தில் இளைஞர் இருவர் படுகாயமடைந்து யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

புத்தூர்–சுன்னாகம் இடையேயான வீதியில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்த மான பஸ்ஸும் மோட்டார் சைக்கிளுமே இவ்வாறு மோதி விபத்துக்குள்ளானது.

இதில் மோட்டார் சைக்கிளில் வந்த அச்சுவேலி, தோப்பு மற்றும், ஆவரங்கால் மேற்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இரு வர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் வண்டியும்அச்சுவேலி பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. (வ)

## மரண அறிவித்தல்



# ஏகாம்பரம் தில்லையம்பலம்

( ஓய்வு நிலை அதிபர் )

கப்பூதுவைப் பிறப்பிடமாகவும் கரணவாய் தெற்கு, வீரப்பதிராயனை, வசிப்பிடமாகவும் கொண்ட ஏகாம்பரம் தில்லையம்பலம் நேற்று (09.05.2015) சனிக் கிழமை காலை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஏகாம்பரம்-வேதநாயகி தம்பதியரின் அன்பு மகனும் , காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை-தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற வள்ளியம்மையின் அன்புக் கணவரும், கமலாம்பிகை, ஏகாம்பரம், இந்துமதி (ஆசிரியை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுந்தரலிங்கம், மாலினி, பாலகிருஷ்ணன் ஆகியோரினதும் கிரிதரன், முரளிதரன், சுகிதரன், யசோதா, தாட்சாயினி ஆகியோரினதும் பாசமிகு மாமனும், அரவிந்தன், யாழினி, சாம்பவி, அஞ்சனா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான அருணாசலம், செல்லம்மா, நல்லதம்பி, தணிகாசலம், சோமசுந்தரம் மற்றும் தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கார்த்திகேசுவின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.05.2015) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீரப்பதிராயன்,
கரணவாய் கிழக்கு, கரவெட்டி.

தகவல்:
திருமதி இந்துமதி பாலகிருஷ்ணன்
(ஆசிரியை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)


care®

## Livelihood Assessment Consultancy – Expression of Interest

1. CARE International Sri Lanka was established in 1950 with a focus on food security and maternal and child health. Today, we work to address the root causes of poverty and marginalization of vulnerable groups by providing skills training to youth and livelihood assistance to communities.
2. **Overall objective of the consultancy**
   This assessment is to guide the provision of inputs to communities in Mannar, Vavuniya, Kilinochchi and Mullaithivu districts that would lead to sustainable livelihoods and enhance community harmony and integration.
3. **Scope and methods of the work**
   The task involves arranging individual / group discussions with beneficiaries and developing business proposals for each individual or group in line with project objective.
   The methodology followed should be participatory, complying with Do No Harm principles. The assessor should submit prioritized business activities on a case by case basis derived through standard transparent practices such as the use of questionnaires etc. The assessor should also prepare relevant documentation identifying assets and infrastructure development requirements inclusive of current market and cost information.
4. **Purpose of the consultancy**
   - To assess current livelihood status of communities with regards to access to markets, services and assets and identify feasible options for improvements in 18 selected GN divisions.
   - To identify entrepreneurial initiatives with the potential to revitalize the local economy through asset restoration or backstopping in 8 selected DS divisions.
5. **Expected outcome and deliverables**
   - Assessment report with recommendations and relevant sectoral technical inputs as per the purpose set out in item 4, on livelihood improvement strategies for each identified case.
6. **Competency and expertise requirements**
   - Masters degree in a relevant field.
   - Minimum 10 years of experience in an NGO work environment.
   - Documented prior experience in similar consultancy activities in the northern districts of the country.
   - Combination of relevant education and consultancy work experience will also be acceptable.
7. **Operational aspects**
   CARE International Sri Lanka will keep minimal contact with the consultant with regards to his or her daily operations. The consultant is responsible for all relevant activities including logistic.
8. **Reporting requirements**
   A weekly progress report needs to be sent to CARE, mentioning any challenges and deviations from activity plan. A comprehensive final report should be submitted along with assessment data one week from the end date of the assignment.
9. **Confidentiality**
   The assessment report and all data including beneficiary information acquired in the process of the consultancy are the property of CARE and not to be shared without the expressed permission of CARE International Sri Lanka.
10. **Submission of Expression Of Interest**
   Interested consultants are invited to submit de[illegible] with activity plan and budget. Detailed curricu[illegible] appendix to the proposal which must be submitted electronically to: Sabesan.Senathirajah@care.org not later than 15 May 2015.



## நாகபூஷணி திருமண சேவை

டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன் மற்றும் வங்கி உத்தியோகத்தர், அரச உத்தியோகத்தர் தனியார் துறையைச் சேர்ந்தவர். உள்நாட்டு/ வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் எம்மிடம் நிறைய உள்ளன. நீங்கள் விரும்பும் மணமக்களின் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு
077 138 7596, 021 222 9306
075 554 6000, 071 894 5692
383/14B, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
(நல்லூர் கோவில் வடக்குப்பக்கம்)
Email: nakapoosanywedding@gmail.com
வாரத்தின் ஏழு நாள்களும் திறந்திருக்கும்.


## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 27.03.1951 | மறைவு 03.05.2015

யாழ்.திருநெல்வேலி, தாளையடி லேனைப் பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கனடா Etobicoke வை தற்போது வதிவிடமாகவும் கொண்ட

### சுந்தையா தில்லைநாதன் (துரை)

03.05.2015 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்த செய்தியறிந்து மிகுந்த துயரமடைந்தோம்.
அவரது பிரிவால் துயருற்றிருக்கும் சித்தி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளது துயரத்தில் நாமும் பங்கு கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
இன்றைய இறுதிக்கிரியைகளில் கலந்து கொள்ள முடியாதிருக்கும்.

யோகப் பெரியப்பாவின்
பிள்ளைகள்
திருநெல்வேலி.

(59638)(4.3.7)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி சுந்தரேஸ்வரி ஜெயக்குமாரன்

(சுந்தரி மிஸ் - வீணை ஆசிரியர்)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் நல்லூரை தற்போதைய வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி சுந்தரேஸ்வரி ஜெயக் குமாரன் நேற்று (09.05.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் நயினாதீவைச் சேர்ந்த காலஞ் சென்றவர்களான இரகுப்பிள்ளை - நாகம்[illegible] தம்பதியரின் ஏக புத்திரியும், காலஞ்சென்றவர் கள[illegible] தியாகராஜா தம்பதியரின் அன்பு மரு மகளும், காலஞ்சென்ற ஜெயக்குமாரனின் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும், காங்கேயன் (லண்டன்), பரராஜசிங்கம் (கொழும்பு), காலஞ்சென்ற வாமதேவன் மற்றும் தியாகராஜா (கொழும்பு) ஆகியோரின் அருமைச் சகோதரியும், பத்மாவதி (லண்டன்), சிவமணி (கொழும்பு), காலஞ்சென்ற பேரின்பமணி மற்றும் தியாகசொரூபினி (கொழும்பு) ஆகியோரின் அருமை மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12.00 மணிக்கு செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

230, சட்டநாதர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்.

(59641) (45.3.7)

### திருமதி செல்லம்மா கணபதிப்பிள்ளை



கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும், கைதடி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா கணபதிப்பிள்ளை நேற்று (09.05.2015) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-கதிராசிப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பர்-கற்பகம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், செல்வராசா (நீர்வேலி), செல்வமலர், காலஞ்சென்ற செல்வரத்தினம் (ஜேர்மனி) மற்றும் செல்லத்துரை (சுவிஸ்), செல்வநாதன் (திருகோணமலை), செல்வராணி, செல்வரஞ்சிதம், செல்வநாயகம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், இராஜேஸ்வரி, இராசநாயகம், நாகபுஷ்பம், ஸ்ரீமகள், காலஞ் சென்ற செல்வநந்தினி மற்றும் பரமேஸ்வரன், சிவஞானசுந்தரம், லலிதாம்பிகை ஆகியோரின் அன்பு மாமியும், புவிக்காந், குமுதினி, லக்ஸ் சியா, சிம்சோன், சங்கவி, கிரிசாந்தி, பிரசாந்தி, பதுசாந்தன், சபேசன், தர்சானியா, சுவர்ணன், சுபாகீனன், பிரவீன் ஆகியோரின் அன்புப் பேர்த்தி யும் கிருத்திக்கின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2015) ஞாயிற்றுக் கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

[illegible] 0214916598

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவின்றி முடிந்தது நண்பர்களின் போர்



யாழ்ப்பாணம், மே 10
நண்பர்களின் போர் என்று வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் கனகரத்தினம் மகாவித்தியாலய அணிக்கும் முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி அணிக்கும் இடையிலான இரு நாட்கள் கொண்ட துடுப்பாட்டத் தொடர் நேற்றைய தினம் கனகரத்தினம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கனகரத்தினம் மகா வித்தியாலய அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தனர். இதன்படி கனகரத்தினம் மகா வித்தியாலயம் கலைச்செல்வனின் அரைச்சதத்தின் உதவியுடன் முதலாம் நாள் ஆட்ட நேர முடிவில் 7 இலக்குகளை இழந்து 193 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இந்த நிலையில் இரண்டாவதும் இறுதி நாளுமான நேற்று தொடர்ந்து களமிறங்கியது கனகரத்தினம் மகா வித்தியாலயம். மேலதிகமாக 24 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் சகல இலக்கையும் இழந்தது.

பந்து வீச்சில் வித்தியானந்த கல்லூரி அணி சார்பாக அதிகபட்சமாக அஞ்சயன் 5இலக்குகளைக் கைப்பற்றினார்.

218 ஓட்டங்களைப் பெற்றால் முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெறலாம் என்ற நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய முள்ளியவளை வித்தியானந்த கல்லூரிக்கு வினோசன், அருண் இருவரும் இணைந்து இணைப்பாட்டமாக கனகரத்தினம் மகா வித்தியாலய பந்துவீச்சாளர்களின் பந்துகளை துவைத்தெடுத்து பலத்துக்குமேல் பலம் சேர்த்தனர். வினோசன் 87 ஓட்டங்களையும் அருணன் 84 ஓட்டங்களையும் தயாளன் 43 ஓட்டங்களையும் குவிக்க வித்தியானந்த தனது முதல் இன்னிங்ஸிற்காக 281 ஓட்டங்களைக் குவித்தது.

பந்துவீச்சில் கனகரத்தினம் மகா வித்தியாலயம் சார்பாக விதுசன் அதிகபட்சமாக 4இலக்குகளைக் கைப்பற்றினார்.

63 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையுடன் தமது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த கனகரத்தினம் மகா வித்தியாலய அணியினர் 61-4 என்ற நிலையில் இருந்த பொழுது ஆட்டத்தின் கால அவகாசம் முடிவடைந்து ஆட்டம் சமநிலையானது.

ஆட்டநாயகனாக வித்தியானந்தக் கல்லூரியைச் சேர்ந்த வினோசனும் சிறந்த துடுப்பாட்ட வீரராக வித்தியானந்தக் கல்லூரியைச் சேர்ந்த அருணனும் சிறந்த பந்து வீச்சாளராக வித்தியானந்தக் கல்லூரியைச் சேர்ந்த அஞ்சயனும் சிறந்த களத் தடுப்பாளராக கனகரட்னம் மகா வித்தியாலத்தைச் சேர்ந்த விஷ்ணு கரனும் தெரி வானார்கள்.

நண்பர்களின் போருக்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் தெய் வேந்திரராஜாவும் கலந்து கொண்டனர்.

(த-ரி-422-23)

## பஞ்சாப்புக்கு பத்தாவது தோல்வி

கொல்கத்தா எதிர் பஞ்சாப் அணிகளுக்கிடையிலான ஆட்டம். புள்ளிப் பட்டியலில் மூன்றாவது இடத்திலுள்ள கொல்கத்தா இந்த ஆட்டத்தை வென்றுவிட்டால் அடுத்த சுற்றுக்கு முன்னேறுவது கிட்டத்தட்ட உறுதியாகிவிடும். அதே நேரம் தொடரில் இருந்து வெளியேறினாலும் கௌரவமாக வெளியேறவேண்டும் என்பதற்காக தனது தொடர் தோல்விகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முனைப்பில் பஞ்சாப்பும் உறுதியாய் இருந்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க களத்தில் கோராவுடன் முரளி விஜய். நடப்புத் தொடரில் பஞ்சாப்பின் சிறந்த ஆரம்ப இணைப்பாட்டம் என்று சொல்லிக் கொள்ளும் அளவுக்கு இருவரும் சிறந்த பங்களிப்பைக் கொடுத்தனர். வோகார அடித்த சிக்சர்கள் ஒவ்வொன்றும் பவிலியனுக்குள் சென்று வந்தது. ஆரம்ப இணைப்பாட்டத்தை முதலில் முறித்துக்கொண்டார் விஜய். சிறிது நேரத்தில் வோகாரா அரைச் சதத்தைத் தவறவிட்டு 39 ஓட்டங்களுடன் விடைபெற களத்தில் மக்ஸ்வெல். நடப்புத் தொடரில் மக்ஸ்வெல்லின் உண்மையான ஆட்டம் நேற்றுத்தான் அரங்கேறியது. மில்லருடன் இணைந்து பிரித்து மேய்ந்தார் பஞ்சாப்பின்பெறுமதியான வீரர்கள் தாங்கள் என்பதனை நேற்று நிரூபித்தார்கள். நடப்பு தொடரில் வேறு எந்த வீரர்களும் சாதிக்காததை பஞ்சாப் வீரர்கள் சாதித்தார்கள் அதாவது களமிறங்கிய அனைத்து வீரர்களும் சிக்சர் விளாசத் தவறவில்லை முடிவில் பஞ்சாப் 183-5.

120 பந்துகளில் 184 ஓட்டங்கள் என்பது சற்றுக் கடினமான ஒன்று. ஆனாலும் கொல்கத்தாவால் முடியும். களத்தில் கம்பீருடன் உத்தப்பா. வழக்கம்போல் இணைப்பாட்டம் கைவிடவில்லை. ஆனால் வழக்கத்துக்கு மாறாகமுதலாவதாகஉத்தப்பா ஆட்டமிழந்தார். கம்பீரும் பாண்டேயும் சுமாரான பங்களிப்பு. சூரியக்குமார் யாதவ் வந்த வேகத்தில் பவிலியன் திரும்ப 11ஆவது பந்துப் பரிமாற்றத்தில் 83-4 என்ற நிலையில் இருந்தது கொல்கத்தா. வெற்றிக்காக 54 பந்துகளில் 101 ஓட்டங்களை பெறவெண்டும். ஆட்டத்தை மாற்றினார் யூசுப் பதான். எதிர்கொண்ட முதல் பந்தில் இருந்து அதிரடி காட்டினார் ரசல். 19 பந்துகளில் 4 சிக்சர்களுடன் அரைச்சதம் கடந்து அசத்தினார். ரசலை பவிலியனுக்கு அனுப்பினார் அக்சர் பட்டேல். ஆனபோதிலும் விட வில்லை சாவ்லா ஆட்டத்தை சிக்சருடன் முடித்து வைத்தார். (ரி)

## பங்களாதேஷுக்கு மரண அடி பழி தீர்த்தது பாகிஸ்தான் அணி




பங்களாதேஷ் எதிர் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டத்தில் 326 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷை வீழ்த்தி பாகிஸ்தான் அபார வெற்றியைப் பதிவு செய்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ்-பாகிஸ்தானை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணிக்க பாகிஸ்தான் தனது முதல் இன்னிங்ஸை 557-8 என்ற நிலையில் இடைநிறுத்தியது.

பந்து வீச்சில் பங்களாதேஷ் சார்பாக இஸ்லாம் 3 இலக்குகளையும் சஹிட் மற்றும் ஹொாம் தலா 2 இலக்குகளையும் ஷகிப் அல் ஹசன் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

558 ஓட்டங்களைப் பெற்றால் முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெறலாம் என்ற நிலையில் களமிறங்கிய பங்களாதேஷ் 203 ஓட் டங்களுடன் சகல இலக்குகளையும் இழந்து தவித்தது.

இரண்டாவது இன்னிங்ஸிற்காக தொடர்ந்து பங்களாதேஷ் துடுப்பெடுத்தாடப் பணிக்கக்கூடிய அந்தஸ்தில் இருந்தாலும் தானே துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பாகிஸ்தான் மிக விரைவாக 195-6 என்ற நிலையை அடைந்து இரண்டாவது இன்னிங்ஸை இடைநிறுத்தி பங்களாதேஷுற்கு வெற்றியிலக்காக 550 ஓட்டங்களை நிர்ணயித்தது.

கடினமான இலக்கை நோக்கி களமிறங்கிய பங்களாதேஷ் ஆட்டத்தின் மூன்றாம் நாளின் முடிவில் 63-1 என்ற நிலையில் இருந்தது. நான்காம் நாள் ஆட்டம் ஆரம்பமாகி சிறிது நேரத்திலேயே இக்பால் அரைச் சதத்தை தவறவிட்டுப் பவிலியன் திரும்பினார். இக்பால் ஆட்டமிழந்து அடுத்த ஒரு மணி நேரத்தில் முகமதுல்லா 2 ஓட்டங் களுடனும் சகிப் அல் ஹசன் 13 ஓட்டங்களுடனும் ரஹிம் டக்கிலும் சர்கர் ஒரு ஓட்டத்துடனும் பவிலியன் திரும்ப பங்களாதேஷின் தோல்வி உறதியானது. ஒரு முனையில் அரைச் சதம் கடந்து போராடிக் கொண்டிருந்த ஹக்கியூவை அனுப்பி வைத்தார் சாஜ். பின் வரிசை வீரர்களும் பெரிதாக இல்லை. முடிவில் பங்களாதேஷ் 221 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்து 328 ஓட்டங்களால் தோல்வி யடைந்தது. ஆட்டநாயகனாகவும் தொடராட்ட நாயகனாகவும் அசால் அலி தெரிவானார். (த-ரி)







## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம்,மே 10

**உதைபந்தாட்டச் சம்மேளனத் தொடர்**

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் எவ்.ஏ கிண்ணத்துக்கான உதை பந்தாட்ட தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் ஜோசப் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மன்னார் கில்லறி விளையாட்டுக் கழக அணி மன்னார் தாழ்வுபாடு ஆயர் இராயப்புஜோசப் ஆண்டகை விளையாட்டுக்கழக மைதானத்தில் மோதவுள்ளது. இதேவேளை அல்வாய் நண்பர்கள் விளயாட்டுக் கழக மைதானத்தில் மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

**கே.ஸி.ஸி.ஸி. வி.க. தொடர்**

கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழகம் நடத்தும் 30பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பற்றிசியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சிறி காமாட்சி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மதியம் 1மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஹாட்லீஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஒல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக்கழக 'ஏ' அணி மோதவுள்ளது.

இதே கழகம் நடந்தும் கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக்கிண்ணத்திற்கான ஆண் பெண் இருபாலாருக்கான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம்பெற்று வருகின்றது. அதில் மாலை 3.30 மணிக்கு இடம்பெறவுள்ள பெண்களுக்கான ஆட்டத்தில் கே.கே.எஸ். விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. 4.30மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

**நட்பு ரீதியிலான ஆட்டம்**

முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி பழைய மாணவர் அணிக்கும் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் அணிக்கும் இடையிலான 50 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்டம் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

**புனித தோமையார் வி.க. தொடர்**

மாதகல் புனித தோமையார் தேவாலயத்தின் பெருவிழாவையும் புனித தோமையார் இளைஞர் கழகத்தின் 11ஆவது ஆண்டு நிறைவையும் முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக 36 கழகங்களுக்கிடையில் நடத்தப்படும் உதைபந்தாட்டத் தொடர் மேற்படி கழக மைதானத்தில் இன்று தொடக்கம் எதிர்வரும் யூலை மாதம் வரை நடைபெறவுள்ளது.

குறித்த தொடரின் இன்றைய ஆட்டத்தில் மாலை 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கல்வளை [illegible] யகர் கழகத்தை எதிர்த்து மகா[illegible] கழகம் மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் பிறைற் ஸ்ரார் கழகத்தை எதிர்த்து தெல்லிப்பழை கழகம் மோதவுள்ளது. (த-ரி-23-[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தச்சுவேலையாள்கள் தேவை

தச்சு வேலை தெரிந்தவர்கள் உடன் தேவை. கூடியளவான சம்பளமும், தொடர்ச்சியான வேலையும் வழங்கப்படும்.

தொடர்பு: 077 3001763

## காணி விற்பனைக்கு

நல்லூர் ஆலயத்தில் இருந்து 1km தூரத்தினுள் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0777 341994

## Wisdom Business Academy
The Specialist in CIMA Education

மாணவர்களே ! உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் !

3 மாதங்களில் CIMA தொழில்சார் கற்கைநெறியின் 1வது நிலையினை பூர்த்தி செய்து தொழிற்சந்தைக்கான பயணத்தினை இன்றே ஆரம்பியுங்கள்.

புதிய வாரநாள் வகுப்புகள் ஆரம்பம்
12th May 2015. 8.00 AM

[அனுமதிகள் 25 மாணவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது ]
உங்கள் அனுமதிக்கு இன்றே முந்துங்கள்.

No 154A/1, நாவலர் வீதி,
[நாவலர் வீதியும் பிறவுன் வீதியும் சந்திக்கும் இடத்தில்]
யாழ்ப்பாணம்.

தொலைபேசி – 021 222 0727; 021 720 0777

## ALL OUT
Pest control service



கறையான் தொல்லையா?

உங்கள் கட்டடங்களை உத்தரவாதத்துடன் பாதுகாத்து கொடுக்க நாங்கள் இருக்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
ந. ருபகாந்த்
077 151 5897, 021 499 3200

## Pillaiyar Inn & Garden Restaurant

இந்திய சமயற்கலை வல்லுநரின் கைவண்ணத்தில் பூரி, சப்பாத்தி, மசாலா தோசை மற்றும் பல இந்திய உணவுகள் உயர்தரத்திலும் மலிவான விலையிலும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புக்கு :
31st, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2829

## LONDON METROPOLITAN COLLEGE

சர்வதேச தரத்திலான ஆங்கில கற்கை நெறிகளை நடத்தும் யாழ்ப்பாணத்தின் முன்னிலை ஆங்கில கல்வி நிறுவனம்

**IELTS**
Duration: 80 hours, Week/ Week end

- ஒவ்வொரு மாணவர்மீதும் தனிப்பட்ட கவனம்
- முற்றிலும் நவீன மயப் படுத்தப்பட்ட கற்பித்தல் வசதி
- IELTS 5.5-7.0 Band பெறுவதற்கான உத்தரவாதம்

**IELTS life skills A1,B1**
(Speaking and Listening)
Duration: 48 hrs, Week/ Week ends

- UK settlement visa இற்கு அரசாங்கத்தினால் சிபாரிசு செய்யப்பட்டது.
- UK BA இன் புதிய நடைமுறைக்கேற்ப Settlement விசாவிற்கான IELTS A1 வகுப்புக்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

**Certificate in SPOKEN ENGLISH WITH GRAMMAR**
(Quick learning program)
Duration: 48hours, Week/ Week ends

- ஆங்கிலத்தில் சரளமான உரையாடல் திறனை வளர்த்து கொள்ள விரும்புவோர்க்கான கற்கைநெறி.
- ஆங்கில உரையாடல் புலமையை வளர்ப்பது தொடர்பான பூரண விளக்கங்களுடன் கூடிய கற்கைநெறி.

**DIPLOMA IN ENGLISH**
Duration: 3 Months,
Week/ Week ends
Writing -60Hrs, Reading -48Hrs,
Listening -48Hrs, Speaking -48Hrs

- தொழில்தேடுவோர், தொழிலபுரிவோர், A/L பரீட்சைக்கு தோற்றியோர் ஆங்கில புலமையை வளர்த்து கொள்வதற்கான கற்கைநெறி.
- Speaking, Reading, Listening, Writing ஆகியன விசேட செயன்முறை மூலம் விரிவாக கற்பிக்கப்படும்
- 2014 A/L எழுதிய மாணவர்களிற்கு தனிப்பட்ட ரீதியில் கற்கைநெறி ஒழுங்குசெய்யப்படு

Week days: 11.05.2015 | 14.05.2015
Week ends: 10.05.2015 | 16.05.2015
அனைத்து கற்கைநெறிகளிலும் புதிய பிரிவுகள் ஆரம்பம். தவணை அடிப்படையிலான கட்டணம்

#197, Arasady Road, Jaffna, Sri Lanka | Tel: 021 222 7230 | 021 753 8395
E mail: info@lmcjaffna.edu.lk | Web: www.lmcjaffna.edu.lk

## FRENCH LANGUAGE CENTRE
REGISTERED FRENCH CENTRE

**FRENCH CLASSES**

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட
International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM
செல்வோர் கற்கிறார்கள்.



கடந்த March மாத DELF A1,A2 Exam இல் 100% சித்தியடைந்துள்ளனர். 920 மாணவர்கள் இதுவரை French கற்றுள்ளனர்.

விரிவுரையாளர்:
MR. V. JEGAN (Trained teacher in France-2007, University இல் French விரிவுரையாளர்)

Register now:
0779 789 456 / 021 221 7781

No.48, Palaly Road, Jaffna. | No.181, 1st Floor, Main Street, Nelliady. | சாவகச்சேரியில் விரைவில் எம் கிளை

## வேலை ஆள்கள் தேவை

புத்தக நிலையத்துக்கு பெண், கணினி டைப்பிங் தெரிந்தவர்கள்/பழக விரும்புவோர் பெண்.
ஆரணன் புத்தக சாலை
மருதனார் மடம் சந்தி, 0773467499

## நாய்க்குட்டி விற்பனைக்கு

45 நாள் நிரம்பிய டோமன் இன நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0778445068

## O/L DAY CLASS இங்கு மட்டுமே
## விக்னா

52, ஸ்ரான்லி றோட், யாழ்.

பிரிவு 3
**O/L DAY CLASS**
நாளை (11.05.2015) 8.00 - 2.00 மணி
- 60 மாணவர்களுக்கு மட்டும்
- கடின கட்டுப்பாடுடன் நடத்தும் ஒரே நிறுவனம்
- விடுதி வசதி உண்டு.

077 66 29 137

## நியாயமான கட்டணத்தில் தரம் வாய்ந்த கல்விச் சேவை

Spoken English With Grammar
120 Hours

**Diploma in English**
200 Hours

Benefits of Dip in English
- பல்கலைக்கழக கல்வி, வெளிநாட்டில் உயர்கல்வி, ஏனைய கற்கை நெறிகளினை வினைத்திறனுடன் வெற்றிகரமாக கற்கமுடியும்.
- வேலைவாய்ப்பினை இலகுவாக பெறமுடியும்
- Cambridge English இன் KET, PET, FIRST பரீட்சைகளுக்கு தோற்ற முடியும்
- A1, A2, B1, B2 பரீட்சைகளுக்கு தோற்ற முடியும்.

| New Batches B1: 13-05-2015 at 9am | B3: 16-05-2015 at 2pm |
|---|---|
| Start on B2: 16-05-2015 at 9am | B4: 18-05-2015 at 2pm |

Study IELTS at CIL & Get 6+ Band

**CIL** Cambridge Institute of London
No :17, 3rd Lane, பிள்ளை நிலைய வீதி, யாழ்ப்பாணம்
(புதிய HNB, ராசி சில்க்ஸ் அருகாமையில்)
Tel : 021 2217774, 0777382108


## கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் புதிய கட்டடத் தொகுதியில் தரைத்தளத்தில் உள்ளது. தேவைப்படுபவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 077 3611282

உதயன் விளம்பரத் தொடர்புக்கு–
advt@uthayan.com
0215671111


# மரண அறிவித்தல்



## சோமசுந்தரம் வரதராஜ்

விளானை களபூமி காரைநகரைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் வரதராஜ் கடந்த (03.05.2015) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் வாலாம்பிகை தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான வயித்திலிங்கம் - சுந்தரம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சோதிமலரின் (சோதி) அன்புக் கணவரும், ரம்ஜா, லாவண்ஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பத்மாதேவி, பிரபாநந்தினி, மோகன்ராஜ் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தனலட்சுமி காலஞ்சென்ற கனகம்மா மற்றும் யோகாம்பிகை, காலஞ்சென்ற கனகசிங்கம் மற்றும் அரியமலர் (சோதி மாளிகை), தனபாலசிங்கம் (V.T.S), உருத்திரசிங்கம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற வன்னியசிங்கம் (பிரான்ஸ்) மற்றும் புஸ்பமலர், தர்மகுலசிங்கம் (லண் டன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, முருகேசு மற்றும் நாகரத் தினம், நாகேஸ்வரி, காலஞ்சென்ற சோதிநாதன் (சோதி மாளிகை) மற்றும் ராசாத்தி, தனேஸ்வரி (பிரான்ஸ்), சரஸ்வதிதேவி (பிரான்ஸ்), சந்திரசேகரம் (AVP & விஸ்ணுகரன்ஸ்), வாசுகி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2015) ஞாயிற்றுக்கிழமை Hendon Crematorium Holders Hill Road,Mill Hill,London,NW71NB11 என்னும் விலாசத்தில் பி.ப. 2.45 மணியளவில் நடைபெறும்.

அன்னாரின் துக்க நிகழ்வு வேம்படி காரைநகரில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (10.05.2015) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆலடி , காரைநகர்.
07777 33358, 0775811192

தகவல்:
வை. தனபாலசிங்கம் (மைத்துனர் - V.T.S (kandana)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.05.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.